

மலைகளை வரைதல்

ஆங்கில நூல்களின் அறிமுகம்

மல்லியப்புசந்தி திலகர்

பாக்யா
பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொரொனா கால அறுவடையாக...

மே முதல் செப்டெம்பர் வரை இலங்கையில் தென்மேற்கு பருவ காலம் எங்கள் ஊரில் அது மழைக்காலம். அந்த பருவ மழை தோற்றத்திற்கு நீண்ட காரணம் உண்டு.

சூரியன் கடகக் கோட்டில் (வட துருவம் சார்ந்து) உச்சம் கொடுக்கும் இந்தப் பருவத்தில் தார் பாலைவனத்தில் ஏற்படும் வளி தாழ முக்கத்தை ஈடுசெய்ய தெற்கே இந்து மா சமுத்திரத்தில் இருந்து வீசும் காற்று அள்ளிச் செல்லும் ஈரப்பதன் நிறைந்த காற்று இலங்கையைக் கடந்து செல்லும்போது எதிர்ப்படும் மலைச்சரிவனால் மேலே உந்தப்பட அங்கே பனிபடு நிலையை அடைந்து மழையாகப் பொழிய, வறண்ட காற்று தார் நோக்கிப் போகும் என்கிறது காலநிலைப் புவியியல்.

மேலே உந்தக் காரணமாகும் மேற்குத் தொடர்ச்சி மலைய டிவாரமே எங்கள் ஊர், நான் மேலே விளித்த பகுதி. இப்ப டித்தான் இலங்கை யின் மேல் - தென் மாகாணங்களை மழை, மே - செப்டெம்பர் மாதங்களில் ஆட்கொள்கிறது. ஆட்சி செய் கிறது.

இந்த பருவங்களையெல்லாம் எள்ளி நகையாடுவதாய் இந்த 2020இல் வந்து சேர்ந்தது கொரொனா பருவம்.

2019 நவம்பர் முதலே சீனாவில் தொடங்கிய கொரொனா கொடிய நோய்க்கு கொவிட் 19 என்று பெயர். அது இலங கைக்கு ஜனவரிக்கே வந்து சேர்ந்தாலும் பாராளுமன்றத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைக்கும் அதிகாரம் கைக்கு வரும் மார்ச் வரை அதனை அவ்வளவாகக் கண்டுகொள்ளவில்லை. எனினும்

அடுத்த பொதுத்தேர்தலுக்கான வேட்பு மனுவை வாங்கிக் கொண்ட 2020 மார்ச் 19க்கு அடுத்த நாள் கொரொனா நாட்டுக் குள்ளே வந்து விட்டதாகக் கூறி, ஊரடங்குச் சட்டம் என நாட்டை முடக்கினர்கள். அதுவே உலகடங்கு நாட்களாயும் மாறியது.

எல்லாம் வழமைக்கு மாறானதாக மாறியது. குளித்து விட்டு வெளியே போன நாம் வெளியே போய்வந்தால் குளிக்க நேர்ந்தது. கழுவி உடுத்தி வெளியே போன நாம் வெளியே போய் வந்த உடையைக் கழுவிய பின்னரே உள்ளே வந்தோம். முகத்தை மலர்ச்சியாகக் காட்ட 'க்றீம்' போட்ட நாம் முகத்துக்கு 'மாஸ்க்' போட்டு மறைத்துக் கொண் டோம்.

வீட்டை விட்டு வெளியே வேலைக்கு போன நாம் வீட்டில் இருந்தே வேலை செய்ய வேண்டும் என பணிக்கப்பட்டோம்.

இப்படி எல்லாமே தலைகீழாக எல்லோரும் அகப்பட்ட கொரொனா எனக்கு இரண்டு வகை. ஒன்று கொவிட் 19. இரண்டாவது தேர்தல் 2020.

2015 முதல் 2020 மார்ச் 2 வரை மேற்குத்தொடர்ச்சி மலை அமைந்த நுவரெலிய மாவட்ட நாடாளுமன்ற உறுப்பின ராக இருந்த நான் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதால் பதவி ஏதுமின்றி தொழில் ஏதுமின்றி இருந்தேன்.

மார்ச்19 வேட்பு மனு சமர்ப்பித்த நாளில் இருந்து போட்டி யிடும் வேட்பாளராகவும் இல்லாது தேர்தலிலும் எனக்கு வேலை இல்லை என்று ஆனேன்.

இந்த அரசியல் கொரொனாவை எதிர்கொண்டவனாக ஐந்து வருடங்களாக குடும்பம், குழந்தை குட்டிகளுடன் நேரம் ஒதுக் காது இருந்த எனக்கு கொரொனா முடக்கம் ஆரம்பத்தில் இனிமையாகவே இருந்தது. குழந்தைகளோடு படம் வரைதல், படம் பார்த்தல் (Photos) திரைப்படம் பார்த்தல், செஸ் விளை யாடுதல், வீட்டுத்தோட்டம் செய்தல், விளையாடுதல் என அது ஆரம்பித்தாலும் அப்படியே தொடரவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி மார்ச் 20 முதல் ஏப்ரல் 20 வரை ஒருமாதம் கடந்த பின்னர் வாசிக்க முயற்சித்தேன். அறை முழுதும் புத்தகங்கள் நிறைந்து கிடந்தாலும் அதனை வாசிக்க மனதுக்கு ஒப்ப வில்லை. நான் விபரம் அறிந்த நாள் முதல் வழியில்லாமல் சாப்பிடாமல் கூட வாழ்ந்து இருக்கிறேன். ஆனால் வாசிக் காமல் வாழ்ந்ததாக நினைவில் இல்லை. ஆனால் இந்த நாட் களில் வாசிக்க முடியவில்லை. தெளிவத்தை ஜோசப் அய்யா வின் 'மாறுதல்கள்' நாவல் எமது பாக்யா - கனடா தாய்வீடு இணைந்து வெளியிட தீர்மானித்து முன்னாய்வு வாசிப்புக் காக மேசையில் கிடந்த போதும் வாசிக்க ஒப்பவில்லை.

"இது என்ன கொடுமை"

என என்னை நானே திட்டிக்கொண்டு எங்கள் ஞானகுரு தெளிவத்தையாருக்கே அழைப்பு எடுத்தேன்.

"அய்யா வாசிக்க கூட முடியலையே என்ன செய்ய லாம்"

"எனக்குந்தான்... என்னத்த வாசிக்கிறது.? என் கை.. என் விரலு. அதுல என் கண்ணையும் மூக்கையும் தொடாதங் கிறாங்கே. அப்புறம் என்னத்தை வாசிக்கிறது"

கொரொனா முடக்கத்தில் முதன் முறையாக வாய்விட்டுச் சிரித்தேன்.

மனப்பாரம் குறைந்தது.

வாசிக்கும் ஆர்வம் வந்தது ஆங்கிலத்தில்.

கொரொனா செய்திகளையே வழங்கிக் கொண்டிருந்த ஊடகங்கள் அப்போதுதான் முடங்கியிருந்த வழமையான பணிகளை ஆரம்பிக்கத் தொடங்கியிருந்தன.

வீரகேசரி தினசரி பத்திரிகையின் பொறுப்பாசிரியராக இருந்த நண்பர ஸ்ரீ கஜன் அழைப்பில் வந்தார்.

"அண்ணன் இப்போ டெய்லி, வீக்லி இரண்டுக்கும் என்னையே பொறுப்பாக போட்டு இருக்காங்கள். வாரம் ஒரு கட்டுரை எழுதுங்கள். அரசியல் இலக்கியம் இரண்டும்" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போ எழுத வேண்டியது ஒன்று அல்ல இரண்டு கட்டுரைகள்; ஒரு வாரத்தில்

அரசியலும் அரசியல் கட்டுரையும் அவ்வப்போது எழுந்து அமர்ந் தாலும் இடைவிடது வீசும் இலக்கியச் சாரலில்,

'காலம் உனக்கொரு பாட்டெழுதும்' என ஆரம்பித்து 'ஒரு கட்டியக்காரனின் பேரிகை' வரை மே முதல் செப் டெம்பர் வரை 'கொரோனா பருவ' காலத்தில் எழுதிய ஆங்கில நூல்களின் அறிமுகக் கட்டுரைகளே இங்கே...

கொரொனா கால அறுவடையாக...

மலைகளை வரைதலாக..!

மல்லியப்புசந்தி திலகர்

204-1/D, மயிலகம்,
எவரிவத்தை வீதி,
வத்தளை. 14/09/2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் உனக்கொரு பாட்டெழுதும்
TIME will write A SONG for you
Contemporary Tamil writing from Sri Lanka

1

சமகால இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகள்

'பாண்டிச்சேரி பிரெஞ்சு நிறுவகம்' எனும் அமைப்பு இலங்கையின் சமகால தமிழ் படைப்பாளர்களின் ஆக்கங்களைக் கொண்ட ஒரு தொகுப்பு நூலை ஆங்கில மொழியில் இந்தியாவின் 'பென்குயின் பதிப்பக' வெளியீடாக கொணர்ந்துள்ளது.

French Institute of Pondicherry (பாண்டிச்சேரி பிரெஞ்சு நிறுவகம்) எனும் நிறுவனத்துக்காக எம். கண்ணன், ரெபேக்கா விடனிங்டன், டேவிட் சி. பக், டி.செந்தில்பாபு ஆகிய நால்வரினால் மொழிபெயர்க்கப்பட்டும் தொகுக்கப் பட்டும் உள்ளது.

காயப்பட்ட தீவொன்றின் ஆத்மார்த்தமான எண்ணங்களின் அரிய வெளிப் பாடுகளின் தொகுப்பு என தொகுப்பாளர்களின் பின்னட்டைக் குறிப்புக்கு தலைப்பிடப்பட்டுள்ளது.

அந்த தலைப்பின் கீழ் இவ்வாறு குறிப்பிடப் படுகிறது.

"இந்தத் தொகுப்பில் வரும் கவிதைகள், கதைகள் மற்றும் நினைவுப் பதிவுகள் இலங்கையிலும் அதற்கு வெளியிலும் வாழும் இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் விம்பங்களாக உள்ளன. யுத்தம் நிறைந்த அண்மைய தசாப்தங்களிலான படைப்புகளின் அகன்ற வரம்பிலான பார்வை கொண்ட தான படைப்புகள் முதன்முறையாக திறனான முறையில் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன என்று கூறலாம்...

கவித்துவமானதும் அப்பட்டமானதுமான வடித்தெடுக்கப்பட்ட நினை வுகள், வரலாறுகள், புராணங்கள் மற்றும் மரபு சார் இலக்கிய வடிவங்களாக தமிழர்களின் பயங்களையும் துக்கங்களையும் உரத்து எதிரொலிப்பனவாக உள்ளன. அவர்களது நாளைய ஏக்கங்களையும் எதிர்பார்ப்புகளையும் கூட அவை பதிவு செய்கின்றன. இளைஞர்கள் கொல்லப்படுவது சம்பந்தமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்பல்கள், கட்டாய காணாமலாக்கப்படுதல்கள், வீடுவாசல்கள் வழிபாட்டுத் தலங்களின் இழப்புகள், தொடர்ச்சியான இடப்பெயர்வுகள் அதனால் அகதிகளாதல், இரக்கம் காட்டும் பெண்கள், உதவும் மக்கள்...

அழகிய காடுகளினதும் கடலினதும் நினைவலைகள் என தமிழ்ச் சூழலில் நடந்தவற்றை ஒலிக்கும் பலதரப்பட்ட புதிய குரல்களின் வண்ணத் தொகுப்பாக இது வந்துள்ளது."

268 பக்கங்களைக் கொண்ட இந்த நூலின் தலைப்பு 'Time will Write A song for you - Contemporary Tamil writing from Sri Lanka' 'காலம் உனக்கொரு பாட்டெழுதும்' - சமகால இலங்கைத் தமிழ் எழுத்துகள் என்ற உப தலைப்புடன் ஆங்கிலத்துக்கு மொழிபெயர்க்கப்பட்டு தொகுக்கப் பட்டுள்ளது.

இங்கு 'Tamil Writing from Sri Lanka' 'இலங்கையின் தமிழ் எழுத்துகள்' என்ற உபதலைப்பு ஏன் ஈழத்தின் தமிழ் எழுத்துக்கள் எனக் குறிப்பிடப்பட்டிருக்கக் கூடாது என நூலுக்கான அறிமுகக் குறிப்பில் விவாதிக்கப்படுகிறது.

இது பற்றிக் கூறுகையில் இலங்கையின் தமிழர்களின் பல்வகைத் தன்மை குறித்தும் குறிப்பாக கடந்த ஒன்றரை நூற்றாண்டுகளாக அவர்களின் வேர்கள், விலாசங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

புவியியல் அமைப்பு சார்ந்து (பொதுவாக இந்தியாவின் குறிப்பாக தமிழ் நாட்டின்) ஆசியாவின் கண்ணீர் சொட்டாக தெரிகிற இலங்கை, பலம் பொருந்திய இந்தியா, சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளின் விளையாட்டுத் திடலாகவும் உள்ளது.

இலங்கையின் மொத்த சனத்தொகையில் சுமார் 18 சதவீதமாக உள்ள தமிழர்களின் பரம்பல் பெரும்பாலும் வடக்கு கிழக்கு பிரதேசமாக அமையும் அதேவேளை மத்திய மலைநாட்டு பகுதியிலுமாக அமைந் துள்ளது. மத்திய மலைநாட்டுப் பகுதியில் வாழும் தமிழர்களின் பெரும்பங்கினர் பிரித்தானிய ஆட்சி காலத்தில் பெருந்தோட்டங்களில் வேலை செய்வதற்காக ஒப்பந்தத் தொழிலாளர்களாக அழைத்துவரப்பட்டவர்கள். இவர்களுக்கும் பூர்வீகமாக இலங்கைத் தீவில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கும் துல்லியமான வேறு பாடுகள் உள்ளன என பலதரப்பட்ட வேறுபாட்டு குணாம்சங்களும் தொகுக் கப்பட்டுள்ள படைப்புகளைக் கொண்டே அறிமுகக் குறிப்பில் ஆராயப்பட் டுள்ளது.

அதில் தமிழ் பேசும் முஸ்லிம்கள், கிறித்தவ தமிழர்கள், இந்துக்கள் என மதங்கள் சார்ந்தும், பிரதேச வாரியாக பேசும் மொழி சார்ந்த வேறுபாடுகளும் கூட பிரஸ்தாபிக்கப்படுகிறது. அத்துடன் மகாகவியின் 'தேரும் திங்களும்' (The temple car and the moon) எனும் கவிதையை முன்னிறுத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதிய வேறுபாடுகள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளது. அதில் இலங்கை இந்திய சூழிலில் நிலவும் சாதிய ஒற்றுமை வேற்றுமைகளும் உள்ளடங்கு கிறது. இலங்கைத் தமிழர்களிடையே பிரதேச வேறுபாடுகளுடன் கூடிய சாதிய வேறுபாட்டு பிரிவினைகள் நிலவும் போதும் கூட மலைநாட்டுத் தமிழர் களை தங்களைவிட சாதியில் குறைந்தவர்களாக பொத்தாம் பொதுவாக நோக்கும் பண்பு இலங்கைத் தமிழரிடத்தில் நிலவுவதாகவும் கூறப்பட் டுள்ளது.

அத்துடன் பெரும்பான்மை சிறுபான்மை மக்களின் முரண்பாட்டு கார ணங்களில் ஒன்றாக பௌத்த ஆதிக்கவாதம் குறித்தும் அறிமுக உரையில் விவாதிக்கப்படுகின்றது. இத்தகைய நீண்ட அறிமுக குறிப்பானது 22 பக்கங் களைக் கொண்ட ஆழமான ஆய்வாக அமைந்திருப்பது சிறப்பம் சமாகும்.

அதேநேரம் தமிழ் மொழியில் அமைந்த மூலப் படைப்புகளை ஆங்கிலத் துக்கு மொழிமாற்றம் செய்யும்போது ஏற்படக்கூடிய சிக்கல்கள் குறித்தும் பேசப்பட்டுள்ளது. தமிழ் படைப்பாளர்களின் கற்பனை ஒழுங்கையும், கிளைபிரிதல்களையும் அதன் தொடர்ச்சிகளையும் குறிப்பாக கவிதை களை ஆங்கிலத்தில் அதே வடிவில் கொண்டுவருவது சிக்கலானது. (குறிப்பாக கவிதைகளை மொழிபெயர்ப்புச் செய்ய முடியாது . அங்கு மொழியாக்கமே இடம்பெறுதல் வேண்டும் - சக்தீ அ. பால ஐயா - 'இலங்கைத் தேயிலைத் தேட்டத்திலே' தமிழாக்கம்) சிறுகதைகளில் வரும் நீண்ட வசனங்களை மொழி பெயர்ப்பதிலும் இந்த சிக்கல் வந்துள்ளதாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இடையிடையே வரும் 'வட்டார வழக்குச் சொற்கள்', 'சிங்களச் சொற்களை' ஆங்கிலத்துக்கு மொழி பெயர்ப்பு செய்வதில் உள்ள சிக்கலும் புரிந்துகொள்ளப்பட வேண்டியுள்ளது. (அவை அடிக்குறிப்புகளா கவும் குறிக்கப்பட்டுள்ளது)

இந்த மொழிபெயர்ப்பு / மொழியாக்கம் மற்றும் தொகுப்புச் செயற்பாட்டில் இரண்டு தமிழர்களும் இரண்டு தமிழர் அல்லாதவர்களும் இணைந்தே இந்த நூலைத் தந்துள்ளனர். அவர்களது கூற்றுப்படி மொழிபெயர்ப்பு என்பது ஒரு கற்றல் கலை, வாசித்தல் கலை, எழுதும் கலை. உண்மையி லேயே வாசித்துக், கற்று புதிய மொழியில் எழுதும் சக்திமிக்கதே மொழி பெயர்ப்பு. இதனால் குறைகள் இருப்பின் அதனோடே அந்தப் பணியில் திருப்தியடைவும் வேண்டி யுள்ளது என குறிப்பிடப்படுகின்றது.

தேரும் திங்களும்' எனும் கவிதை 'Temple car and the moon' என மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இது 'Chariot and the moon' என்றிருந்தால் எப்படி இருக்கும் என்பது எமது மனதில் தோன்றுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் இந்த நூலை வாசிக்கும்போது மூல ஆக்கத்தை தமிழில் வாசித்தவர்களுக்கு அத்தகைய மொழிபெயர்ப்பு குறைபாடுகள் தெரியலாமேயன்றி நேரடியாக ஆங்கிலத்தில் வாசிப்பவருக்கு அந்தக் குறைபாடு நேராதவகையிலான நேர்த்தியான மொழிபெயர்ப்பு என உத்தரவாதமளிக்கலாம். மொழிபெயர்ப்பாளர்களை மனதார பாராட்டலாம். பதிப்பாளர்களுக்கும் வெளியீட்டாளர்களுக்கும் நன்றி பகிரலாம்.

இந்தத் தொகுப்பில் வரும் படைப்பாளர்கள் மற்றும் படைப்புகள் பற்றி தெரிந்துகொள்வது இன்னும் சுவாரஷ்யமிக்கது. மொத்தமான 68 ஆக்கங்களில் ஏறக்குறைய 60 கவிதைகளாகவே உள்ளடங்குகின்றன. ஏனையவை சிறு கதைகளும் நினைவுப் பதிகைகளுமாக உள்ளன.

இத்தொகுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள 41 இலங்கைத் தமிழ் படைப்பாளிகள் பற்றிய சிறு அறிமுக குறிப்பு பின்னிணைப்பாக சேர்க்கப்பட்டுள்ளது. அதில் அவர்கள் பிறந்த ஆண்டும் அவர்களின் பிரதேசமும் குறிப்பிடப்பட்டிருப்பது சிறப்பம்சமாகும்,

மகாகவி (யாழ்ப்பாணம்), டொமினிக் ஜீவா (யாழ்ப்பாணம் - கொழும்பு), மு. தளைசிங்கம் (யாழ்ப்பாணம்), நீலாவணன் (மட்டக்களப்பு) மு. பொன்னம்பலம் (யாழ்ப்பாணம் - கொழும்பு), எம். ஏ.நுஹ்மான் (கல்முனை) அ. யேசுராசா (யாழ்ப்பாணம்), எஸ். சிவசேகரம் (யாழ்ப்பாணம்), வ. ஐ. ச. ஜெயபாலன் (யாழ்ப்பாணம் - நோர்வே), சண்முகம் சிவலிங்கம் (பாண்டிருப்பு - கிழக்கு), பிரமிள் (திருகோணமலை), சிவரமணி (யாழ்ப்பாணம்), சு.வில்வரத்தினம் (யாழ்ப்பாணம்), எஸ். ரஞ்சகுமார் (யாழ்ப்பாணம் - அவுஸ்திரேலியா) அஷ்வாகோஸ் (யாழ்ப்பாணம்), இளவாலை விஜேந்திரன் (நுவரெலியா- நோர்வே), பா. அகிலன் (யாழ்ப்பாணம்), மலரவன் (யாழ்ப்பாணம்), சேரன் (யாழ்ப்பாணம் - கனடா), மாலிகா புதுவை ரத்தினதுரை (யாழ்ப்பாணம்), மஜீத் (அக்கறைப்பற்று), முரளீஸ்வரன் (யாழ்ப்பாணம்), போஸ் நிஹாலே (கிளிநொச்சி), றஷ்மி (அக்கறைப்பற்று), செல்வம் அருளானந்தம் (யாழ்ப்பாணம் - கனடா), அருந்ததி (யாழ்ப்பாணம் - பிரான்ஸ்), நிலாந்தன் (யாழ்ப்பாணம்), குமார மூர்த்தி (யாழ்ப்பாணம்), இரவி அருணாச்சலம் (யாழ்ப்பாணம்), கருணாகரன் (இயக்கச்சி), கௌரிபாலன் (திருகோணமலை), இளைய அப்துல்லா (முல்லைத்தீவு - லண்டன்), எஸ். வினோதினி (யாழ்ப்பாணம் - அமெரிக்கா), பஹீமா ஜஹான் (குருநாகல்), எஸ். செழியன் (யாழ்ப்பாணம் - கனடா), மலர்ச்செல்வன் (மட்டக்களப்பு), தீபச்செல்வன் (கிளிநொச்சி), த. அகிலன் (கிளிநொச்சி- கனடா), கி. பி. அரவிந்தன் (யாழ்ப்பாணம்), நா. சத்யபாலன் (யாழ்ப்பாணம்), மல்லியப்புசந்தி திலகர் (நுவரெலியா-மலையகம்).

இந்தப் பட்டியலில் இறுதியாக வரும் மல்லியப்புசந்தி திலகர், இடையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் இளவாலை விஜேந்திரன் ஆகிய இருவரும் நுவரெலியா என குறிப்பிடப்பட்ட போதும் இளவாலை விஜேந்திரன் பிறந்த இடம் நுவரெலி யாவே தவிர அவர் யாழ்ப்பாணத்தவர் என்பது அவரது பெயரிலேயே தெளிவாகிறது. அவரது 'நிறமற்றுப்போன கனவுகள்' கவிதைத் தொகு தியில் அந்த விபரங்களை அறியலாம். இப்போது நோர்வேயில் வசிக்கிறார்.

மல்லியப்புசந்தி திலகரின் (கட்டுரையாளர்) நினைவுப்பதிகை ஆக்கம் வன்னி, யாழ்ப்பாண வாழ்வையும் இணைத்தது என்றவகையிலேயே இந்த தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. தனியே மலையக வாழ்வியலை மட்டும் பிரதிபலிக்கும் படைப்பாக இருந்திருந்தால் இங்கே இடம்பெற்றிருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் இந்த தொகுப்பு போரின் வலிகளைப் பேசுவ தாகவே பின்னட்டைக் குறிப்பில் கூறப்படுகிறது. எது எவ்வாறாயினும் நூலுக் கான நீண்ட அறிமுகக் குறிப்பில் மலையகத் தமிழர் பற்றிய ஒப்பீட்டாய்வை உள்ளடக்கமாகக் கொள்ள மல்லியப்புசந்தி திலகரின் ஆக்கம் வழியமைத் துள்ளது எனலாம். இந்தியாவில் வெளியிடப்பட்டிருக்கும் நூல் என்ற வகையில் இந்திய வம்சாவளி மலையகத் தமிழ் மக்கள் பற்றிய அறிமுகப் பதிவு முக்கியம் பெறுகிறது.

இந்த தொகுப்புக்கான தலைப்பாக அமைந்திருப்பது ரஞ்சகுமாரின் சிறுகதைத் தலைப்பான 'காலம் உனக்கொரு பாட்டெழுதும்' எனும் அழகிய தலைப்பு.

இந்திய ரூபாயில் 299/- எனக் குறிப்பிடப்பட்டிருக்கு நூல் E-book வடிவில் கிடைக்கும் என பின்னட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த கொரொனா காலத்தில் நாளாந்த தினசரிகளின் வாசிப்பே E வடிவம் பெற்றுவிட்ட நிலையில் நாற்பது இலங்கை தமிழ் எழுத்தாளர்களின் எழுத்துக்களை ஆங்கில மொழியில் வாசிக்க ஆர்வம் உள்ளவர்கள் நாடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஆபிரிக்க-ஆசிய கவிதைகள்'

அழகிய கவிதைகளின் தொகுப்பாக

AFRO-ASIAN POEMS

Anthology (Vol -1 -Part 1)

2

ஆபிரிக்க - ஆசிய எழுத்தாளர்களின் ஒன்றியம் எனும் பெயரில் 60களில் ஓர் அமைப்பு இயங்கி வந்துள்ளது. இந்த அமைப்பு இன்றும் இயக்கம் பெறுகின்றதா என்பது பற்றிய பதிவுகள் ஏதும் இல்லை. 1963 ஆண்டு மே முதலாம் திகதி எழுதப்பட்ட முன்னுரை ஒன்றுடன் 'ஆபிரிக்க - ஆசிய கவிதைகள்' எனும் ஆங்கில கவிதை நூல் ஒன்று இலங்கையில் வெளி வந்துள்ளது. அப்போது ரத்ன தேசப்பிரிய சேனாநாயக்கா என்பவர் அந்த அமைப்பின் செயலாளர் நாயக மாக செயற்பட்டுள்ளார். அவரது முன்னு ரையில் பின்வருமாறு குறிப்பிடப் படுவதனை அவதா னிக்கலாம்.

"ஆசிய - ஆபிரிக்க கலாசார பிரதிபலிப்புகளைச் செய்யும் எழுத்துக்களை கலைகளை முன்னிறுத்தும் அடிப்படை நோக்கத்திலேயே இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. அதன் முதல் வெளியீடாக இந்த கவிதைத் தொகுதி வெளியிடப்படுகின்றது. கவிதையே இலக்கியத்தின் மிகப்பிரசித்தமான கிளை யாகிறது. ஆசிய - ஆபிரிக்க கண்டம் மாத்திரம் அல்ல முழு உலகமுமே கவிதை மீதான காதலை வெளிப்படுத்தி வருகின்றது எனலாம். இந்தத் தொகுதி முற்றுமுழுதாக கவிதைகளைக் கொண்டே தொகுக்கப்படுகிறது.

"கவிதை, சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள் என வெவ்வேறு தொகுதி களை வெளியிடும் எண்ணம் எங்களிடம் உள்ளது. இரண்டாம் பாகத்தில் இதில் உள்ளடங்காத நாடுகளின் எழுத்துக்களையும் உள்ளடக்க நினைக் கிறோம். இந்த புத்தகத்தை தொகுக்க முன்னர் 23 உறுப்பு நாடுகளின் நிறை வேற்றுக் குழு உறுப்பினர்களிடமும் ஆக்கங்களை அனுப்ப கோரி இருந் தோம். இந்தத் தொகுதியில் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள கவிதைகள் ஆசிய - ஆபிரிக்க நாடுகளில் ஏகாதிபத்தியத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிரான வீர போராட்டங்கள் மற்றும் அங்கு புதிய வாழ்வை கட்டமைப்பதற் கான சமகால முயற்சிகளையும் பதிவு செய்வதாக அமையப்பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் தொகுப்பு ஆசிய - ஆபிரிக்க கவிஞர்கள் பற்றிய ஓர் அறிமுகத்தை வாசகர்களுக்கு வழங்க முனைவதோடு ஏகாதிபத்தியத்துக்கு எதிரான அவர்களது பொதுமைப்பாட்டையும் வெளிப்படுத்துவதாக உள்ளது. ஆசிய - ஆபிரிக்க நாடுகளில் மக்களது கலாசாரங்களில் நிலவிய மனிதாபிமான பெறுமானங்கள் நூற்றாண்டுகால ஏகாதிபத்தியவாதிகளால் அடக்கு முறைக்குட்படுத்தப்பட்டு, கொள்ளையடிக்கப்பட்டு நஞ்சூட்டப்பட்டது.

ஆசிய - ஆபிரிக்க நாட்டு மக்களாகிய நாம் எமக்கேயுரிய முற்போக்கு கலாச்சாரங்களை மேம்படுத்துவதோடு எமது புரட்சிக்கான போராட்டத் தையும் பிரதிபலிக்க செய்ய வேண்டும்.

இரண்டு கண்டங்களினதும் கலாச்சாரங்களை முன்னோக்கி பலப் படுத்த, சக்திமயப்படுத்த உலகளாவிய ரீதியில் ஒன்றிணைவோம். அடக்கு முறைகளுக்கும், சுரண்டலுக்கும் எதிராக ஒன்றிணைந்து ஒவ்வொரு மனித னுமாக புதிய உலகை உருவாக்குவோம். ஏகாதிபத்தியத்தில் இருந்தும் காலனித்துவத்துவத்தில் இருந்தும் விடுதலைபெற்ற உலக சமாதானத்தை உருவாக்குவோம். ஆபிரிக்க - ஆசிய தேசங்கள் நட்பைப் பேணிப் பராமரிப் போம்" என செயலாளர் நாயகம் ரத்ன தேசப்பரிய சேனாநாயக்கா எழுதியுள்ள இந்த முன்னுரை குறிப்பின் சாரம் அந்த காலப்பகுதியின் அரசியலை அதற்கான தேவைப்பாட்டை அழுத்தம் திருத்தமாக முன்வைத்துள்ளதனை அவதானிக்கலாம்.

இந்த எழுத்தின் வீச்சு பின்னாளில் இலங்கை போன்ற நாடுகளின் யதார்த்த அரசியலில் பிரதிபலிக்காமை, மறைமுகமாக அத்தகைய ஏகாதி பத்திய நாடுகளிடம் அடிமைத்தனமாக செயற்படத் தொடங்கியமை இற்றை வரையான அரசியல் முன்னெடுப்புகளின் சாபக்கேடுகளாகியுள்ளது.

இனி இந்தத் தொகுப்பில் உள்ள கவிஞர்களையும் அவர்களது நாடு களின் பட்டியலையும் பார்க்கலாம். ஆங்கில அகர வரிசைப்படி தொகுக்கப் பட்டுள்ள நாடுகள் பின்வருமாறு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

சிலோன்	- 11 பக்கங்கள் - 6 கவிதைகள்
சீனா	- 38 பக்கங்கள் - 9 கவிதைகள்
கொங்கோ	- 04 பக்கங்கள் - 2 கவிதைகள்
இந்தியா	- 04 பக்கங்கள் - 2 கவிதைகள்
இந்தோனேசியா	- 29 பக்கங்கள் - 12 கவிதைகள்
கொரியா	- 12 பக்கங்கள - 5 கவிதைகள்
சூடான்	- 09 பக்கங்கள் - 6 கவிதைகள்
டங்கான்யிக்கா	- 06 பக்கங்கள் - 4 கவிதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கிய சோஷலிச சோவியத் ரஷ்யா - 14 பக்கங்கள - 7 கவிதைகள்
வியட்நாம் - 17 பக்கங்கள் - 16 கவிதைகள்

என மொத்தமாக 170 பக்கங்களைக் கொண்டதாக இந்த நூல் தொகுக்கப் பட்டுள்ளது. மொத்தமாக 69 கவிதைகளும் தொகுக்கப்பட்டுள்ளன.

முன்னுரையில் கூறப்பட்டவாறு காலனித்துவத்துக்கு பின்னான (Post Colonial) தேச மீட்பு முயற்சிகளாக கவிதைகளின் தலைப்புகள் பெரும் பாலும் அமைந்தி ருப்பதனையும் அவதானிக்கலாம்.

சுதந்திரத்தின் பிரார்த்தனை - இலங்கை
காத்திருப்பு - சீனா
எமது மக்களின் வெற்றியாகலாம் - கொங்கோ
லுமும்பாவுக்கு மரியாதை - இந்தியா

(பெற்றீஸ் லுமும்பா என்பவர் கொங்கோ நாட்டு கவிஞர். இவரது கவிதையான 'எமது மக்களின் வெற்றியாகலாம்' எனும் கவிதை இந்த தொகுப்பில் உள்ளது. இந்திய கவிஞர். ஷாஹிர் லுதியான்வி உருது மொழியில் எழுதியுள்ள கவிதையை கே. ஏ. அப்பாஸ் ஆங்கிலத்தில் தந்துள்ளார்)

சிறையிலிருந்து விடுதலை - இந்தோனேசியா
கரிபியக் கடலில் சூரியோதயம் - கொரியா
வெற்றி எங்களுக்கே சொந்தம் - சூடான்
புரட்சி தென்னாபிரிக்கா - டங்கானியிக்கா
எனது சோவியத் கடவுச்சீட்டு - சோவியத் ரஷ்யா
என் கிராமத்தின் ஆறு - வியட்நாம்

போன்ற கவிதைத் தலைப்புகளை உதாரணமாக காட்டலாம்.

ரஷ்ய கவிஞர் விலாதிமிர் மயாகொவ்ஸ்கி எழுதியுள்ள 'எனது சோவியத் கடவுச்சீட்டு' அற்புதம். கிர்கிஸ் குடாஜி எனும் கவிஞர் எழுதியுள்ள 'மலை வெள்ளாடு' (The Mountain Goat) எனும் கவிதை, எனக்கு (கட்டுரையாளர்) கிரிகிஸ்தான் நாட்டு மலைப்பிரதேசமான 'சொன்கோல்' பகுதியில் மலைவாழ் மக்களோடு ஒருநாள் வாழ்ந்த நாளை நினைவூட்டுகிறது. கிரிகிஸ் என கவிஞரின் பெயர் தொடங்குவது அவர் கிரிகிஸ்தான் தேசத்த வராக இருக்கலாம் என ஊகம் கொள்ளச் செய்கிறது. கிரிகிஸ்தான் முன்பு சோவியத் கூட்டரசில் இருந்து அதன் உடைவுக்குப் பின்னர் தனியான குடியரசாக உள்ளது.

வியட்நாம் கவிதைகளில் அந்த தேசத்தின் சிற்பியான ஹோ சிமின் அவர்களுடைய சில கவிதைகள் சேர்ப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இரவில் வெளியேறல', 'உறங்கா இரவுகள்', 'நிலவொளி', 'மாலைக்காட்சி', 'வெளிச்சத்தின் விடுதலை' போன்றன ஹோசிமின் கவிதைகளின் தலைப் புகளாக அமைந்துள்ளன. ஹோ சிமின் வாழ்க்கை வரலாற்றை அறிந்த வர்கள் அவரது கவிதைத் தலைப்புகளின் அர்த்தங்களை இலகுவாகப் புரிந்து கொள்பவர்.

இலங்கையின் ஆறு கவிஞர்களின் கவிதைகள் இந்தத் தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. சங்கைக்குரிய மகிந்த தேரர் (சுதந்திரத்தின் பிரார்த் தனை), ஜே.பி. விக்கிரமரத்ன் (சிங்கள இளைஞர்களே விழித் தெழுங்கள்), ஈவா ரணவீர (அவர்களை கீழிறக்குவோம்), சங்கைக்குரிய சார்ள்ஸ் வில்லியம் டி சில்வா (ஓர் மனு), சாகர பலன்சூரிய (கிராமத்து அழகு), சி. வி. வேலுப்பிள்ளை (தேயிலை ஆய்பவர்கள்).

ஆறு இலங்கைக் கவிஞர்களில் ஒருவராக மக்கள் கவிமணி சி. வி. வேலுப் பிள்ளை இடம்பெற்றிருப்பதும் அவர் எழுதிய கவிதை, தேயிலைத் தொழி லில் ஈடுபட்டுள்ளவர்களைப் பற்றி அமைவதும் இந்த ஆபிரிக்க - ஆசிய கவிஞர் பட்டாளத்தில் ஒருவராகவும் 'மலையகத்தை' முன்னிறுத்துபவ ராகவும் சி. வி. வேலுப்பிள்ளை இருந்துள்ளார் என்பதற்கான எடுத்துக்காட்டு.

வெண்கல தோள்கொண்ட
என் தோழர்களின்
விடிகாலை வெளிச்சத்தின் ஒலிகளவை ...

உச்சிமலை சிகரத்திலும்
உள்ளே பள்ளத்தாக்கின் வெளிகளிலும்
மலைச் - சரிவுகளிலும்
எதிரொலி வீழ்ந்து எழும்
மண்வெட்டி, முள்ளு, பிக்காசு
கடப்பாரைகள் எழுப்பும் அதன் தாளத்திற்கே !

முள்ளுக்குத்துக்காரர்களும்
கவ்வாத்துக்காரர்களும்
மீனாப்புல்லெடுப்பவரும்
விரைந்து நாசினி தெளிப்பவரும்
தெளிந்த அறிவு பெற்றவர்தாம்
தங்கள் தங்கள் கடமையிலே!
களத்தில் அவர்கள் இறங்கையிலே
கலையும் தேனீக் கூடுகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துளிகளாய் சொட்டும் தேனதுவே
கலக்கும் அவர்தம் கை வேர்வைத் துளிகளுடன்

நாளொன்றின் எட்டு மணி நேரமுமாய் - ஏழு
நாளும் ஒரு வாரத்திலே - அவர்களின்
வாழ்க்கை ரத்தம் ஓடுவது
அந்த நிலத்தை அழகாய் ஆக்கிடவே !
யாருக்கோ சொர்க்கம் ஆகிடவே !

(தமிழாக்கம் - மல்லியப்புசந்தி திலகர்)

என்ற சி.வி.வேலுப்பிள்ளையின் கவிவரிகள் இந்த ஆபிரிக்க- ஆசிய கவிதையிடை அழகு சேர்ப்பன. மலையக வாழ்வை சொல்வன. இந்த கவிதை நூலின் ஏனைய எல்லா கவிதைகளையும் தமிழாக்கம் செய்து வெளியிடுவது தமிழ் வாசகர்களுக்கு நல்ல கவிதை அனுபவத்தை வழங்கும். ஆர்வமுள்ளவர்கள் அந்த பங்களிப்பை வழங்கலாம்.

வெளியீடு : ஆபிரிக்க - ஆசிய எழுத்தாளர் ஒன்றியம்
73, காசல் வீதி,
கொழும்பு 8,
இலங்கை.

1963 மே 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 தேயிலையும் தோழமையும்

TEA & SOLIDARITY
TAMIL WOMEN & WORK IN POSTWAR SRI LANKA

மைத்திரி ஜெகதீசனின் நூலை முன்னிறுத்திய ஒரு பார்வை

இலங்கை வம்சாவளி வம்சாவளி அமெரிக்கரான மைத்திரி ஜெகதீசன் ஒரு புலமைத்துவ ஆளுமை. இளம் வயதிலேயே கலாநிதி பட்டம் பெற்றுள்ள இவர் தனது கலாநிதி பட்டத்திற்கான ஆய்வாக முன்னெடுத்த 'போருக்குப்பின்னான தமிழ்ப் பெண்களும் தொழிலும்' எனும் ஆய்வுப் பொருளை நூலாக்கி 'தேயிலையும் தோழமையும்' (Tea & Solidarity) எனும் தலைப்பில் நூலாக்கியுள்ளார். 260 பக்கங்களைக் கொண்ட ஆங்கில ஆய்வு நூலின் அட்டைப் படமே ஓர் அரசியலைப் பேசுகிறது.

இந்த அட்டைப் படத்தில் இலங்கையின் பாரம்பரிய வரலாற்று ஓவியமாகப் போற்றப்படும் சீகிரிய ஓவியப்பெண் கொழுந்து கூடை சுமக்கிறாள்! கையில் ஈரிலையும் ஓர் துளிரும் கொண்ட ஒரு தேயிலைக் கொழுந்தையும் சுமக்கிறாள். வயிற்றிலே ஒரு குழந்தையையும் சுமக் கிறாள்!

இந்த ஓவியத்தை அமைத்தவர் ஹட்டனைச் சேர்ந்த ஹனுசா சோம சுந்தரம். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கலைப்பிரிவில் தன்னுடைய இறுதியாண்டு பரீட்சை தேவை கருதி தனது ஊரில் பாவிக்கப்பட்ட தேயிசை சாய பைகளைக் கொண்டு உருவாக்கிய இந்த கலைப் படைப்பின் மூலம் கொழுந்து பறிக்கும் பெண்களையும் பிரசித்தமான சீகரியா ஓவிய பெண் களையும் ஒன்றாக ஒப்பிடுவதாக கூறுகிறார். உயிரற்ற ஓவியமாக உள்ள இந்த சீகிரியா பெண்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்படு கிறது? ஆனால், தங்களுடைய உயிரை துச்சமாக மதித்து கொழுந்து பறிக்கும் இரத்தமும் சதையுமாக உள்ள பெண்கள் ஒதுக்கப்படுகிறார்கள் என்று எழுதுகிறார்.

"அம்மா நாலரை மணிக்கு வேலையை முடித்துக் கொண்டு லயனுக்கு வரும் போது ரொம்ப களைச்சுப்போய் இருப்பாங்க... இருந்தாலும் திரும்பவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புள்ளக் காம்பிறால இருந்து லயனுக்கு எங்களை ஒவ்வொருத்தரா தூக்கிட்டு போவாங்க... அதுக்கப்புறமா. பாட்டிகூட இரவுச் சாப்பாட்டுக்கு கூட மாட ஒத்தாசை செய்வாங்க... எங்களுக்கு சாப்பாடு ஊட்டி குளிப்பாட்டி எங்களை படுக்க போட்டுடுவாங்க... அம்மா எப்படித்தான் இந்த மலைப்பாங்கான சறுக்கும் தேயிலைத் தோட்டத்தில் இருபது கிலோ தேயிலைக் கூடை யையும் வயித்தில இரண்டு புள்ளைகளையும் சுமந்துகொண்டு வேலை செய்தாங்களோ என்ற நினைப்பு நான் லயத்தில் பிள்ளையை சுமக்கும் போதுதான் தோணிச்சு"

"கொழுந்து பறிக்கிற தொழிலாளிகள் மற்றும் அவங்களோட பிள்ளைக ளோட கறைபடிந்த வாழ்க்கையை கோடிட்டு காட்டும் விதமாக கலைப் படைப்புகளை செய்துவருகிறேன். இப்போ இந்த கொழுந்து பறிக்கிற தேயிலை தோட்டப் பெண் தொழிலாளிகளோட இன்னுமொரு விஷயமான கர்ப்பிணி தோட்டத் தொழிலாளிக்கு முக்கியத்துவம் கொடுக்கிறேன்" என்கிறார் கலைஞர் ஹனுசா சோமசந்தரம். (நினைவுக்காப்பகம் பக்கம் 146)

சுதந்திர இலங்கையின் 70 ஆண்டுகால நினைவுப்பெட்டகமாக வெளி வந்திருக்கும் 'நினைவுக் காப்பகம்' நூலில் இடம்பெற்றிருக்கும் இந்த கலை ஓவியம் மைத்திரி ஜெகதீசனின் 'தேயிலையும் தோழமையும்' நூலின் அடடைப்படமாக அழகு சேர்க்கிறது.

இந்த நூலை எனக்கு (கட்டுரையாளர்) கையளித்தபோது நூலாசிரியர் மைத்திரி ஜெகதீசன் இந்த ஓவியத்தைத் தனது நூலுக்கான அட்டைப் படமாக தெரிவு செய்ய அதனை அமைப்பதற்காக ஹனுசா சோமசுந்தரம் கொண்டி ருந்த பின்னணி தன்னை ஈர்த்தனாலேயே அதனைத் தெரிவு செய்ததாக கூறினார்.

இலங்கையின் தைத்த ஆடைக் கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ள பெண்கள் பற்றிய Juki Girls, Good Girls எனும் நூலை எழுதியுள்ள கெயிட்ரின் லின்ச் இந்த நூல் குறித்து கூறுகையில்:

"தீவிர களப்பணி, அவசியமான கதைகள், ஆதாரம் சார் ஆய்வுப் பணி என்பவற்றோடு பன்முகப்பக்கத்தில் சமகால தேயிலைப் பெருந்தோட்ட தொழிலாளர்களின் சமூகப் பொருளாதார நிலைகளை மைத்திரி ஜெகதீசன் வெளிப்படுத்தியுள்ளார்" எனக் குறிக்கிறார்.

'பொன் அலை' எனும் தலைப்பில் சுனாமிப் பேரிடருக்குப் பின்னான இலங்கையின் அரசியல் நிலைவரங்களை எழுதியள்ள மைக்கல் கம்பர்ட் கூறுகையில்:

"இலங்கை மலையகத் தேயிலைத் தோட்டங்களில் வாழும் பெரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலான சந்தர்ப்பங்களில் உழைக்கும் பெண்களின் வாழ்வில் அங்குள்ள கலாசார விழுமியங்கள் தொழில் சட்டங்கள் எவ்வாறு அவர்களை அதிகார மற்றவர்களாக்குகிறது என்பதை இந்த நூல் அழுத்தமாகப் பதிவு செய் வதாக குறிக்கின்றார்.

'இடர்மிகு உடலும் இயந்திரத்தின் நெருக்கமும' எனும் தலைப்பில் ஊடக, விஞ்ஞான, நிதித்துறைசார் பாலியல் பிரதிபலிப்புகளைப் பதிவு செய்துள்ள நூலின் ஆசிரியர் கீத்தா பட்டேல் கூறுகையில்:

"வன்முறைகளின் கொடுமை, கொடுரம், அதிகாரம் போன்றவற்றை அழகிய முறையில் வெளிப்படுத்தும் தேயிலையும் தோழமையும் நூல் வாசிக்கப்படவேண்டியது. மைத்திரி ஜெகதீசனின் அசாத்தியமான திறமை களின் ஊடோக இந்த நூல் பல விடயங்களை வெளிக்கொண்டு வருகிறது எனக்குறிப்பிடுகிறார்.

ஐக்கிய அமெரிக்காவின் சென்டா- கிளாரா பல்கலைக்கழகத்தில் உதவி பேராசிரியையாக பணியாற்றும் மைத்திரி ஜெகதீசன் இலங்கைத் தமிழர் பரம்பரையில் அமெரிக்காவில் பிறந்து வளர்ந்தவர் என்றபோதிலும் அழகிய தமிழில் உரையாடுபவர். மலையகத்தின் பல பிரதேசங்களுக்கும் பயணித்து பலரைச் சந்தித்து கலந்துரையாடி களப்பணியாற்றி இந்த ஆய்வினை தனது கலாநிதி ஆய்வுக்காக தொடர்ந்திருப்பதோடு அதனை நூலாக வெளிக்கொண்டுவந்ததன் மூலம் பல்கலைக்கழக அலுமாரிகளுக்குள் மாத்திரம் அல்லாது அன்றாடம் கொழுந்தெடுக்கும் மலையகப் பெண்களின் வாழ்வியலை வேறு ஒரு தளத்தில் வாசிப்பதற்கான வாய்ப்பை உருவாக்கி யுள்ளார்.

தனது உணர்வின் உச்சத்தில் இந்த மக்களைப் பற்றிய ஆய்வை தான் செய்திருப்பதன் குறியீடாக இலங்கைத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு மாத்திரம் அல்லாது தனது தாய் தந்தையருக்கும் இணைத்தே இந்த நூலை சமர்ப்பணம் செய்துள்ளார்.

அத்துடன் தனது ஆய்வுக்கும் நூல் உருவாக்கத்துக்கும் பங்களிப்பு செய்தவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் அவரது முன்குறிப்பு ஒன்று மூன்று பக்கத்தில் பல பெயர்களைத் தாங்கி வந்திருக்கிறது. அதில் அவர் குறிப் பிடும் அத்தனைப் பெயர்களையும் அவர் நினைவில் வைத்து நன்றி கூறியிருப்பது அவரது ஆழமான நன்றியுணர்வின் வெளிப்பாடு எனலாம்.

மனிதர்களைச் சந்திப்பதும் அதனை நினைவில் வைத்திருப்பதும் அவர்களில் ஒருவருக்கொருவர் நன்றியுடையவர்களாக இருப்பதும் மானுட வியலுக்கு மட்டுமல்ல மனிதப்பண்பு. அந்த வகையில் நான் (கட்டுரை யாளர்) ஐக்கிய அமெரிக்காவின் கொலம்பிய பல்கலைக்கழகத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெற்ற சமூகவியல் சார் உரையாடல் களம் ஒன்றில் கலந்துகொண்டி ருந்தபோது என்னை இலங்கையின்- மலையகத்தவன்- தமிழன் என அறிமுகப்படுத்திக்கொண்டேன். அதனைக் கேட்ட அங்கிருந்த ஒரு அமெரிக்கர், தான் இலங்கை யாழ்ப்பாண தமிழர்களின் வாழ்க்கை குறித்து களப்பணி ஆய்வு செய்வதற்கு இலங்கை வந்திருப்பதாக தெரிவித்து நட்பு கொண்டார். கொஞ்சம் தமிழிலும் பேசினார்.

அவரது உரையாடல் அவரது களத்தெரிவுகள் எனக்குள் ஏதோ ஒரு நினைவைக் கிளறிவிட எப்போதோ வீரகேசரியில் வாசித்த நேர்காணல் ஒன்றில் மலையகத்தைச் சேரந்த ஒருவர் அமெரிக்காவில் பேராசிரியராக பணியாற்றுவதை ஞாபகமூட்டி அவரது பெயரையும் கூட உச்சரித்து கேட்டேன். அந்த அமெரிக்கர் அவர்தான் எங்கள் பேராசிரியர் வாருங்கள் சந்திப்போம் என உடனே அவரது அலுவலக அறைக்கு அழைத்துப்பேனார். அந்த அனுபவம் புதுமையானது.

ஐக்கிய அமெரிக்காவின் கொலம்பிய பல்கலைக்கழகத்தில் மானுட வியல்துறை பேராசிரியராக அவர் பணியாற்றிய காலத்தில் (2015) அவரை அவரது அலுவலகத்திலேயே சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. நாவலப்பிட்டி கதிரேசன் வித்தியாலயத்தில் பயின்று பின்னாளில் அமெரிக்கா சென்று, கற்று, அங்கேயே பேராசிரியராகவும் பணியாற்றிய வெலன்டைன் டேனியல் என்பவரே அந்த மலையகத் தமிழர். இவர் பல தமிழர், தமிழரல்லாத தனது மாணவர்களின் கள ஆய்வுத்தளமாக இலங்கையைத் தெரிவு செய்ய காரணமாக இருந்துள்ளார். அப்படியானவர்களுள் டேனியல் பாஸ் முக்கிய மானவர். இன்றுவரை அவர் மலையகம் குறித்த பல ஆய்வுக்கட்டுரை களுக்கு பங்களிப்பு செய்து வருபவர். அவர்போல பல வெளிநாட்டவர்கள் இலங்கை, மலையகம் குறித்த ஆய்வுகளை மேற்கொள்வது இந்த மக்கள் பற்றிய தகவல்களும் சர்வதேச தளத்தை சென்று சேர்க்க வழி அமைக்கும்.

எனது நண்பரான ஜப்பானிய பேராசிரியர் கவாசிமா கொஜி என்பவ ரையும் அவரது இலங்கையில் சாதியம் பற்றிய கலாநிதி பட்டத்திற்கான ஆய்வுகளையும் கூட இங்கே நினைவுபடுத்துவது பொருந்தும். இந்த வரிசையிலேயே கலாநிதி மைத்திரி ஜெகதீசனின் இந்த ஆய்வு நூலையும் நோக்குவது முக்கியத்துவம் மிக்கது.

ஒரு சமூகம் குறித்த பார்வையை அதே சமூகத்தில் இருந்து ஒருவர் பார்த்து ஆய்வுக்கு உட்படுத்துவது என்பதும், அந்த சமூகம் சாரா ஒருவர் ஆய்வுக்கு உட்படுத்துவது என்பதும் வேறுபட்ட பார்வையை தரவல்லது. இது அகநிலை - புறநிலை ஆய்வுப் பார்வையாக அமையும். அதேநேரம் அந்த புறநிலை ஆய்வில் அறம் அதிகம் வேண்டப்படும். அந்த அறத்தினை கலாநிதி ஜெகதீசனின் ஆய்வில் அவதானிக்க முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மானுடவியல் ஆய்வான இந்த நூலை ஆரம்பிக்கும் முன்னுரையே ஒரு யதார்த்தமான காட்சிப் படிமத்துடன் ஆரம்பிப்பது ஒரு நாவலை வாசிக்கும் பிரமையை வாசகனுக்குள் ஏற்படுத்துகிறது.

"வெள்ளவத்தை தனியார் வைத்தியாசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த எனது உறவினர் ஒருவரை பார்க்க சென்றிருந்தவேளை அங்கே தொலைக் காட்சி திரையில் நாடகம் ஓடிக்கொண்டிருந்ததது. அப்போது, 'தற்போது கிடைத்த செய்தி' என்ற பரபரப்புடன் இரத்தமும் சதையுமான காட்சிகளுடன் மக்களும் படைகளும் என அந்த செய்தி வாசிக்கப்பட்டுக் கொண்டிருந்தது" என 2009 மே 19ம் திகதி காட்சியை விபரிக்கும் அந்த முன்னுரையே வாசகரை நூலுக்குள் இழுத்துச் செல்லும் வாஞ்சையைப் பெறுகிறது.

இப்படி ஏராளமான கதைகளையும் காட்சிகளையும் கதை மாந்தர்க ளையும் புனைவுகள் இன்றி சித்திரித்துச் செல்லும் மைத்திரி ஜெகதீசனின் 'தேயிலையும் தோழமையும்' எனும் இந்த நூல் தமிழுக்கு மொழி பெயர்க் கப்பட வேண்டியது அவசியமாகும். ஆவர்முள்ளவர்கள் முயற்சிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சிகளின் மூலம் சாட்சி பகிரும்

தி இந்தோ - லங்கன்ஸ்

The Indo-Lankans

Their 200 - year saga

4

படத்தொகுப்பு நூல் (பாகம் 1)

இன்றைய இலங்கையின் அனைத்து மக்களுமே இந்திய வம்சாவளி யினரே. அவர்கள் இந்தியாவின் கிழக்கு, மேற்கு கடற்கரைகளில் இருந்து காலத்திற்கு காலம் குடியேறியவர்களின் வம்சாவளியினரே. அந்த வரலாறு 2500 வருடங்களையும் கடந்தது. ஆனாலும் 1796 ஆண்டுக்குப் பின்னான பிரித்தானிய காலனித்துவத்துக்குப் பின்வந்த இற்றைவரையான 200 ஆண்டுகளுக்கு உட்பட்ட காலத்தில் இலங்கையை வந்தடைந்த மக்கள் அண்மைய இந்திய வம்சாவளி மக்கள் (Recent Indian origin of Sri Lanka) என்ற வகைக்குள் வந்து விடுகின்றனர். அவர்களே வேறு வகையில் People of Indian Origin of Sri Lanka என்றும் இன்றும் இலங்கையில் அழைக்கப் படுகின்றனர். ஏனையோர் அந்த இந்திய அடையாளத்துடன் பார்க்கப் படுவது இல்லை.

அத்தகைய இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களின் வரலாற்றை காட்சி படிமங்களின் சாட்சியாக அமையப் பெற்றுள்ள நிழற்படங்களின் தொகுப்பு நூல் 'தி இந்தோ லங்கன்ஸ் - தெயார் 200 யியர் சகா (The Indo-Lankans - Thier 200 years Saga)

இலங்கை வாழ் அண்மைய இந்திய வம்சாவளி மக்களின் 200 வருட கால சகாப்தம் பற்றிய ஒரு படத்தொகுப்பு ஆவணமாக அமையப் பெற்றுள்ளது இந்த நூல் 310 பக்கங்களைக் கொண்ட, அழகிய கறுப்பு வெள்ளை வர்ணப் புகைப்படங்களின் தொகுப்பாக அந்தப் படங்கள் சுட்டும் விடயதானங்களையும் (Caption) சுருக்கமாக பதிவு செய்வதன் ஊடாக, 1796க்குப் பின்னான இலங்கை - இந்திய வம்சாவளியினரின் வாழ்வியல் கோலங்களை நிழற்படங்களின் தொகுப்பாக காட்சிப்படுத்தல்களை ஒன்று சேர்ப்பதன் ஊடாக அந்த மக்களின் பல்பரிமாணப் பக்கங்களை எடுத்துக் காட்டும் முயற்சியே இது.

இலங்கைவாழ் இந்திய வம்சாவளி மக்களின் இரத்தமும் வியர்வையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோய்ந்த வரலாற்றை அவர்கள் எதிர்கொண்ட இடர்களை மட்டுமல்லாது அவர்களது அடைவுகளையும் தொகுத்து தரும் முயற்சியாகவும் இது அமைகிறது.

Coffee table book என்ற வகை தொகுப்பான இந்த நூல் சாதாரணமாக கிடைக்கப்பெறாத ஒன்று. 'பெரிய வீடுகளின் வரவேற்பறைகளில்' 'போட்டோ அல்பம்' போன்று வைத்து, வரும் விருந்தினர்கள் பார்வைக்கு வைக்கப்படக் கூடியதே இந்த Coffee Table Book புத்தக வகையறாக்களாகும். குறைந்தபட்சம் பொது நூலகங்களில், கண்காட்சி கூடங்களில் கலாசாலை களில், பல்கலைக்கழகங்களில் இத்தகைய நூல்கள் வெளிப்படையாக காட்சிப்படுத்தப்படுவது, அந்த நூல் தாங்கி நிற்கும் உள்ளடக்கத்தை பிரயோ சனமாக்கும். ஒரு சமூகம் சார்ந்த வரலாற்று ஆவணம் என்ற வகையில் அதன் அடுத்தகட்ட ஆய்வுத் தேவைகளுக்கு அவை பயன் உடையதாகும்.

இந்த நூலில் சேர்க்கப்பட்டுள்ள படங்கள் மிகமிக அரிதானவை, அருமை யானவை. தனிப்படவர்களினதும் பொது அமைப்புகளினதும் சேகரிப்பு களில் இருந்து தேடி எடுத்துத் தொகுக்கப்பட்டுள்ள படங்கள், வரலாற்றுக் கதைகள், நினைவுகள் அற்புதமானவை. இந்த நூலின் ஒவ்வொரு பக்கமும் பால்க் நீரிணையைக் கடந்து இலங்கை நோக்கிப் பயணித்த, வந்து சேரந்தவர்களின் வரலாற்றைச் சுட்டி நிற்கிறது. இந்திய வம்சாவளியினரின் பல்வேறு பரிமாணங்களைக் காட்டுகிறது.

இன்று இலங்கையர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள இந்த மக்கள் கூட்டத்தின் சொல்லப்படாத பல கதைகளின் படத்தொகுப்பாக இது அமைகிறது.

1790களின் பின்னர் இலங்கையில் உருப்பெற்ற பெருந்தோட்டப் பொரு ளாதாரம் அதனை அமைப்பதற்காக அழைத்துவரப்பட்ட நாட் கூலிகள், பெருந் தெருக்களை, புகையிரத பாதைகளை அமைப்பதற்காக அழைத்து வரப்பட்ட பாட்டாளி வர்க்கத்தினர், துறைமுகத் தொழிலாளர்கள் என உழைப் பாளர் மக்கள் வரலாறு படமாகப் பதிவுப் பெற்றுள்ளது.

அதேபோல ஆரம்ப நாட்களில் வந்த வணிகர்கள், அரசாங்க உத்தி யோகத்தர்கள், தொழில்வாண்மையாளர்கள், தொழில் முயற்சியாளர்கள், கலைஞர்கள், விளையாட்டு வீரர்கள், மதசெயற்பாட்டாளர்கள் மற்றும் அரசியல் தொழிற்சங்கத் தலைவர்கள் மக்கள் பிரதிநிதிகள் என பல்வேறு தரப்பினரது வாழ்வியல் கோலங்கள் இங்கே காட்சிகளாக விரிகின்றன.

இந்திய வம்சாவளி தமிழர்கள் மட்டுமல்லாது இஸ்லாமியர்கள், இந்துக்கள், கிறித்தவர்கள் இன்னும் வேறு மதத்வர்களினதும் இனத்தவர் களினதும் படங்களோடு கல்விமான்களின் படங்களும் தொகுப்புக்குள் அ[illegible]கு கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்துறை ஆளுமையாளரான ஊடகவியலாளர் (அமரர்) எஸ். முத்தையா அவர்களே இந்தத் தொகுப்பின் பொறுப்பாசிரியர். அவரது ஊடக, அச்சுத்துறை அனுபவங்கள் இந்த நூலை அழகுற தொகுப்பதில் அதிக பங்களிப்புச் செய்துள்ளது.

1913ல் இலங்கை வந்த இந்திய வம்சாவளியினரான எம். சுப்பையா ஆனந்தா கல்லூரியில் கல்வி கற்றுள்ளார். இவர் கொழும்பு நகர பிரதி மேயராக பதவி வகித்ததோடு இலங்கை இந்திய காங்கிரசின் ஸ்தாபகத் தலைவரும் ஆவார். அத்துடன் இலங்கை சுதந்திரமடைந்த காலப்பகுதி அரசியல் தலைவர்களுடன் நெருக்கமான தொடர்புகளையும் கொண்டு இருந்துள்ளார்.

இவரது மகனான எஸ். முத்தையா இலங்கை, இந்தியா, ஐக்கிய அமெரிக்க நாடுகளில் பொறியியல், ஊடகவியல், ஆங்கிலம், சர்வதேச விவகாரம் எனும் பல்துறை கல்விப் பின்புலங்களுடன் இலங்கை திரும்பி 1951 ஆம் ஆண்டு Times of Ceylon பத்திரிகையில் வெளிநாட்டு செய்திப் பிரிவின் பொறுப்பாசிரியராக பதவி ஏற்கிறார். அதனடுத்து 14 ஆண்டுகள் Times of Ceylon மற்றும் The Sunday Times பத்திரிகைகளில் சமகாலத்தில் விவரணத் தொகுப்பாசிரியராகவும் பொறுப்பாசிரியராகவும் செயற்பட்டுள் ளார். விளையாட்டுத்துறை சார்ந்த செய்திகளை தொகுப்பதிலும் பங்க ளிப்புச் செய்துள்ளார். எனினும் இலங்கை குடியுரிமைக்கு விண்ணப் பிக்காத அவர் 1968 ஆம் ஆண்டு மீண்டும் இந்தியா செல்கிறார். 1990ல் தான் ஓய்வை அறிவிக்கும் வரை அச்சு மற்றும் வெளியீட்டுத்துறையில் பணியாற்றிய அவர் சுற்றுலாத்துறை சார்ந்த வெளியீடுகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவராக இருந்துள்ளார். இதே சமகாலத்தில் Madras Musings எனும் இதழிலும் 'த ஹிந்து' பத்திரிகையில் நகர்சார் மரபுரிமை குறித்த பத்தி எழுத்துக்களை எழுதி உள்ளார்.

1981ஆம் ஆண்டுமுதல் எழுதியுள்ள முத்தையா 17 புத்தகங்களில் சுமார் 6 புத்தகங்கள் சென்னை பற்றியவை. தென்னிந்திய தோட்டத் துரைமார்கள் பற்றியதும், சென்னை சேப்பாக்கம் கிரிக்கட் கழகம் போன்ற நூல்கள் பிரபலமானவை. எஸ்.எஸ். பெரேராவுடன் இணைந்து இலங்கை கிரிக்கட் பற்றி 'ஜனசக்தி' நூலைத் தொகுப்பதிலும் பங்களிப்பு செய்துள் ளார். இவரது பணிகளுக்கு பெருமை சேர்க்கும் வகையில் 2002 ஆம் ஆண்டு பிரித்தானிய அரசாங்கத்தால் MBE விருதும் இவருக்கு வழங்கப் பட்டுள்ளது.

இத்தகைய ஊடக, அச்சு, தொழில்வாண்மை புலமைத்துவம் மிக்க எஸ். முத்தையா தொகுத்து அளித்திருக்கும் இந்த 'தி இந்தோ- லங்கன்ஸ்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படத்தொகுப்பு நூலை 'இந்திய மரபுரிமை மன்றம்' 2003 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டு உள்ளது. அதற்கான அணுசரணையை கணபதிச் செட்டி செல்வநாதன் நிதியம் வழங்கி உள்ளது.

வைத்துக்கொள்வதற்கு வாய்ப்பு குறைவு எனினும் ஒருமுறையேனும் வாசிக்க வேண்டிய குறிப்புகளையும் பார்க்கவேண்டிய பல படங்களையும் கொண்ட தொகுப்பு இந்த நூல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5

படம் சொல்லும் கதை :

தி இந்தோ - லங்கன்ஸ்

The Indo-Lankans

Their 200 - year saga

200 ஆண்டுகால பதிவுகள் (பாகம் 2)

இலங்கை வாழ் அண்மைய இந்தியவம்சாவளி மக்களின் வரலாற்றை அவர்களது வாழ்வியல் கோலங்களைக் காட்டும் 'தி இந்தோ - லங்கன்ஸ்' எனும் நூல் தொடர்பாக இலக்கியச்சாரல் பகுதியில் கடந்த வாரம் எழுதிய கட்டுரையின் தொடர்ச்சியாகவே இந்த வார கட்டுரைப் பகுதியும் அமைகிறது.

பன்முக ஆளுமை எஸ். முத்தையா தனது ஆய்வுக் குழுவினருடன் இணைந்து தொகுத்து இருக்கும் படங்களும் குறிப்புகளும் மிகமிகப் பெறுமதி மிக்கவை. இந்த நூலின் முக்கியத்துவம் குறித்து அப்போதைய இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிரூபமா ராவ், அவருக்கு முன்னதாக இலங்கைக்கான இந்திய தூதுவராக பணியாற்றிய கோபாலகிருஷ்ண காந்தி ஆகிய இருவரும் குறிப்புகளை எழுதி உள்ளனர்.

"இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினரின் இதுவரை கைவிடப்பட்டிருந்த அடைவுகள் இந்த நூலில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது" என அப்போதைய உயர்ஸ்தாணிகர் நிரூபமா ராவ் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு மக்கள் கதை என்பதற்கு அப்பால் ஒரு சகாப்த காலகட்டத்தின் விவரணமாக உள்நாட்டவர்களினதும், மன்னார் கடலினூடான அவர்களது பாரம்பரிய பூமிப் பிரதேசத்திக்குமான காட்சிப்படுத்தலாக இந்த நூல் அமைவதாக வாழ்த்துகிறார் முன்னாள் இந்திய உயர்ஸ்தாணிகர் கோபால கிருஷ்ண காந்தி.

நூலாசிரியர் எஸ்.முத்தையா தனது நன்றி பகிர்தலில் நூல் தொகுப்புக்கு அனுசரணை வழங்கிய இந்திய மரபுரிமை மன்றத்தின் மனோ செல்வ நாதன், எம். இராதாகிருஷ்ணன் ஆகியோரையும் கொழும்பு தளத்தில் தனக்கு ஆய்வாளர்களாக உதவிய லலினி கௌதமதாச, இராமையா சடகோபன், முரளி ஜயதேவா, T. திருலிங்கநாதன், இ. விஜயலக்ஷ்மி ஆகியோருக்கும் இலங்கை, இந்திய, லண்டன் தலங்களில் இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு தகவல்களைத் தந்து உதவி பலரது பெயர்களையும் நினைவு கூர்கின்றார்.

பண்டைய காலத்தில் இந்தியாவில் இருந்து இலங்கை வந்தவர்கள் வரிசையில் விஜயன் மன்னன், புத்த பெருமான் படங்களுடன் ஆரம்பிக்கும் புத்தகம் அண்மைய இந்திய வம்சாவளி மக்களாக இலங்கை வந்த தொழிலாளர் வர்க்கத்தினர், வணிகர்கள், தொழில்வாண்மையினர், நடிகர்கள், கலைஞர்கள், தொழில் முயற்சியாளர்கள், மதச் செயற்பாட்டாளர்கள், தலைவர்கள் என வெவ்வேறு அத்தியாயங்களாக தலைப்பிடப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளனர். வணிக நோக்கங்களுக்காக வந்த பரதாஸ், நாட்டுக் கோட்டை செட்டியார்கள், தென்னிந்திய சோனகர்கள், பார்சிஸ், போராஸ், மேமன், குஜராத்தி, சிந்தி, மலையாளிகள் என வேறுபட்ட இந்திய சமூகங்கள் தொடர்பான பதிவுகள் படங்களாக பதிவு பெறுகின்றன.

இப்போது சிங்களவர்களான இலங்கையர்கள் போன்று அறியப்படுகின்ற பலர் இந்திய (அண்மைய) வம்சாவளியினர் எனும் அரிய தகவல்களை இந்த நூல் தருகிறது.

அதே நேரம் சேர்க்கப்பட்டுள்ள படங்கள் சிலவும் அதன் கீழான குறிப்புகளும். ஓர் அனுமானமாக இருப்பதுவும் அதனை வாசிக்கும்போது உணரக் கூடியதாக உள்ளது. தலைவர்கள் எனும் அத்தியாயத்தின் கீழ் நூலின் 293ம் பக்கத்தில் சேர்க்கப்பட்டுள்ள படம் கே.ஜி.எஸ். நாயர், சி.வி.வேலுப்பிள்ளை, டி. ராமானுஜம், வி.கே.வெள்ளையன் ஆகியோர் 1940களில் சர்வதேச தொழிற் சங்க மாநாட்டுக்காக வெளிநாடு ஒன்றுக்கு செல்லும்போது மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டு இருப்பதையும் அவர்களுடன் அப்போதைய தலைவர்களான எஸ்.தொண்டமான், கே.ராஜலிங்கம் ஆகியோர் நிற்பதையும் காட்டுவதாக உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் படத்தில் வி.கே.வெள்ளையன் என குறிப்பிடப்படுவது அவர் இல்லை என்றும் தனது தந்தையான செனட்டர் ஜேசுதாசன் என்றும் அவரது மகள் கலைமதி ஜேசுதாசன் அதே நிகழ்ச்சியின் இன்னுமொரு படத்தைக் கொண்டு சரியான தகவலை வெளிப்படுத்துகின்றார். அமெரிக்காவில் வதியும் கலைமதி ஜேசுதாசன் இந்தக் கட்டுரையாளரிடம் (திலகர்) திருத்தம் வேண்டி அந்த நிழற்படத்தை அனுப்பி இருப்பதுடன் அது 1958ஆம் ஆண்டு ஜப்பான் நாட்டில் இடம்பெற்ற தொழிலாளர் கல்வி மாநாட்டுக்காக தனது தந்தையும் அவர்தம் தோழர்களும் சென்று வந்த நிழற்படம் இது எனவும் தகவல் அனுப்பி உள்ளார். 1965ஆம் ஆண்டு செனட்டர் பதவி ஏற்ற ஜேசுதாசன் இலங்கை தொழிலாளர் காங்கிரசில் தொழில் உறவு அதிகாரியாக இருந்தவர் என்ற வகையில் 1958ஆம் ஆண்டு எனும் தகவலை உறுதி செய்யக்கூடியதாகவும் 1940 எனும் தகவலை மறுதலிக்க கூடியதாகவும் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோன்று 'தொழிலாளர்கள்' எனும் அத்தியாயத்தின் கீழ், கோப்பி கால தொழிலாளர்கள், கடற்றொழில் மற்றும் முத்துக்குளித்தல் தொழில் செய்தவர்கள், பாதைகளை வெட்டியவர்கள் (ஆய்வாளர் மு.நித்தியானந்தன் குறிப்பிடும் மலையக மக்கள் தாமே பாதை வெட்டி அதில் தாமே பயணம் செய்தவர்கள் எனக் கூறுவது இங்கே நினைவு கூரத்தக்கது), பெருந்தெருக்கள் - ரயில்வே பாதை அமைப்பில் ஈடுபட்ட தொழிலாளர்கள், துறைமுகத் தொழிலாளர்கள், கொக்கோ தோட்ட தொழிலாளர்கள் ஆகியோரின் படங்களுடன் பச்சைத் தங்கம் (Green Gold) என்ற தலைப்பின் கீழ் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் படங்கள் கால அடிப்படையில் சேர்க்கப்பட்டுள்ளன.

நூலின் 82வது பக்கத்தில் கங்காணிகள் பற்றிய தகவல்கள் இடம் பெற்றுள்ளன. அந்த வரிசையில் கங்காணியாக அறிமுகமாகும் முதலாவது படம் மறைந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவர் சௌமிய மூர்த்தி தொண்டமானின் தந்தையான குமாரவேல் பற்றியது. இந்த நூலின்படி குமாரவேல் என்பவர் கருப்பையா பிள்ளை என பிரபலமாக அறியப்பட்டார் என்றும் அவரது துணைவியார் பெயர் சித்தம்மையார் என்றும் குறிப்பிடப்படுகிறது. மூன்றாவது படமாக மறைந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஸ்தாபகத் தலைவர் கே. ராஜலிங்கம் அவர்களின் தந்தையான காளிமுத்து கங்காணியின் படம் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்த முதலாவது கங்காணி படத்துக்கும் மூன்றாவது கங்காணி படத்துக்கும் இடையில் இன்னுமொரு கங்காணியின் படமும் அவரது துணைவியார் படமும் சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால் அவர்களது பெயர் குறிப்பிடப்படவில்லை. அவரது துணைவியார் ஆபரணங்களை அணிந்தவராக இருந்துள்ளார் என்ற விபரிப்பு உள்ளது. 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் செயற்பட்ட சில கங்காணிகளினதும் அவர்தம் குடும்பங்களினதும் படங்கள் 83, 84ஆம் பக்கங்களில் விபரிக்கப்படுகின்றது.

பெயர் குறிப்பிடப்படாது இரண்டாம் இடத்தில் பிரசுரமாகி இருக்கும் 'கங்காணி தம்பதிகள் தனது தந்தையின் தகப்பனாரான சவரிமுத்து மைக்கல்பிச்சை கங்காணியும் அவரது துணைவியாரான அன்னம்மாள் பாட்டியும்' என்கிறார், தற்போது கிருலப்பணையில் வதியும் சிங்கராயர். தனது வீட்டில் உள்ள இந்தப்படத்தினை இந்த நூலுக்காக அதன் ஆய்வாளர்களில் ஒருவரான இராமையா சடகோபன் பெற்றுக்கொண்டதாகவும் உறுதி செய்கிறார். அப்படி இருந்தும் தனது தாத்தா - பாட்டியின் பெயர் விபரங்கள் இந்த நூலில் இடம்பெறாமை தமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்துவதாகவும் தெரிவிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கங்காணிகளின் பெயர் விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள இந்த நூலில் சேர்க்கப்பட்டுள்ள போதும் 20ஆம் நூற்றாண்டு கால கங்காணி பட்டியலில் வரும் மைக்கல்பிச்சை கங்காணி தம்பதியரின் பெயர்கள் இடம்பெறாமை ஆச்சரியமானதே. இந்தப் படத்தில் தோன்றுபவர்கள் ஹட்டன் தொப்பித் தோட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுடன், இந்த கட்டுரையாளரின் (திலகர்) துணைவியாரின் தாய்வழி பாட்டனும் (தாய்மாமன்) பாட்டியும் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது. மைக்கல்பிச்சையின் பேரன் சிங்கராயரும் அவரது அத்தை முறையான மைக்கல்பிச்சையின் சகோதரியின் மகள் ஜெபமாலை மேரி ஆகிய இருவரும் தோன்றும் நிழற்படம் இந்த பரம்பரையினரின் தொடர்ச்சியைக் காட்டுகிறது.

84ஆம் பக்கத்தில் குறிப்பிடப்படும் படமும் குறிப்பும் சுவாரஷ்யமானது. பத்தனை- கொத்மலை பக்கத்தில் உள்ள குயின்ஸ்பரி தோட்டத்தில் வசித்த பெண் பெரியாங் கங்காணி பற்றியது. நாகன் பெருமாளம்மாள் எனும் இந்த பெரியாங் கங்காணி 1896 - 1936 காலப்பகுதியில் குயின்ஸ்பரி தோட்டத்தில் பணியாற்றியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. தனது தந்தை நாகன் கங்காணி இறந்ததன் பின்னர், தோட்ட முதலாளியான வெள்ளையர்கள் பெருமாளம் மாளை பெரியாங்கங்காணியாக நியமித்ததாக தகவல் பதிவாகி உள்ளது. ஆங்கிலம், தமிழ் இரண்டு மொழிகளிலும் நன்கு பரிச்சயம் உடையவராக இந்த அம்மையார் திகழ்ந்ததாகவும், இவரே தற்போதும் பிரபலமாகவுள்ள குயின்ஸ்பரி நமநாதர் சித்தர் ஆலயத்தை கட்டுவித்தவர் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது.

அதே பக்கத்தில் நாவலப்பிட்டி பகுதி தோட்டங்களில் பணியாற்றிய வெவ்வேறு மட்ட உத்தியோகத்தர்கள் பெரியாங்கங்காணிகள், உதவி கங்காணிகள் எடுத்துக் கொண்ட அரிதான புகைப்படம் பிரசுரமாகி உள்ளது. இது நாவலப்பிட்டி பிரதேச பெரியாங்கங்காணிகள் சம்மேளனம் அவர்களது பெரிய துணையுடன் அவர்களது ஆண்டுப் பொதுக் கூட்டத்தின்போது 1923 ஆண்டு எடுத்துக் கொண்டுள்ளதாகவும் குறிப்பிடப் பட்டுள்ளது. இத்தகைய படங்களையும் தகவல்களையும் திரட்டுவதில் ஆய்வாளர் சடகோபனின் பங்களிப்பு அளப்பரியதாக இருந்திருக்கும்.

இதுபோன்ற அரிய பல படங்களின் தொகுப்பாக இந்த நூல் அண்மைய இந்திய வம்சாவளியினர் குறித்த ஆய்வாளர்களின் தேவைக்கு அவசிய மானது என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டாரியலில் இருந்து வரும் மானிடவியல் பார்வை :

கருகிய தாலாட்டு

Charred Lullabies

Chapters in an Anthropography of Violence

6

இ. வெலன்டைன் டேனியல் எழுதிய Charred Lullabies நூலை முன்வைத்து ஒரு பார்வை

உலக மாந்தரின் கலை இலக்கிய படைப்புக்களின் ஊற்றுக் கண்களாகி இருப்பது நாட்டாரியல் கலைகளே என்பது பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. மலையகத் தமிழ் இலக்கியத்தின் அடிப்படையாகவும் அவர்களது நாட்டாரியலே அமைந்து அதன் இன்றைய நவீன இலக்கிய வடிவங்களிலும் பிரதிபலித்து நிற்பது சிறப்பு. குறிப்பாக மலையக கவிதை இலக்கியத்தில் மலையக நாட்டார் பாடல்களின் தாக்கம் தெரிவது சிறப்பியல்பாகவே பார்க்கப்படுகிறது. மலையகக் கவிதைகளை இலகுவாக மெட்டமைத்துப் பாடி விடலாம் என்பார் பேராசிரியர் கா.சிவத்தம்பி. இதன் பின்னணியில் அவர் குறித்து நிற்பதே அதன் நாட்டாரியல் தாக்கத்தையேயாகும்.

இத்தகைய மலையக நாட்டாரியல் பாடல்களை ஆய்வு செய்யவும் சேகரித்து பதிவிடவும் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் குறித்து பல உதாரணங்களைக் குறிப்பிடலாம். அந்த முயற்சியில் முதன்மையானவர் மக்கள் கவிமணி சி.வி.வேலுப்பிள்ளை. அவரது 'மாமன் மகளே - மலையக மக்கள் பாட்டு' (கலைஞன் பதிப்பகம்- சென்னை- 1983) எனும் கிடைப்பதற்கு அரிய ஆனால், வாசித்துப் பாதுகாக்க வேண்டிய நூல். அதேபோல எழுத்தாளர் மு.சிவலிங்கமும் தேடித் தொகுத்த 'மலையகத் தமிழ் நாட்டுப்புறப் பாடல்கள்' (2007) நூலும் குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் செ.யோகராசா, இலக்கிய விமர்சகர் லெனின் மதிவானம் உள்ளிட்ட பல இலக்கிய ஆய்வாளர்கள் மலையக நாட்டார் பாடல்கள் குறித்து பல ஆய்வு கட்டுரைகளை எழுதியுள்ளனர்.

நாட்டார் பாடல்களை ஆய்வுக்கு உட்படுத்தி அதன் அர்த்தங்களுக்கு வியாக்கியானம் செய்வதும் அதனை அப்படியே பதிவு செய்து ஆய்வுக்கான மூலமாக தொகுத்துத் தருவதும் வேறுவேறானவை. பெயர் கூறும் கவிஞர் அல்லா மக்கள் பாடல்களை அந்த மக்களைக் கொண்டே பாடச் செய்து எழுதிச் சேகரிப்பது என்பது சவாலான பணி. அத்தகைய சவாலான பணியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகத்தில் நிகழ்த்திக் காட்டியவர் மக்கள் கவிமணி சி.வி.வேலுப் பிள்ளை. இந்தப் பணிக்காகத்தான் பேராசிரியர் க.கைலாசபதி முன்னி லையில் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் அவருக்கு 'மக்கள் கவிமணி' எனும் பட்டம் வழங்கப்பட்டு இருக்கலாம் என்பதே அது வழங்கப்பட்ட காலத்தைக் கொண்டு அனுமானிக்க முடிகிறது. அவர் அந்தப் பாடல்களைத் தொகுத்த விதம் குறித்து அவரது உறவினர் கவிஞர் சி.எஸ்.காந்தி, தொழிற்சங்க களத்தில் உடன் செயற்பட்ட தவசி அய்யாத்துரை (மாத்தளை ரோகிணி) போன்றவர்கள் சுவைபட கூறிய தருணங்கள் பல நினைவுக்கு வருகின்றன. அத்தகைய நாட்டார் பாடல்களை பாடச்சொல்லி இடுப்பை நெளித்து, நெளித்து சி.வி வேலுப்பிள்ளை ஆடுவார் என மாத்தளை ரோகிணி குறிப்பி டுவார். தனது அந்திம காலத்தில் நோய்வாய்ப்பட்டிருந்த காலத்திலும் தன்னைப் பார்க்க வருவோரை மலையக நாட்டார் பாடல்களைப் பாடச் சொல்லி கேட்பாராம் சி.வி.வேலுப்பிள்ளை.

இத்தனைக்கும் சி.வி.வேலுப்பிள்ளை ஆங்கில புலமை கொண்ட ஆங்கில மொழி கவிஞர் என்பது அவதானத்துக்குரியது. அவரது 'விஸ்மாஜினி' ஆங்கி லத்தில் எழுதப்பட்ட கவிதை நாடக நூலாகும். 'இலங்கைத் தேயிலைத் தோட்டத்திலே' நெடுங்கவிதையையும் அவர் ஆங்கிலத்திலேயே எழுதினார். (In Ceylon's Tea Garden - தமிழாக்கம்: சக்தீ பால அய்யா)

இவ்வாறு ஆங்கிலப் புலமையுடன் தனது உயர் கல்வியைத் தொடர்ந்து அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் மானிடவியல் பேராசிரியர் ஆகத் திகழ்ந்தவர் மலையகத்தவரான இ.வெலன்டைன் டேனியல். மலைய கத்தின் நாவலப்பிட்டி பிரதேசத்தில் பிறந்துவளர்ந்த இவர் ஆரம்பக் கல்வியை நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரியிலும், இரண்டாம் நிலைக் கல்வியை யாழ்ப்பாணத்திலும் கற்றதுடன் பட்டப்படிப்புகளை வெளிநாடு களில் முடித்து ஐக்கிய அமெரிக்காவின் பல பல்கலைக்கழகங்களில் பேராசிரியராக கடமையாற்றியுள்ளதுடன் இறுதியாக நிவ்யோர்க் கொலம்பியா பல்கலைக் கழகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.

இவர் மிச்சிக்கன் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய காலத்தில் எழுதிய மானுடவியல் ஆங்கில நூலே இந்த 'கருகிய தாலாட்டு' (Charred Lullabies). (இதனை 'எரியுண்ட குழந்தைப் பாடல்கள்' என்றும் கூட தமிழாக்கம் செய்யலாம்)

இந்த நூலின் தலைப்பை இவ்வாறு அவர் இடுவதற்கு காரணமே மலையக நாட்டார் பாடல்களில் ஆர்வம் கொண்டு அது குறித்த ஆய்வி னைச் செய்வதற்கு அவர் இலங்கைக்கு வரத் திட்டமிட்ட 1982ஆம் ஆண்டும் அவ்வாறு வந்தபோது 1983ஆம் ஆண்டு இலங்கை எரியுண்ட போது தனது இலக்கினை முழுமையாக அடைய முடியாது போனமை என்பதை நூலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிக்கும் போது புரிகிறது. வாசிக்கத் திறந்தால் மூடி வைக்க முடியாத சுவாரஷ்யமான மொழி நடையில் தமிழ் சொற்களை அப்படியே ஆங்கிலத் திலும் எழுதி அழகுசேர்க்கும் அவரது பாணி அலாதியானது. மானிடவிய லாளருக்கே உரிய பல்வகைத் தன்மையை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்கு வத்துடன், தான் பிறந்து வளர்ந்த சமூகத்தை தனது துறைசார்ந்த கண்ணோட் டத்தில் பார்க்க முயலும் ஒரு அறிவுசார் இலக்கிய படைப்பு இந்தநூல்.

அமெரிக்காவின் நியுஜேர்சியிலும், ஐக்கிய ராச்சியத்தின் சஸ்ஸெக்ஸ் பிராந்தியத்திலும் இயங்கும் பிரின்செட்டோன் பல்கலைக்கழக வெளியீடாக 1996ஆம் ஆண்டு வெளிவந்திருக்கும் இந்த நூலின் உபதலைப்பு- வன்முறைகளின் மானிடவியல் அத்தியாயங்கள் என பொருள்படுகிறது (Charred Lullabies - Chapters in an Anthropography of Violence).

அவர் கூறி இருப்பதுபோலவே ஒவ்வொரு அத்தியாயங்களும் இலங்கை யில் இடம்பெற்ற பல்வேறு வன்முறைகளின் பக்கங்களை மானிடவியல் பார்வையில் அணுகியிருப்பதோடு தான் முன்னர் எழுதிய நூல்களின் இற்றைப்படுத்தல்களாக சில அத்தியாயங்களை மீளவும் எழுதி இருப் பதாக (revised version) அறிமுகத்தில் குறிப்பிடுகின்றார். இந்த ஆய்வுகளில் சிங்கள, தமிழ் கடும்போக்குவாதங்கள் பற்றி ஆராய்கிறார்.

நூலின் ஒவ்வொரு அத்தியாயங்களும் இலங்கையின் வெவ்வேறு வன்முறைகள் குறித்தான பார்வையாக அமையும் அதேவேளை மூன்றா வது அத்தியாயம் 'தேயிலைக் கதை' (Tea Talk) என்பதாக மலையகத் தமிழர்கள் மீதான வன்முறைகள் பற்றியதாக உள்ளது. அத்தகைய வன்முறைகளாக அவர் பார்ப்பது நேரடியான பயங்கரவாதத் தாக்குதல் களை மட்டுமல்ல, அந்த மக்களை நசுக்குவதற்காக மேற்கொண்ட அரசியல், சமூக, பொருளாதார, சட்ட ஏற்பாடுகளையும் கூட வன்முறைகளாகவே அடையாளம் காண்கிறார்.

1834ஆம் ஆண்டில் இருந்து படிப்படியாக இந்தியாவின் தென்னக மாவட்டங்களில் இருந்து அழைத்துவரப்பட்ட இந்த மக்கள் ஆரம்பத்தில் தனியே ஆண்களை மட்டுமே அழைத்து வந்ததையும் 1867ஆம் ஆண்டுக் குப் பின்னரே பெண்கள், குழந்தைகளை அழைத்துவர அனுமதிக்கப் பட்டனர் என்கின்றார். பலவகை தானியப் பயிர் உற்பத்தி விவசாய சூழலில் வாழ்ந்த மக்கள் இலங்கையில் முதலாளித்துவ தோட்டப் பொருளாதார முறைமையில் ஒற்றைப் பணப்பயிர் (single cash crop) முறைமைக்குத் தள்ளப் பட்டனர் என்கிறார்.

தங்களது பூர்வீக கிராமங்களில் பெரும்பாலும் தங்களுக்கு தேவையான தானியங்களை தமது சூழலில் வளர்த்துப் பெற்றுக் கொண்ட மக்கள் இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றைப் பணப்பயிர் ஏற்றுமதி தொழில் துறையில் தமது எல்லாத் தேவைக ளுக்கும் தங்கியிருக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டதை விபரிக்கிறார். இந்திய நிலையில் தொழில் ரீதியாக சாதிய மயப்பட்டு இருந்த இந்த மக்கள் எல்லோரும் ஒரே தொழில் செய்ய வேண்டி இருந்ததுடன் ஒரேவிதமான 'லைன்' குடியிருப்பில் வாழவும் நேர்ந்தது. இது சாதிய இறுக்கத்தை தளர்த் தியது மட்டுமல்லாது எல்லோரையும் கடின உழைப்பாளிகளாக்கியது என்கிறார். இதுபோல பல கலாசார மாற்றங்களுக்கு உள்ளாக நேர்ந்தாலும் இந்த மக்கள் தங்களது இந்தியாவுடனான தங்கள் உணர்வை இழந்து விடாதவர்களாகவே உள்ளனர் எனக் குறிப்பிடுகிறார் .

இலங்கையில் தமக்குத் தேவையான சிறு தானியங்களையோ மரக்கறிக ளையோ உற்பத்தி செய்துகொள்ள சிறுதுண்டு நிலமும் மறுக்கப்படவர் களானார்கள் என்பதை வலியுறுத்திக்கூறும் இவர் அதற்கு நிலப்பற்றாக் குறை மட்டும் காரணமல்ல என்றும் முழு நிலத்தையும் இலாப நோக்கில் தேயிலை, கோப்பி உற்பத்தி செய்யவும் அதனைச் செய்வதற்கு வேறு தடங்கல்களை காரணமாகிவிடவும் கூடாது என்பதிலும் முதலாளிகள் கவனமாக இருந்தார்கள் எனவும் அடையாளம் காண்கிறார். தொழிலாளர்க ளுக்குத் தேவையான அரிசி, பருப்பு, தானியங்கள், மா, சீனி, எண்ணை என எல்லாவற்றையும் தோட்ட கம்பனிகளே அமைத்த கூட்டுறவு கடைகள் ஊடாக விநியோகிக்கும் முறைமையை கையாண்டனர். சில கங்காணிகள் உத்தியோகத்தர்கள் மாத்திரமே பால் கறக்கும் பசு மாடுகளை வளர்த்த துடன் தோட்டத் தொழிலாளர்களின் பானமாக கருந்தேயிலைச் சாயமே இருந்தது என்கிறார்.

1972ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கம் தேசியவாத கொள்கைகளின் கீழ் தோட்டங்களை தேசிய உடமையாக்கும்வரை பிரித்தானிய தனியார் கம்பனிகள், சில உள்நாட்டு தனியார் கம்பனிகள் வசமே வைத்திருந்தனர். அப்போது ஒரு ஏக்கருக்கு இரண்டு பதிவு பெற்ற தொழிலாளர்கள் என்ற விகிதத்திலேயே பேணிவந்ததுடன் அதற்கு மேலதிகமாக ஊழியர்கள் தேவைப்படும்போது 'பெயருக்கு இல்லாமல் கைக்காசுக்கு' (தொழிலாளர் களைப் பதிவு செய்யாமல் தற்காலிகமாக அமர்த்துவது) பெற்றுக் கொள்ளும் நடைமுறையைக் கையாண்டுள்ளார்கள். (இப்போதும் அப்படி உள்ளது).

தேயிலைத் தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டதுடன் ஒரு ஏக்கருக்கு ஐந்து தொழிலாளர்கள் என மாற்றம் செய்யப்பட்டது. இந்தத் திட்டத்தின் உள்நோக்கமே இளைய தமிழ் சமூகத்தின் வேலையற்றவர்களாக்கி, அண்மித்த கிராமத்தில் வாழும் சிங்கள சனத்தொகைக்கு வேலை வாய்ப் புகளை வழங்குவதாகும். அத்தோடு கொண்டுவரப்பட்ட காணி உச்சவரம்பு சட்டம் அந்த சிங்கள மக்களின் கீழ் மீள் காலனித்துவத்துக்கு தமிழர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைத் தள்ளியதுடன் அவர்களை வேலையற்ற அகதிகளாக்கி வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வாழ்வுதேடி தள்ளியதுடன் கண்டி, கொழும்பு போன்ற நகரங்களுக்குள் அன்றாடத் தொழிலாளர்களாகவும் ஆக்கியது. என அந்த காலகட்ட சட்ட இயற்றல்களின் உள்நோக்கத்தை தெளிவாக பதிவு செய்கிறார் நூலாசிரியர்.

இன்று நான்கு லட்சம் சிங்கள மக்களை சிறு தோட்ட உடமையாளர்க ளாகவும் ஒரு லட்சம் தமிழர்களை கூலித் தொழிலாளர்களாகவும் கொண்டு இயங்கும் தேயிலைத் தொழில்துறை இவ்வாறுதான் நிலைமாற்றத்துக்கு உள்ளானது. 1972 - 1992 காலப்பகுதியில் அரசாங்கம் இந்த நிகழ்ச்சி நிரலை திட்டமிட்ட அடிப்படையில் செய்ததுடன் இப்போது மீண்டும் தமிழ்த் தொழிலாளர்களை தனியார் கம்பனிகள் வசம் ஒப்பந்த கூலிகளாக்கி வைத் துள்ளது. இந்த நிலைமையை அன்றைய அரச கொள்கை, சட்ட ஏற்பாடு களுடன் மானிடவியல் பார்வையில் நூலாசிரியர் விரிவாக விவரிக்கிறார்.

தோட்டங்களில் முன்னெடுக்கப்படும் கவ்வாத்து, காணு வெட்டுதல், மட்டம் வெட்டுதல், கொழுந்து எடுத்தல் முதலான வேலைகளை அடைப்புக் குறிக்குள் அதே தமிழ்ச் சொற்களுடன் எழுதி ஆங்கிலத்தில் விபரித்து எழுதுகிறார்.

இந்த நூலுருவாக்கப் பின்னணி குறித்து எழுதும் நூலாசிரியர் வெலன் டைன் டேனியல், 1983இல் தனது இலங்கைப் பயணத்துக்கான நோக்கமாக இருந்ததே அங்கே தோட்டங்களில் பெண்கள் பாடும் அந்த நாட்டார் பாடல் களை சேகரிப்பதற்காகவே. தொழில் நேரங்களில், திருமண வீடுகளில், திருவிழா நேரங்களில் குறிப்பாக அவர்களும் பாடும் அந்த தாலாட்டுப் பாடல்களை சேகரிப்பதன் மூலம் வேறு எந்த உத்தியோகபூர்வ வரலாற்று பதிவுகளையும் விட அவை விபரிக்கும் இனவியல் வரலாற்றை (Ethnohistory) பெற்றுக் கொள்வதற்காகவே எனக் குறிப்பிடுகிறார்.

இத்தகைய ஈடுபாட்டுடன் வந்த அவருக்கு அந்த ஆண்டு இலங்கையில் நடந்த இன வன்முறைகள் காரணமாக அவற்றைப் பெற்றுக் கொள்ள முடிய வில்லை. "தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டி ருந்த அந்த நாட்களில், எனது பாடகர்கள் யாருமே பாடும் மன நிலையில் இருக்கவில்லை" என கவலையோடு பதிவு செய்கிறார்.

அதேநேரம் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இலங்கை வந்த நேரங்களிலும், வாழ்ந்த காலங்களிலும் தான் செவிமடுத்த சில மக்கள் பாடல்களை இந்த நூலிலே ஆங்கில எழுத்துக்களில் தமிழிலும் அதன் ஆங்கில மொழி பெயர்ப் புமாக உள்வாங்கி ஓர் ஆய்வுநூலை இலக்கிய அந்தஸ்த்துடன் தர முனைந் துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படி அவர் சேர்ந்துள்ள பாடல் ஒன்று வி.கே.வெள்ளையன் - எஸ்.தொண்டமான் அரசியல் முறுகல், வி.கே.வெள்ளையன் மரணம் என்பதன் பிரதிபலிப்பாக ஹட்டன் பகுதியில் ஒருவர் பாடியதாக குறிப்பிடப் பட் டுள்ளது.

"அடியோட வெட்டினானா ஆசாமி - வெள்ளையன்
முடியோட சாஞ்சானா ஏஞ்சாமி
தொண்டையனும் தாய்வாதும் வளரட்டும் மாமி
போட்டு புதைஞ்ச வரலாற்ற சொல்லு
கச்சாமி"

இப்படி ஆங்காங்கே சிறு பாடல்கள், சிறுகதைகள், உரையாடல்கள் என சுவாரஷ்யமிக்க பகுதிகளுடன் ஏழு அத்தியாயங்களைக் கொண்ட மானிட வியல் நூலான 'கருகிய தாலாட்டு' மலையக நாட்டாரியலில் இருந்து மையம் கொண்டிருப்பதுடன் மனித உரிமைப் போராளியான, துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமான யாழ் பல்கலைக்கழக பேராசிரியை கலாநிதி. ராஜினி (ராஜசிங்கம்) திராணகமவுக்கு சமர்ப்பணம் செய்துள்ளார். இவர் தனக்கு பிடித்தமான தனது கணித ஆசிரியரின் மகள் என்றும் குறிப்பிடுகின்றார் நூலாசிரியர்.

அந்த ஆசிரியர் ராஜசிங்கம் குறித்து ஆய்வாளர் மு.நித்தியானந்தன் இவ்வாறு கூறுகிறார்: இராணுவம் என்னைக் கைது செய்ய வந்தபோது, வீட்டிலிருந்து வெளியே பரபரப்புடன் என்ன நடக்கிறது என்று பார்க்க வந்த ராஜசிங்கம் மாஸ்டரை, சுற்றிலும் black commandos குவிந்திருந்த நிலை யில், மேஜர் முனசிங்க 'Kneel down' என்று கட்டளை இட்டபோது, 'Mahila, Bring me the chair' என்று தன மனைவி மகிலாவை நோக்கி நாற்காலியைக் கொண்டு வருமாறு பணித்து, நாற்காலியில் அமர்ந்து பதில் கூறியவர் அவர். இந்த ராஜசிங்கம் மகளே ராஜினி திராணகம.

கிடைப்பதற்கு அரிதான இந்த ஆங்கில நூல் பற்றிய ஓர் அறிமுகமாக இங்கே தகவல் பதிவாகியுள்ளது. எதிர்கால தலைமுறையினரின் ஆய்வுத் தேவைகளுக்கான ஆதாரமாக இந்த நூல் அமையும்.

தேயிலை மரங்களை கவ்வாத்துச் செய்யும் மூன்று விதங்களை (Skiffing, cut- across and Clean Pruning) வரைபடங்களுடன் விபரிக்கும் இவர் அதனை கவிதை நடையில் இவ்வாறு எழுதுகிறார்,

கவ்வாத்துச் செய்யாவிட்டால் ;
தேயிலையும் செடியல்ல மரம் - அது
மலர்களையும் விதைகளையும் கூட தரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவுறா சமத்துவமின்மை

இலங்கைப் பெருந்தோட்டத்துறை தமிழர்களின் உரிமைகள்

ENDLESS INEQUALITY

The Rights of the Plantation Tamils in Sri Lanka

7

யோகேஸ்வரி விஜயபாலனின் சட்டக் கண்ணோட்டம்

இலங்கையில் வாழும் மலையகத் தமிழ் மக்கள் எல்லோருமே பெருந் தோட்டத்துறையில் இல்லை. எனினும் இவர்களைக் குறிக்கும்போது தோட்டத் தமிழர்கள் (Estate Tamils- வத்துக்கரே தெமல), பெருந்தோட்டத் துறை தமிழர்கள் (Plantation Tamils) போன்ற சொற்கள் கையாளப்படு கின்றன. இது ஒரு வரலாற்றின் பின்புலமும் தொடர்ச்சியும் கொண்ட சொல் லாட்சிகள் எனலாம்.

இலங்கைக்கு பெருந்தோட்டக் கைத்தொழிலில் ஈடுபடுத்துவதற்காக இந்தியாவில் இருந்து அழைத்துவரப்பட்ட மக்களே இந்த மக்கள் கூட்டத் தின் வேர்கள் என்ற அடிப்படையிலேயே இன்றும் கூட சிங்களத்தில் 'வாத்துக்கரே தெமல' என்றும் ஆங்கிலத்தில் 'ப்ளாண்டேசன் டமில்ஸ்' என்றும் விளிக்கப்படுகிறது. இது தொழில்சார்ந்து உருவான ஓர் இனத்துவ அடையாளம் எனலாம்.

எனினும் இந்த சொல்லாடல்களில் இருந்து வெளியே வர எத்தணித்த இந்த மக்கள் கூட்டம் தம்மை 'மலையகத் தமிழர்கள்' என பண்பாட்டு அடிப்படையில் நிலைப்படுத்திக் கொண்டுள்ளனர். எனினும் 'இந்தியத் தமிழர்கள்' என்றே இலங்கை சனத்தொகைக் கணக்கெடுப்புகளில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர் என்ற மலையகத் தமிழ் மக்கள் குறித்த அடையாளம் தொடர்பான விவாதத்துடன் ஆரம்பமாகும் நூல் 'முடிவுறா சமத்துவமின்மை'.

எது எவ்வாறெனினும் இந்த மக்கள் குறித்த உரிமைசார்ந்த ஓர் ஆய்வு நோக்கில் இந்த நூலில் பெருந்தோட்டத்துறைத் தமிழர்கள் என கையாளப் பட்டுள்ளனர். அதற்கு காரணமும் உண்டு. பெருந்தோட்டத்துறை எனும் கட்டமைப்புக்குள் வைக்கப்பட்டுள்ள இந்த மக்கள் பல உரிமை மறுப் புக்குள் உள்ளாகினர், உள்ளாகி வருகின்றனர் என்பதே அதற்கான காரணமாகும். அதனை வரலாற்று ரீதியாக ஆய்வு செய்யும் நூலாக இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் அமைவதோடு இந்த நூலுக்காக தெரிவு செய்துள்ள தலைப்பான 'முடிவுறா சமத்துவமின்மை' (Endless Inequality) அதற்கு மேலும் வலிமை சேர்க்கிறது.

மலையகத் தமிழர்கள் என தங்களைத் தாங்களே விளித்து, அடுத்த வரையும் விளிக்கச் செய்யும் பெரும்பணியை மலையக இலக்கிய முயற்சி களும், செயற்பாடும், உரையாடல்களும் ஏற்படுத்தி விட்டிருக்கின்றன. ஆய்வுத் தளத்தில் இருந்து நூல் உருவாக்கம் பெற்று ஆய்வு இலக்கியமாக வடிவம் பெற்றுள்ள ஆங்கில நூல் இது.

நூலாசிரியர் யோகேஸ்வரி விஜயபாலன் லன்டனில் வாழும் ஒரு மலை யகத் தமிழர். தொழில் முறையில் சட்டத்தரணியான இவர் இலங்கை ஹட்டன் பகுதி மே.ீபீல்ட் தோட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தில் கற்றுத்தேர்ந்து அங்கேயே விரிவுரையாள ராகவும் பணியாற்றியுள்ள அதேநேரம், இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத் திலும் சட்ட விரிவுரையாளராக பணியாற்றியுள்ளார். இலங்கைத் தொழி லாளர் காங்கிரசின் சட்ட அலுவலராக பணியாற்றிய காலத்தில் தொழிற் சங்கங்கவாதிகள், தொழிலமைச்சு அதிகாரிகள், சமூக விஞ்ஞானிகள் உடனான கலந்தாலோசனைகளுடன் கூடியதாக FES எனும் நிறுவனத்துடன் இணைந்து 16 கையேடுகளையும் வெளியிட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. 1993ஆம் ஆண்டு லண்டன் பல்கலைக்கழகத்தில் சட்ட முதுமாணிப் பட்டத் தையும் பெற்றுக் கொண்டு அங்கேயே சட்டத்தரணியாகவும் செயற்பட்டு வருபவர்.

தனது தாத்தாவான பி.டி.சிதம்பரம்பிள்ளை பெருந்தோட்டத்துறைக்கு தமிழர்கள் வருகை தந்த விதம் குறித்து கூறிய கதைகள் தன் மனதுக்குள் ஆழப்பதிந்ததாகவும் எழுதுகிறார். பாழடைந்த தோட்டத்துப் பாடசாலை யில் ஆரம்ப கல்விக்காக சேர்க்கப்பட்ட இவர் எட்டுவயதில் பல மைல் நடந்துவந்து அங்கிருந்து பஸ்ஸில் பயணித்து ஹட்டன் நகர பாடசாலையை அடைய நேர்ந்ததாகவும் குறிப்பிடுகிறார். தமது மூதாதையரான தாத்தா பாட்டி இந்தியாவில் இருந்து மன்னார் ஊடாக மலையகத் தோட்டங்களுக்கு வந்து சேர்ந்த வரலாற்றை நினைவுகூரும் இவர் 1948ஆம் ஆண்டு தமது இலங்கைக் குடியுரிமை பறிக்கப்பட்டதையும், அதிஷ்டவசமாக இந்திய-பாகிஸ்தான் வதிவாளர் (பிரஜாவுரிமைச்) சட்டத்தின் பிரகாரம் தமக்கு மீளக் கிடைக்கப்பெற்றமை பற்றியும் குறிப்பிடுகிறார். அதே நேரம், தானும் தனது கணவரும் பிரித்தானியாவில் குடியேறி ஆறுமாத காலத்துக்குள் அங்கு வாக்களிக்கும் உரிமைப் பெற்றதையும் ஒப்பீடாக கூற முனைகிறார். இவ்வாறு இலங்கையில் குடியுரிமை பறிக்கப்பட்டதனால் இந்த மக்கள் அடைந்த வலிகளை பதிவு செய்யும் நோக்கமும் நீடித்த அனுபவமும் இந்த நூலை எழுதத் தூண்டியதாக குறிப்பிடுகிறார் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சட்டத்தரணி என்றவகையில் இந்த நூலாசிரியரின் நோக்கம் சட்ட ரீதியாக எவ்வாறெல்லாம் இந்த மக்கள் வஞ்சிக்கப்பட்டுள்ளனர் என்பதை அலசி ஆராய்வதாக உள்ளது. லண்டன் பல்கலைக்கழகத்தில் சட்ட முதுமாணி கற்கைகளுக்காக அதன் பகுதித் தேவையாக சமர்ப்பிக்கப்பட்ட 'பெருந தோட்டத்துறை தமிழர்களின் சட்ட உரிமைகள்' எனும் ஆய்வுக் கட்டுரையே இவ்வாறு நூல் வடிவம் பெற்றுள்ளது. தனது மேற்பார்வையாளரான கலாநிதி. வேர்னர் மென்ஸ்க்கியின் ஆலோசனையும் தனது சமகாலத்த வரான கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட பீடாதிபதியும் முதுநிலை விரிவுரை யாளருமான என். செல்வக்குமாரனின் (இவர் இப்போது அரசியலமைப்பு சபை உறுப்பினருமாவார்) உந்துதல் என்பன இந்த நூல்வடிவம் பெற பெருங்காரணம் என்கிறார்.

2014ஆம் ஆண்டு லண்டனில் வெளிவந்துள்ள இந்த நூல் உருவாக் கத்தில் நூலாசிரியரின் கணவரான எம்.வி.விஜயபாலனின் பங்களிப்பு அளப்பரியது எனக்குறிக்கிறார். இவர் இலங்கைத் தொழிலாளர் காங்கி ரசின் முன்னாள் உபதலைவர் கே.விஜயசுந்தரம் அவர்களின் மகனாவார். லண்டனில் வாழும் இலங்கையரான பிரபல ஓவியரும் முன்னட்டை வடிவமைப்பாளருமான கே.கே.ராஜாவின் அர்த்தமிகு அட்டை வடிவமைப் புடன் உருவாகியுள்ளது இந்த நூல். தனது தாத்தா சிதம்பரம் பிள்ளை, தகப்பன் ஏ.ராமலிங்கம், மாமனார் எம்.கே.விஜயசுந்தரம் ஆகியோருக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ள இந்த நூலின் சமர்ப்பணப்பக்கத்தில் மக்கள் கவிமணி சி.வி.வேலுப்பிள்ளையின் இலங்கைத் தேயிலைத் தோட்டத்திலே எனும் நெடுங்கவிதையின் ஆரம்ப வரிகளான 'The tom - tom's throb!' உள்ளடங்களாக எட்டு வரிகள் ஆங்கிலத்திலேயே தரப்பட் டுள்ளமை அழகு சேர்க்கிறது.

412 பக்கங்களைக் கொண்ட இந்த ஆங்கில நூல் பதினொரு அத்தியாங் களையும் ஏழு பின்னிணைப்புகளையும் கொண்டது. முதலாம் அத்தியாயம் அந்த மக்களது வருகையையும்; இரண்டாம் அத்தியாயம் சுதந்திரத்துக்கு முற்பட்ட காலத்தையும்; மூன்றாம், நான்காம், ஐந்தாம் அத்தியாயங்கள் சுதந்திரத்துக்குப் பிற்பட்ட காலத்தையும் விரிவாக பதிவு செய்கிறது. அத்தி யாயம் 6 மொழி உரிமை, 7 கல்வி, 8 சுகாதாரமும் வீடமைப்பும், 9 காணி மறுசீரமைப்பு, 10 தொழிற்சங்க உரிமைகள் என அமைவதோடு அத்தி யாயம் 11 பெருந்தோட்டத்துறை தமிழர்களின் உரிமைகள் எனும் தலைப் பில் சர்வதேச தளத்தில் பொதுவாக ஆராய்கிறது.

இந்த மக்களின் பிரஜா உரிமை மீளப்பெறுதல் சம்பந்தமாக எடுக்கப் பட்ட முயற்சிகள் குறித்து பேசும்போது தனியே அப்போது அமைச்சுப் பதவிகளை வகித்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் முயற்சிகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்திரமல்லாது ஏனைய அமைப்புகளின் முயற்சிகளும் நூலில் பதிவு பெற்றுள்ளது. 1981ஆம் ஆண்டு பொதுநலவாய நாடுகள் மற்றும் இலங்கை சர்வஜன வாக்குரிமை பெற்ற ஐம்பதாண்டுகள் போன்ற கொண்டாட்டத் திற்காக பிரித்தானிய மகாராணி இரண்டாம் எலிசபத் இலங்கைக்கு விசேட அதிதியாக அழைக்கப்பட்டபோது, இலங்கையில் நாடற்றவர்களாக இருந்த மலையகத் தமிழ் மக்களை அவருக்கு நினைவுபடுத்தும் வகையில் தொழிலாளர் தேசிய சங்கம் தமது 9வது பேராளர் மாநாட்டில் எடுத்த தீர்மான அறிக்கையையும் இந்த நூல் முழுமையாக உள்வாங்கிக்கொண் டுள்ளது. அந்த தீர்மான நகலை வரைந்தவர் அப்போது சங்கத்தின் நிர்வாக ஆலோசகராக இருந்த சி.வி.வேலுப்பிள்ளை என இப்போதைய செயலாளர் எஸ். பிலிப் உறுதி செய்கிறார். அத்துடன் மகாராணியின் அந்த வருகை யின்போது ஆகஸ்ட் மாதம் அல்லாத ஒரு காலத்தில் கண்டியில் விஷேட பெரெஹரா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டதாகவும் தனது நினை வைப் பதிவு செய்கிறார் எஸ். பிலிப்.

பிரஜாவுரிமைத் திருத்தச் சட்டங்களின் வரிசையில் 2003ஆம் ஆண்டுத் திருத்தச் சட்டத்துடன் நாடற்றவர் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுவிட்டதாக பல ஆய்வாளர்களும் குறிப்பிடுவதை அவதானிக்கையில் 2009 திருத்தச்சட்டம் சம்பந்தமாகவும் அதில் இந்திய அகதி முகாம்களில் வாழும் மலையக வம்சாவளியினருக்கு செய்யப்பட்டுள்ள பிரஜாவுரிமை ஏற்பாடுகளையும் ஆராய்ந்து எழுதி இருப்பது சிறப்பு.

இந்த நூலின் முக்கியத்துவமே மலையகத் தமிழர்களின் இந்த வரலாற்றை சட்டத்தின் கண்கொண்டு பார்ப்பதுதான். ஏறக்குறைய இந்த மக்கள் தொடர்பாக இயற்றப்பட்ட பெரும்பாலான சட்டங்கள் பற்றிய பார்வைகள் கவனமாக ஆராயப்பட்டு அதன்மூலம் இந்த மக்களுக்கு கிடைத்த உரிமைகள் யாவை? மறுக்கப்பட்ட உரிமைகள் யாவை ? எவ்வாறு இந்த மக்களை சட்டங்கள் வஞ்சிக்கின்றன என்பன போன்ற விடயங்கள் அலசி ஆராயப்பட்டுள்ளது.

பெருந்தோட்டத் தமிழ் மக்கள் இலங்கையின் பொதுநிர்வாக கட்டமைப் புக்குள் முழுமையாக உள்வாங்கப்படாமை குறிப்பாக பிரதேச சபைச் சட்டத்தில் நீக்கம் செய்யப்பட்டமை குறித்து பதிவுகள் இடம்பெறவில்லை ஆயினும் உள்ளூராட்சி நிர்வாகத்தில் இந்த மக்கள் உள்வாங்கப்படாமை பேசப்பட்டுள்ளது.

இன்றைய இளைய சமுதாயத்தினரான ஊடகவியலாளர்கள் மலையகம் தொடர்பாக கேள்விகளை எழுப்பும்போது இந்த சட்டரீதியான வஞ்சிக்கப் பட்ட பின்புலங்களை அறியாது அல்லது புரியாது பொத்தாம் பொதுவாக கேள்வி எழுப்புவதை அவதானிக்கலாம். அத்தகைய ஊடகவியலாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது கைவசம் வைத்திருக்க வேண்டிய நூலாக இந்த நூலை நிச்சயம் பரிந்துரைக்கலாம். சட்டத்துறையில் கல்வி கற்போர், மலையக அரசியல் செயற்பாடுகளில் ஆர்வம் காட்டுவோர் அவசியம் படிக்க வேண்டிய நூல் என்றும் பரிந்துரைக்கலாம்.

சட்டத்தினாலேயே உரிமைகள் பெற்றுக் கொடுக்க வேண்டிய ஒரு நாட்டின் பிரஜைகளுக்கு அந்த சட்டமே எவ்வாறு தடையாக இருந்து வருகிறது என்பதை இந்த நூலின் குறித்துக் காட்டப்படும் பல சட்டங்கள் ஆதாரமாக உள்ளன. குறிப்பாக எட்டாவது அத்தியாயமான சுகாதாரமும் வீடமைப்பும் எனும் தலைப்பில் ஆராயப்படும் விடயங்கள் இன்றைய இளைய தலைமுறை மலையகத்தவர்கள், ஆய்வாளர்கள், அரசியலாளர்கள் கவனத்தை வேண்டி நிற்கிறது.

2017ஆம் ஆண்டு இலங்கையில் அரசியலமைப்பு மாற்றம் குறித்த கற்கைநெறி ஒன்றுக்காக லன்டன் சென்றிருந்த (கட்டுரையாளர்) போது இருவர் இந்த நூலை அன்பளிப்பு செய்தனர். அந்த இருவரையும் இங்கே நினைவுபடுத்த வேண்டியது கடமையாகிறது. முதலாமவர் அத்தகைய கற்கைநெறியை ஒழுங்கு செய்த தமிழர் தகவல் மையம் வரதகுமார் (TIC வரதன்). அண்மையில் திடிரென காலமான இவர் இந்த நூலின் முக்கியத்துவம் உணர்ந்து அன்பளிப்பு செய்தார். இரண்டாமவர் எழுத்தாளர், ஆய்வாளர், விமர்சகர் மு.நித்தியானந்தன். இந்த இருவரின் நோக்கமும் இந்த நூலின் உள்ளடக்கம் சமூகத்துக்கு சென்று சேரவேண்டும் என்ப தாகவே இருந்தது. இந்த அறிமுகக் குறிப்பின் ஊடே அந்தப்பணி ஓரள வுக்கு இடம்பெறுகிறது. இந்த நூலைத் தேடிப் பெற்று வாசித்துப் பயன டைந்தாலே இந்த நூலாசிரியரின் நோக்கமும் அவர் குறித்து நிற்கும் சமூகத்தின் எதிர்பார்ப்புகளும் முழுமையடையும்.

இலங்கையில் மலையகத் தமிழ் சமூகம் மீதான முடிவுறா சமத்துவ மின்மையை நீக்கி, ஏனைய சமூகங்களுடன் சமத்துவமான சமூகமாக வாழ, வாழவைக்க எவ்வாறெல்லாம் இந்த மக்கள் சமத்துவமின்மைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள் என்பதை விரிவாக எடுத்துச் சொல்லும் இந்த நூல் பரவலான வாசிப்புக்கு உள்ளாதல் வேண்டும்.

சமத்துவமின்மை முடிவுறுத்தப்படுதலும் வேண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லதைவிட தீயது பலமானது என்பதை உணர்த்தும்

'நினைவுக்காப்பகம்'

8

Archive of Memory

Reflections on 70 year of Indipendance

இலங்கை சுதந்திரமடைந்த 70 ஆண்டுகால நிறைவிலிருந்தது நினைவு களாக நாம் எதனைக் கொண்டுள்ளோம் என்பதை வெளிப்படுத்தும், நாம் அறிந்ததும் அறியாததுமான 70 ஆளுமைகளின் நினைவுப் பதிவுகளை (Memoir) அழகிய நிழற்படங்களுடன் பதிவு செய்திருக்கும் தொகுப்பு நூல் "நினைவுக்காப்பகம்".

இலங்கையின் நினைவு கலாசாரம் மற்றும் வரலாறு தொடர்பான கலந்துரையாடல்களை ஊக்குவிக்கும் நோக்கோடு மாலதி டி அல்விஸ் மற்றும் ஹசினி ஹப்புத்தந்திரி ஆகியோரை தொகுப்பாளர்களாகவும் ஷானி ஜயவர்தனவின் புகைப்படத் தொகுப்பையும் கொண்ட ஒரு நூல் 'நினைவுக்காப்பகம்' எனும் தலைப்பில் 2019ஆம் ஆண்டு தொகுக்கப்பட் டுள்ளது.

2018ஆம் ஆண்டு சுதந்திரத்தின் 70வது ஆண்டைப் பதிவு செய்து இலங்கையின் 70 கதை சொல்லிகளின் சேகரிப்பாக 'நினைவுக்காப்பகம்' தொகுக்கப்பட்டுள்ளது.

ஒருபக்க கதை, ஒரு பக்க படம் என 70 பேரின் நினைவுகளை அவர்கள் விரும்பிப் பாதுகாக்கும் பொருள் ஒன்றின் படத்துடன் ஒற்றைப் பார்வையில் ஒவ்வொரு ஆக்கமும் அமைந்து விடுவதாக அழகாக தொகுக்கப்பட் டுள்ளது. அந்த ஒற்றைப் பக்கங்கள் நம்முள் கிளரிவிடும் நினைவுகள் ஏராளம்.

தேநீர் கோப்பை, கைப்பை, மூக்குக் கண்ணாடி, சின்னஞ்சிறிய சப்பாத்து, சட்டி, ஊஞ்சல் என இதுபோன்ற எழுபது பொருட்களையும் அவற்றோடு பின்னிப்பிணைந்த நினைவுகளுடன் பதிவு செய்யப்பட்டுள்ளன. எம்மில் பெரும்பாலானவர்களுக்கு இவை அன்றாடப் பொருட்களாக இருக்கலாம். எனினும் எழுபது கதை சொல்லிகளுக்கும் அவை ஆழ்ந்த அர்த்தமுடைய வையாக அமைந்துள்ளன. அவை பழமையானவையாக அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்மையானவையாக அல்லது வலி நிறைந்த நினைவுகளை மீளக் கொண்டு வருவனவாக உள்ளன. பொருட்களின் பௌதிகத் தன்மை அதன் இருத் தலை வெளிப்படுத்துவதாகவும் அதனூடான கதைகள் அந்தப் பொருட்களை இணைத்துப் பார்க்கும் உளவியலையும் ஏற்படுத்துகின்றன. இந்த நூலை வாசிக்கும்போது எமக்குள் சேகரித்து வைத்துள்ள அல்லது மறக்க முடியாத பொருட்களையும் அவை பற்றிய நினைவுகளையும் கிளரி விடுவது இந்த நூல் தொகுப்பின் வெற்றி எனலாம்.

சர்வோதைய அமைப்பின் தலைவர் ஏ.டி.ஆரியரத்ன அவர்களின் நினைவுப் பொருளாக 'கயிறு' பற்றி ஒரு பக்க கதையை எழுதி உள்ளார். அந்தக் கதையின் முடிவில் இவ்வாறு குறிப்பிடுகிறார்...

"கயிறு பின்னுபவர்களுக்காக கூட்டுறவு அமைப்பு ஒன்றை ஆரம்பித்த என்னுடைய சமூக நடவடிக்கைகள் சாதி ஒழிப்பு, வறுமை ஒழிப்பு என இலங்கையிலுள்ள சுமார் பதினைந்தாயிரம் கிராமங்கள் வரை பரந்து விரிந்தன..."

இலங்கையில் மதிப்பு மிக்க சமூக சேவை நிறுவனமாக பெயரெடுத் துள்ள சர்வோதைய அமைப்பின் தோற்றத்துக்கு 'கயிறு' காரணமாக இருந்திருக்கிறது எனும் சுவாரஷ்யத்தை இந்த நூல் எமக்குத் தருகிறது. அதே போல இலங்கையின் முதலாவது சுதந்திர தின வைபவத்தில் சிறுவனாக கலந்துகொண்டவர் என்ற தகவலும் உள்ள நிலையில் இலங்கை சுதந்திரத்தின் 70 ஆண்டு நினைவில் தொகுக்கப்படும் நூலின் அவரது நினைவும் அடங்குவது பொருத்தமானது.

இலங்கையின் பிரபல நாடக நெறியாளரான பராக்கிரம நிரியெல்லவின் நினைவலையாக இருப்பது 'சிலேட்டுப் பென்சில்'. அதாவது 'கல்லுக்குச்சி'. இன்றைய தலைமுறைக்கு 'கல்லுக்குச்சி' என்றால் என்ன என விளக்க வேண்டி இருக்கலாம். கல்லால் செய்யப்பட்ட பலகையில் (Slate) எழுத பயன்படும் பென்சில் போன்ற கூர்மையான எழுத்தாணிதான் இந்த சிலேட் பென்சில் எனப்படும் கல்லுக்குச்சி. தனது வகுப்பு மாணவன் ஒருவன் பிரபாகரன் கன்னத்தில் கல்லுக்குச்சியில் குத்தி ஓட்டை விழுந்ததை நினைவுபடுத்துகிறார் நிரியெல்ல.1957ஆம் ஆண்டு கேகாலையில் இந்த சம்பவம் நடந்துள்ளது. யுத்தத்திற்கு முன்னதான 1957ஆம் ஆண்டளவில் இந்தப் பெயருக்கு ஏதும் முக்கியத்துவம் இருந்ததாக எனக்குத் தெரியவில்லை எனவும் குறிப்பிடுகின்றார் பராக்கிரம நிரியெல்ல.

இந்திரகாந்தி பெரேரா என்பவரின் நினைவு சுவாரஷ்யமானது. 1958ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிரான இனக் கலவரத்தின்போது வீடுகளுக்கு வரும் கும்பல் தமிழர்கள் வீடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனரா என விசாரிப்பார்களாம். அதற்கு வீட்டில் ஆண்கள் "தமிழர்கள் யாரும் எங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுகளில் இல்லை" என சத்தமாக சொல்லுவார்களாம். அப்படி சத்தமிட்டு சொல்லமுடியாத தனிமையில் வாழ்ந்த ஒரு பெண்மணி "அ(ப்)பி சிங்கள" (நாங்கள் சிங்களவர்) என எழுதிய மரப்பலகை ஒன்றை கேட்டில் தொங்க விட்டிருந்தாராம். கலவரத்தின் பின்னரும் கூட அது தொங்கிய நிலையில் அந்த வீட்டின் பெயரே 'அப்பி சிங்கள' வீடு என்று ஆனதாம்.

உலகின் முதலாவது பெண் பிரதம மந்திரியான சிறிமாவோ பண்டார நாயக்காவின் மகள் சுனேத்ரா பண்டாரநாயக்கா தனது தாயாரின் திருமண நெக்லஸை நினைவுபடுத்துகிறார்.

அமெரிக்காவில் வாழும் டெனிஸ் மக்கில்ரே எனும் மானிடவியலாளர் தனது ஆய்வு பயணத்தின்போது பாவித்த இலங்கை ஜீப் வண்டியின் 'ஔ' என்ற சிங்கள எழுத்துடனான வாகன இலக்கத்தகட்டை நினைவுபடுத்துகிறார்.

இலங்கையின் புகழ்பெற்ற ஆங்கில எழுத்தாளரான ஜீன் அரசநாயகம் தான் எழுத்தாளராவதற்கு காரணமான ஒரு நோட்டுப் புத்தகம் (Note book) பற்றிய நினைவைக் குறிப்பிடுகிறார்.1983இல் இடம்பெற்ற வன்முறைகளால் பாதிப்புற்று அகதி ஆனபோது தனக்கு கிடைத்த அந்த நோட்டுபுத்தக நினைவு உணர்வு பூர்வமானது.

மறுபுறம் 1983இல் தாங்கள் எவ்வாறு தமிழர் கடைகளைத் தாக்கினோம் என்பதை எடுத்துக் கூறியுள்ள நிர்மல் ரஞ்சித் தேவசிறி, ஒரு தீவிர சிங்கள தேசியவாதியாக இருந்த என்னை அந்த கொள்கையில் இருந்து விலக உடைந்து போன அந்த கைக்கடிகாரம் தான் காரணமாக இருந்தது என நினைவு கூர்கிறார். அந்தக் கைக்கடிகாரம் கடைகளைத் தாக்கும் போது அந்த கடையில் இருந்து எடுத்ததாம்.

கிளிநொச்சி மலையக புரத்தில் வாழும் வண.ரி.எஸ். ஜொசுவா தான் கேகாலையில் இருந்து குடும்பத்துடன் 1983ஆம் ஆண்டு கலவரத்துடன் கிளிநொச்சி வந்ததையும் அங்கே தோட்டத்தில் விளையும் காளான்களை உண்டு வளர்ந்ததையும் 'காளான்' நினைவுகளாகப் பதிவு செய்கிறார்.

இவ்வாறு பலதரப்பட்ட நினைவுகள் பொருட்களுடன் பதிவு பெறும் நூல் 'நினைவுக்காப்பகம்'.

சோகமான சம்பவங்கள் மற்றும் அனுபவங்களை மீளக் கொண்டு வருவதில் மனிதர்கள் பாதிக்கப்படிருப்பதாக சில அறிஞர்கள் வலியுறுத்து கின்றனர். இதற்கான உளவியல் மற்றும் உடலியல் காரணங்களையும் அவர்கள் அளித்துள்ளனர்.

எதிர்மறையான உணர்வுகள் அதிக சிந்தனையுடன் சம்பந்தப்படுகின்றன. அத்துடன் நேர்மறை உணர்வுகளைக் காட்டிலும் இந்தத் தரவு மிகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மையாக செயன்முறைப்கடுத்தப்படுகின்றது.

அதனால் அதிர்ச்சிகரமான மற்றும் விரும்பத்தகாத சம்பவங்களைப் பற்றி நாம் அதிகமாக நினைவு கூரமுனைகிறோம் என Nass Clifford மற்றும் Corina Yen (2012 - Penguin) எனும் அறிஞர்கள் குறிப்பிடுவதாக இந்த நூல் பதிவு செய்கிறது.

"எதிர்மறை விளைவுகளுடன் அதிகமாக இணைந்தவர்கள், அதுபோன்ற அச்சுறுத்தல்களினால் தாக்குப்பிடித்து நிற்றலை விரும்புவார்கள். அத்துடன் அவர்கள் அந்தத்தன்மையை தமது ஜீன்களுடன் அடுத்தத் தலை முறைக்கும் கடத்தும் வாய்ப்பை அதிகப்படுத்துகின்றனர்"

'நல்லதைவிட தீயது பலமானது' (Bad is Stronger than Good) எனும் இந்தக் கருத்து கூர்ப்பு அடிப்படையிலான வாதம் என Baumeister எனும் உளவிய லாளரை மேற்கோள் காட்டி வியாக்கியாணம் செய்யப்பட்டுள்ள மேற்படி வாசகம் தமிழ்ச் சமூக அரசியல், பண்பாட்டு சூழலுடனும் ஒத்துப் போக கூடிய ஒரு கருத்தாக அமைவதை அவதானிக்கலாம்.

எமது சுதந்திரத்துக்குப் பின்னான வரலாற்றில் இருந்து முக்கியமான தருணங்களை அவை ஞாபகப்படுத்துகின்றன. இந்த நூல் 2020 தொகுக்கப் பட்டு இருக்குமாக இருந்தால் நிச்சயம் ஒரு கிறித்தவ தேவாலயத்தின் புகைப்படமும் சேர்க்கப்பட்டிருக்கும்.

Coffee table book வகையைச் சேர்ந்த இந்த நூல் மூன்று மொழிகளிலும் வெளிவந்துள்ளதுள்ளது. இந்த நூலை www.archivesofmemory.lk எனும் இணையத்தளத்தில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் என மும்மொழிகளிலும் வாசிக்கலாம். அதே நேரம் உங்களது நினைவுகளை ஒரு பக்க கதையாக படத்துடன் பதிவேற்றவும் செய்யலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9 எங்கெங்கும் அந்நியமாக்கப்பட்டவர்கள்

ALIENATED EVERY WHERE

A Story on the condition of the Indian origins in Sri Lanka and Sri Lankan Repatriates in India

இலங்கையில் 'இந்தியர்கள்' என்றும், இந்தியாவில் 'சிலோன்காரர்கள்' என்றும் அழைக்கப்படும் மலையகத் தமிழ் மக்கள் எங்கெங்கும் அந்நிய மாக்கப்பட்டுள்ளார்கள் என்பதனை விளக்குவதாக தலைப்பிலேயே உள்ள டக்கத்தை தாங்கிவந்திருக்கும் ஆய்வு நூல் 'எங்கெங்கும் அந்நியமாக்கப் பட்டவர்கள்' (Alienated Every Where).

1964ஆம் ஆண்டு சிறிமா - சாஸ்த்திரி ஒப்பந்தம் காரணமாக இலங்கை யில் இருந்து தாயகம் திரும்பியவர்களாக (Repatriates) இந்தியா சென்றவர்களின் அமைப்பான 'சிராக்' (CERAK- Ceylon Repatriates Association Kodaikanal) தமிழில் ஆய்வு செய்து வெளியிட்ட இந்த நூல் கலாநிதி எஸ்.ஜெயபோல் என்பவரால் ஆங்கிலத்துக்கு மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.

'சிராக்' அமைப்பு சார்பாக அ.சிவானந்தன், பி.எஸ்.நாதன், எஸ்.பன்னீர் செல்வம், ரி.எஸ்.ராஜ, சிவா சாந்தகுமார், உருசுலா நாதன் (பி.எஸ்.நாதனின் துணைவியார்), குணசீலி, அந்தோ னியம்மாள் ஆகியோரைக் கொண்ட குழு செய்த ஆய்வுத் தொகுப்பை ஸ்டான் லூர்துசாமி, எஸ்.செபஸ்தியன் ஆகியோரின் ஆலோசனையுடன் அ. சிவானந்தன், பி.எஸ். நாதன் ஆகிய இருவரும் தொகுத்தளித்துள்ளனர்.

ஆய்வுக்குழுவில் அங்கம் வகித்துள்ள பலர் எழுத்தாளர்களும் செயற் பாட்டாளர்களும் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். 'வண்ணச் சிறகு' எனும் கவிதைத் தொகுப்பை வெளியிட்ட 'சென்றுவருகிறேன் ஜென்ம பூமியே' எனும் மலையகத்தின் முதலாவது புதுக் கவிதையினை எழுதிய அ.சிவானந்தன் இந்த நூலின் தொகுப்பாசிரியர்களில் ஒருவர். அவரைப் போலவே பி.எஸ்.நாதன் தொ.சிக்கன். ராஜா , செபஸ்தியான் போன்றவர் களும் தீவிர சமூக செயற்பாட்டில் ஈடுபட்டு இருந்தவர்கள். சி.பன்னீர் செல்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தேயிலைப்பூக்கள்' உட்பட பல நூல்களை எழுதியவர். இலங்கையில் வாழ்ந்த காலத்தில் பாடசாலை மாணவராக இருந்தபோதே படைப்பு இலக்கியத்துக்கான சாகித்திய பரிசு பெற்றவர்.

இப்படி எழுத்திலும் செயற்பாட்டிலும் ஆர்வம் கொண்ட இலங்கையிலும் இந்தியாவிலும் வாழ்ந்த அனுபவங்களைக் கொண்ட ஒரு குழுவினரால் ஆய்வு செய்து எழுதப்பட்டுள்ள இந்த தொகுப்பு நூல் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருப்பதன் நோக்கம் இலகுவாகப் புரிந்து கொள்ளக் கூடியதே. அப்போதைய இலங்கை - இந்திய அரசுகள் இந்த மக்களின் விருப்பு வெறுப்புகளைக் கேட்டறியாது அல்லது கணக்கில் எடுக்காத நிலையில் எடுத்த அரசியல் தீர்மானங்கள் எந்தளவுதூரம் தாம் சார்ந்த சமூகத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தியது என்பதை சர்வதேசத்துக்கு எடுத்துச் செல்லும் முயற்சியாகவே இதனைப் பார்க்க வேண்டி உள்ளது.

1989ஆம் ஆண்டு சிராக் அமைப்பினரால் வெளியிடப்பட்டிருக்கும் இந்த நூல் 164 பக்கங்களையும் பதினொரு அத்தியாங்களையும் கொண்டது. நூலின் உபதலைப்பாக 'இலங்கையில் இந்திய வம்சாவளியினராகவும், இந்தியாவில் தாயகம் திரும்பியவர்களாகவும் வாழும். மக்களின் நிலைமைகள் பற்றிய ஒரு கற்கை (A study on the conditions of the Indian origin in Sri Lanka and the Sri Lanka repatriates in India) எனக் கொண்டிருப் பதற்கு ஏற்ப ஒவ்வொரு அத்தியாங்களிலும் உள்ளடக்கங்கள் கவனம் பெற்றிருக்கின்றன.

இலங்கைப் பிரஜைகளான பூர்விகத் தமிழர்களில் இருந்து வேறுபட்ட தமிழ்ச் சமூகமாக இந்திய வம்சாவளித் தமிழ்ச் சமூகம் அமைந்துள்ளமை பற்றி, அவர்களின் இலங்கை குடியுரிமைசார்ந்த பிரச்சினைகள் பற்றி, இலங்கையில் ஏனைய சமூகங்களில் இருந்து அவர்களை அந்நியமாக்கு வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி, இலங்கையில் இருந்து அவர் களை இந்தியாவுக்கு அனுப்புவதற்கு செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங் களும் நடைமுறைகள் பற்றி, இந்தியாவுக்கு வந்தபின்னர் அவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணக் கொள்கைகள் திட்டங்கள் போன்றன பற்றிய விடயங்களை ஆய்வு செய்வதே இந்தக் கற்கையின் நோக்கம் என நூலின் அறிமுகக் குறிப்பிலே தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் வெளிநாட்டுக்காரர்களாகவும் (Foreigners in Ceylon) இந்தியாவில் சிலோன்கார்களாகவும் (Nationalities of Ceylon) இவர்கள் பார்க்கப்படுவதனை இந்த ஆய்வின் மூலம் தெளிவாக உணரக்கூடியதாக உள்ளதாகவும் அறிமுகக் குறிப்பில் எழுதப்பட்டுள்ளது.

முதலாவது அத்தியாயத்தில் இந்த மக்களின் வரலாற்றுப் பின்புலம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகை தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டுள்ளதுடன், ஏன் இந்த மக்கள் தமிழகத்தை விட்டு வாழ்வாதாரம் தேடி வெளியேற நேர்ந்தது என்பது தொடர்பாக ஆதாரங்களுடனான ஆய்வுகளை முன்வைத்துள்ளது. The Colombo Observer பத்திரிகை அறிக்கையை ஆதாரம் காட்டி 1841- 1849 வரையான எட்டு ஆண்டு காலத்திற்குள் எழுபதினாயிரம் பேர் வரும் வழியில் இறந்து போயுள்ளனர் என்ற தகவல் பதிவாகி உள்ளது.

இரண்டாம், மூன்றாம் அத்தியாயங்கள் இலங்கையில் அவர்கள் அமைப் பாக்கம் பெற்ற விதம், அவர்களது கலாசார இனத்துவ வளர்ச்சி ஆகியன பதிவு பெற்றுள்ளதுடன் நான்காம் அத்தியாயம் இலங்கையில் 1931 சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்ட போது அவர்களுக்கு முழுமையாக வாக்குரிமை வழங்குவதற்கு ஏற்படுத்தப்பட்ட தடை, அப்படி வழங்கப்பட்ட வாக்குரிமையைப் 1948இல் முற்றாக பறிக்கப்பட்டமை தொடர்பாக பதிவு செய்யப்பட்டுள்ளது. ஐந்தாம் அத்தியாயம் அந்த மக்களின் அரசியல் பரிணாமத்தையும், ஆறாம் அத்தியாயம் இலங்கை - இந்திய ஒப்பந்தங்கள் தொடர்பாகவும் ஆராய்கிறது.

1964ஆம் ஆண்டு இந்திய பிரதமர் லால் பகதூர் சாஸ்த்திரி இலங்கைப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆகியோருக்கு இடையேயும், 1974ஆம் ஆண்டு இந்திராகாந்தி - சிறிமாவோ ஆகியோருக்கு இடையேயும் பரிமாறிக்கொள்ளப்பட்ட கடிதங்கள் இணைப்பாகத் தரப்பட்டுள்ளன. இந்தக் கடிதங்களின் உள்ளடக்கத்தின் பிரகாரம் சர்வதேச மனித உரிமைகள் தாபனத்தின் சர்வதேச பிரகடனத்தின் 15ஆம் விதி மீறப் பட்டுள்ளமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஏழாம் அத்தியாயம், ராமேஷ்வரம் இடைத்தங்கல் முகாம் அனுபவங் களை பதிவு செய்வனவாக உள்ளது. இலங்கையில் சிங்கள இனவாத அதிகார வர்க்கத்திடம் இருந்து விடுதலைப் பெற்றுவிடலாம் என எண்ணி இந்தியா சென்றவர்கள் 'மண்டபம்' முகாமில் அடைந்த இன்னல்கள் இம்மியளவும் குறைவில்லாதது என்பதை அதனை அனுபவித்து உணர்ந்த வர்களாக ஆய்வாளர்களின் குறிப்புகள் அமைந்துள்ளன. காலைக்கடன் கழிப்பதற்காக தொலைவுக்கு சென்ற இளம் பெண்கள் பாலியல் பலாத் காரத்துக்கு உள்ளான கொடுமைகள் பற்றியும் பதிவாகிறது.

எட்டாம் அத்தியாயத்தில் இந்திய அரசாங்கம் இவர்களுக்காக முன்னெ டுத்த புனர்வாழ்வுக்கான நிவாரண நடவடிக்கைகள் குறித்து விவரிக்கப்பட் டுள்ளது. தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாக தாயகம் திரும்பிய மக்கள் எவ்வாறு குடியமர்த்தப்பட்டார்கள் போன்ற விபரங்கள் உள்ளன. தங்க ளுக்கு வழங்கப்பட்ட நிவாரண நடவடிக்கைகள் தமக்கு போதுமானதாக இல்லை என்பதை காரணம் காட்டி தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் சில நிழற்படங்களுடன் பதிவு பெற்றுள்ளன. அத்தகைய புனர்வாழ்வு நிவாரணங்கள் ஒரு கண்துடைப்பாக அமைந் தனவே அன்றி இதயபூர்வமானதாக அமையவில்லை என்பதை நூலில் சேர்க்கப்பட்டுள்ள தெரிவு செய்யப்பட்ட சிலரின் வாக்குமூலங்களில் (Case Studies) இருந்து அவதானிக்க முடிகிறது.

நூலின் 96ஆம் பக்கத்தில் தொடங்கி 100வது பக்கம் வரை நீளும் பதுளை- ஹிந்தகல தோட்டத்தில் இருந்து தாயகம் திரும்பி புதுக்கோட்டை மாவட்டத்தில் சென்று குடியேறிய மீனாம்பாள் என்பவரின் எழுத்து மூலமான வாக்குமூலம் ஒரு கண்ணீர்க் காவியமாக பதிவாகிறது. இலங்கையில் பிரசவம் பார்க்கும் அளவு அறிவு பெற்ற அவருக்கு பத்துவகையான தொழில்கள் தெரிந்திருந்தும் உரிய தொழில் வாய்ப்பு ஏதுமின்றி இருப்பிட வசதிகளும் இன்றி கணவனையும் இழந்து தன் பிள்ளைகளைக் கரை சேர்ப்பதற்கு பட்ட துன்பங்களைக்கூறும் கதை, ஒரு நாவலுக்கு ஒப்பானது.

அதேபோல இலங்கையில் இந்திய கடவுச்சீட்டைப் பெற்றதன் பின்னர் உறவுகளைப் பிரிந்துபோக மனமில்லாமல் இலங்கையில் மறைந்து வாழ்ந்தவர்கள் 'ஜீப்' வண்டியில் அவர்களைத் தேடி வெள்ளை உடை அணிந்த குடிவரவு குடியகல்வு அதிகாரிகளைக் கண்டதும் ஓடி ஒளிவதும், பிடிபட்டால் அவர்கள் பலவந்தமாக நாடு கடத்தப்பட்டதுமான தகவல்கள் மனதை பிழியும் சோகம் நிறைந்தவை.

தாயகம் திரும்பியவர்களாக தமிழகம் வந்த இலங்கை மலையகத் தமிழர்களை ஐந்து வகையாக அடையாளம் காணும் இந்த ஆய்வு பின்வருமாறு பதிவு செய்கிறது.

- இந்தியாவில் இருந்து குடிபெயர்ந்து சென்று மீண்டும் வந்து சேர்ந்தவர்கள்.
- இலங்கையில் பிறந்தாலும் இந்தியாவை தாய்நாடாக எண்ணி வந்தவர்கள்.
- இலங்கை இனக்கலவரங்களில் உந்தப்பட்டு இந்தியா திரும்ப நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள்.
- இலங்கைப் பிரஜாவுரிமை நிராகரிக்கப்பட்டதால் இந்தியா திரும்ப நேர்ந்தவர்கள்.
- சிறுபராயத்தில் விபரமறியாது பெற்றோருடன் வந்து இப்போது வளர்ந்தவர்களானவர்கள்.

நவீன இலங்கையை உருவாக்க உதிரம் சிந்திய இந்திய வம்சாவளி மலையகத் தமிழரை இலங்கையும், தனது நாட்டின் பிரஜைகள் தாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பியதும் இந்தியாவும் ஒரே கொள்கையுடனேயே அணுகின. அந்த வகையில் இரண்டு நாட்டின் அரசாங்கங்களாலும் கைவிடப்பட்ட இந்த மக்கள் 'எங்கெங்கும் அந்நியமாக்கப்பட்டவர்கள்' எனும் தீர்ப்பெழுதி முடிவுரை காண்கிறது இந்த நூல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாட்டில் தாயகம் திரும்பிய இலங்கையர்கள்

SRI LANKAN REPATRIATES IN TAMI NADU

10

Rehabilitation and Intergration

எம்.வாமதேவனின் ஆய்வு நூல்: அறிமுகக் குறிப்பு

அண்ணாமலை, மண்டபம் கேம்ப், தமிழ்நாடு என தமிழில் 'அட்ரஸ்' எழுதப்பட்ட ஒரு 'ட்ரங்குப்பெட்டியின்' புகைப்படத்தை அட்டைப் படமாகக் கொண்டு ஒரு ஆங்கிலப்புத்தகமா? எனும் கேள்விக்குறியை ஆச்சரியக் குறியாக மனதுக்குள் ஏற்படுத்தும் ஆய்வு நூல் 'தமிழ்நாட்டில் தாயகம் திரும்பிய இலங்கையர்கள்' (Sri Lankan Repatriates in Tamil Nadu).

இலங்கை அரசநிர்வாக திட்டமிடல் சேவையில் பல பதவிகளில் இருந்து அமைச்சுச் செயலாளர் எனும் உயர் அரசு பதவிவரை வகித்து இப்போது ஓய்வு நிலையில் இருக்கும், மலையகக் கல்வியாளர்கள் வரிசையிலும் இடம் பிடித்துக்கொண்டுள்ள எம்.வாமதேவன் அவர்கள் எழுதிய ஆய்வு நூல் இது.

கடந்தவாரம் 'இலக்கியச் சாரல்' பகுதியில் அறிமுகம் செய்யப்பட்ட "எங்கெங்கும் அந்நியமாக்கப்பட்டவர்கள்' எனும் நூல் வெளிவந்த அதே 1989ஆம் ஆண்டு வெளிவந்த இந்த ஆய்வுநூல், அந்த நூல் தாங்கிவந்த விடயத் தின் இன்னொரு பரிமாணத்தை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது எனலாம்.

இலங்கையிலும் இந்தியாவிலும் கூட அந்நியமாக்கப்பட்ட இந்த மக்கள் கூட்டம் தமிழ் நாட்டை தங்கள் தாயகமாக எண்ணி திரும்பி சென்ற போது அல்லது அனுப்பப்பட்டபோது அங்கே அவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்ப திலும் அங்கே பூர்விக தமிழநாட்டு மக்களுடன் ஒன்றிணைப்பதிலும் கிடைக் கப்பட்ட அடைவுகளை மதிப்பாய்வு செய்யும் பணியை இந்த ஆய்வு இலக்காகக் கொண்டுள்ளது. எனவே 'தமிழ்நாட்டில் தாயகம் திரும்பிய இலங்கையர்கள்' எனும் தலைப்புடன் 'புனர்வாழ்வும் ஒன்றிணைத்தலும்' உப தலைப்பாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (Sri Lankan Repatriates in Tamil Nadu - Rehabilitation and integration)

இந்த ஆய்வின் உபதலைப்பாக வரும் 'புனர்வாழ்வும் ஒன்றிணைத்தலும்' என்பது மிகப்பரந்த ஒரு அர்த்தத்தை எடுத்துக்காட்டுகிறது. இந்தியாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்தில் இருந்து இலங்கை வந்து, தலைமுறைகள் கடந்து இலங்கையில் இருந்து மீளவும் தமிழ்நாடு செல்லும் ஒரு மக்கள் கூட்டத்துக்கு தனியே புனர்வாழ்வு மட்டும் போதாது. அவர்கள் அந்த உள்ளூர் மக்களுடன் ஒன்றிணைக்கப்படும்போதே அவர்களது எதிர்காலம் சிறப்பானதாக அமையும் என்பதை இலக்காகக் கொண்டே இந்த ஆய்வு மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த மக்கள் கூட்டத்தில் ஒருவராக இரத்தினபுரி மாவட்டத்தின் லெல்லுப்பிட்டிய தோட்டத்தில் இருந்து இளைஞராக தமிழ்நாடு சென்று பின்னாளில் சட்டத்தரணியாக, சமூக செயற்பாட்டாளராக, எழுத்தாளராக, சிற்றிதழாசிரியராக தன்னை புடம்போட்டுக்கொண்ட ஆ. ராமச்சந்திரன் (திருச்சி தமிழகன்) அண்மையில் ஓர் கட்டுரைத் தொகுப்பு ஒன்றை வெளியிட்டு இருந்தார் (இந்தத் தொகுப்பிலும் எம்.வாமதேவனின் கட்டுரை ஒன்று உள்ளது). அந்த நூலுக்கு அவர் இட்டிருக்கும் தலைப்பு 'மலைய கமும் மறுவாழ்வும்'. இந்த தலைப்பு குறித்து ஒரு வீரகேசரி நேர்காணிலில் அவரிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு தமிழகன் வழங்கிய பதில் அவதானதுக்குரியது. "மறுவாழ்வு, எனும்போதே ஒரு வாழ்வு இழக்கப்பட்டிருக்கிறது என்றுதானே அர்த்தம். எனவே ஒரு வாழ்வைத் தேடும் மக்களுக்கும், தம் வாழ்க்கையை இழந்த மக்கள் மறுவாழ்வைத் தேடுவதற்கும் உள்ள வேறுபாட்டைக் காட்டவே இந்தத் தலைப்பைத் தெரிவு செய்தேன்" என விளக்கமளிக்கிறார் தமிழகன் இராமச்சந்திரன்.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு அழைத்துவரப்பட்டபோது தமது வாழ்வை தமிழ்நாட்டில் தொலைத்த சமூகம், இலங்கையில் மறுவாழ்வு தேட வேண்டியிருந்தது. இலங்கையில் இருந்து மீணடும் தமிழ் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டபோது அங்கு மீண்டும் மறுவாழ்வு தேட நேர்ந்துள்ளது. இப்படி மறுவாழ்வை இலக்கு வைத்தே தம் வாழ்க்கைக் காலத்தை இழந்த மக்கள் கூட்டத்தின் கதையின் விஞ்ஞானபூர்வ ஆய்வுப் பக்கமே எம்.வாம தேவன் அவர்களினால் இந்த நூலில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

ஒரு வகையில் நூலாசிரியர் எம்.வாமதேவன் அவர்களும் இரண்டு தடவை மறுவாழ்வைத் தேடிக் கண்டடைந்தவர்தான். நுவரெலியா மாவட்டத்தின் கொட்டகலை, யதன்சைட்டை பிறப்பிடமாகக் கொண்டு ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரியில் ஆரம்ப இரண்டாம் நிலைக் கல்வியை கற்றவர் பேராதனைப்பல்கலைக் கழகத்தில் படித்துக்கொண்டிருந்த 1963ஆம் ஆண்டு தனது குடும்பத்தில் தாயைத் தவிர தந்தை, சகோதரிகளை ஒரே இரவில் ஹப்புத்தளை- பெரகலைப் பகுதி மண்சரிவினால் இழந்தவர். அந்தப் பெருந்துயரோடு தாயுடன் தனிமைப்பட்டாலும் கற்றுத்தேர்ந்து பட்டதாரி ஆசியராகி, பகுதிநேர பல்கலைக்கழக விரிவுரையாளராகி, அரச தொழிலுக்கு சென்று, தன்னை சமநிலைப்படுத்திக்கொண்டு திருமண வாழ்வில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்து பிள்ளைகளும் பெற்று வாழ்ந்த வேளை, 1983 இன வன்முறை சம்பவங்களால் மீண்டும் பாதிப்புக்கு உள்ளானவர். வத்தளையில் இருந்த தனது வீடு எரிக்கப்பட்டு உடமைகள் சேதமாக்கப்பட்டபோது செய்வறியாது தமிழகம் சென்று தஞ்சமடைந்தவர்.

இப்படி இரண்டாவது மறுவாழ்வுக்காக தமிழகம் சென்றிருந்தவேளை தாம் ஏற்கனவே செய்திருந்த ஓர் ஆய்வின் அடுத்த கட்டமாக நோராட் (NORAD - Norwegian Agency for International Development) நிறுவன நிதி உதவிப் பங்களிப்புடன் மேலும் விரிவுபடுத்தி மேற்கொண்ட ஆய்வே இந்த நூல். ஏற்கனவே லண்டன் லீட்ஸ் பல்கலைக்கழத்தில் முதுமாணிப் பட்டம் பெற்றிருந்த அவர் இந்தியாவில் தங்கியிருக்க நேர்ந்த இந்த காலகட்டத்தில் திருவனந்தபுரம் அபிவிருத்திக் கல்வி நிலையத்தின் ஊடாக புதுடெல்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழத்தில் மேற்கொண்ட M.Phil பட்டத்திற்கான ஆய்வாகவே இந்த முயற்சி இடம்பெற்றுள்ளது.

எனவே, தனது சொந்தவாழ்விலேயே புனர்வாழ்வின் தேவையை உணர்ந்தவராக மறுவாழ்வை வேண்டிநின்ற தனது மக்களின் ஒரு பகுதியினரை எம்.வாமதேவன் ஆய்வுக்களமாக்கியதில் ஆச்சரியமில்லை.

ஒன்பது அத்தியாயங்களைக் கொண்ட இந்த நூலில் முதலாம் அத்தியாயம் ஒரு முன்னோட்டமாக அமைந்துள்ளது. தாயகம் திரும்பிய இலங்கை மலை யகத்தவரின் பின்புலம் பற்றி இரண்டாம் அத்தியாயம் விபரிக்கின்றது. மூன்றாம் அத்தியாயம் அவர்களின் குணாம்சங்களையும், நான்காம் அத்தியாயம் அவர்களுக்காக முன்னெடுக்கப்பட்ட புனர்வாழ்வு திட்டங்கள் பற்றி விபரிக்கின்றது. இதில் அவர்களது பொருளாதார நிலைமை, வீடமைப்பு மற்றும் இதர வசதிகள்,. புனர்வாழ்வுத் திட்டங்கள் மீதான விமர் சனப்பார்வை என முறையே ஐந்தாம், ஆறாம், ஏழாம் அத்தியாயங்கள் அமைந்துள்ளன. ஏழாம் அத்தியாயத்தில் தாயகம் திரும்பிய மக்களுக்காக முன்னெடுக்கப்பட்ட பல்வேறு புனர்வாழ்வு நடவடிக்கைகள் பற்றி விரிவாக பதிவு செய்துள்ளதுடன் 'சிராக்' வெளியீடான 'எங்கெங்கும் அந்நியமாக்கப் பட்டவர்கள்' நூலின் முக்கியத் துவம்பற்றியும் குறிப்பிடு கின்றார்.

எட்டாம் அத்தியாயம் தமிழ்நாட்டு மக்களோடு அவர்களின் ஒன்றிணை வுக்கான சாத்தியங்கள், சாத்தியமின்மைகள் பற்றிய விவாதப்பொருளாக விரிந்துள்ளது. இறுக்கமான சாதிய கட்டமைப்பும் அரசியலமைப்பு ரீதியாக சாதியம் அமைப்பாக்கமும் பெற்றுள்ள தமிழ்நாட்டு சூழலில், சாதிய வன்மம் குறைந்த இலங்கை மலையகப் பகுதிகளில் இருந்து தாயகம் திரும்பிய மக்கள் அந்த மக்களுடன் இரண்டரக் லப்பதில் இருந்த சிக்கலான தன்மை களையும் சாதி அடிப்படையிலான புள்ளிவிபரங்களுடன் விபரிக்கிறார் நூலாசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்தத்தில் தாயகம் திரும்பிய மக்களின் புனர்வாழ்வு என்பது ஒரு சோகக் கதை என 1986ஆம் ஆண்டு ஆப்ரஹாம் எனும் ஆய்வாளர் கூறிய கருத்தை ஆமோதித்திருக்கும் நூலாசிரியர், பல கல்வியாளர்களின் ஆய்வுகள் ஊடாக இந்த சோகக் கதை ஆவணப்படுத்தப்பட்டுள்ளது எனக் குறிக்கின்றார். இந்த புனர்வாழ்வுத் திட்டங்களின் தோல்வி இந்திய அதிகாரிகளுக்கு புனரவாழ்வுத் திட்டங்கள் தொடர்பில் ஓர் படிப்பினையைக் கொடுத்திருக்கக்கூடும் எனவும் கூறுகிறார்.

இந்த ஆய்வின் அடுத்த கட்ட நகர்வாக மேலும் பல ஆய்வு பரப்புகளைச் சுட்டிக்காட்டியுள்ள நூலாசிரியர் ஒன்றரை தசாப்தங்களாக தாயகம் திரும் பியவர்களாக வாழும் இந்த மக்களின் பொருளாதார முன்னேற்றம் மேல் நோக்கியதா, கீழ் நோக்கியதாஅல்லது கிடையானதா என்பதை சமகாலத் தரவுகள் கொண்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டிருப்பதுடன் எதிர்காலத்தில் அது குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படலாம் என பரிந்துரைக்கிறார். (இப்போது ஐந்து தசாப்தங்களை அடைகிறார்கள்)

அதேபோல தமிழ் நாட்டில பரவலாக வாழ்ந்துவரும் இந்த மக்கள் தமிழ் நாட்டுக்கு வெளியே ஆந்திரா, கேரளா, கர்நாடகா போன்ற மாறிலங்களில் சுமார் ஐயாயிரம் குடும்பங்கள் அளவில் (1989ஆம் ஆண்டு) வாழ்ந்துவரு வதற்கான தகவல்கள் உள்ள நிலையில் அவர்கள் தொடர்பான எந்தவொரு ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டுகின்றார்.

மோசமான வாழ்க்கை நிலைமைகள் காரணமாக தாயகம் திரும்பிய ஆரம்ப காலங்களில் உயர் சிசுமரண வீதத்தை எதிர்கொண்ட இந்த மக்களின் குடிப்பரம்பலில் அது மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கலாம் எனவும் அதனையும் ஆய்வுக்கு உட்படுத்த வாய்ப்பு உள்ளதாக கூறுகிறார். அவர்க ளுக்காக உருவாக்கப்பட்ட சிறு கொலனிகள் (சிலோன் காலனி) வெள்ளை யானைகளாகவே அடையாளம் காணப்படவேண்டியள்ளது. அவை தொடர் பான விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என பரிந்துரைக் கின்றார்.

அதேநேரம் இலங்கையில் திறந்த வெளிச்சிறையில் அடைக்கப்பட்டது போன்று தொழிலாளர்களாக வாழ்ந்த மக்கள் நாடற்றவர்களாகவும் அபிவி ருத்தியில் புறந்தள்ளப்பட்டவர்களாகவும் ஆக்கப்பட்டிருந்தார்கள். அதே நேரம் தமிழ் நாட்டில் நாட்டின் அபிவிருத்தியில் பங்கேற்க கூடிய வாய்ப்புப் பெற்றவர்களானார்கள். வீட்டுரிமையாளராதல், மாறுபட்ட தொழில் கட்ட மைப்புகள், தாயகம் திரும்பியோருக்கான சலுகைகள் போன்றன அவர் களுக்கான விடுதலை அம்சங்கள் எனலாம். இலங்கை மலையகத்திலும் இந்தியாவில் தாயகம் திரும்பியவர்களிடத்திலும் ஓர் ஒப்பீட்டு ஆய்வு மேற் கொள்ளப்படுமாக இருந்தால் உண்மையில் இவர்கள் தமது வாழ்விலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுவாழ்விலும் விடுதலை பெற்றுள்ளனரா என்பதை அறிய முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நூலின் அட்டைப்படத்தில் உள்ள 'ட்ரங்கு' (Trunk) பெட்டியின் படமும் அந்த மக்கள் அடைத்து வைக்கப்பட்டவர்கள் என்பதற்கு அருமையான காட்சி. தாயகம் திரும்பும்போது இத்தகைய பெட்டிகளிலேயே தமது உடுதுணிகளை அவர்கள் எடுத்துச்செல்வதுடன் கப்பலில் ஏற்றுவதற்காக தோட்டங்களில் தயாராகும் தேயிலைத் தூள் பெட்டிகள் போன்ற பெட்டிகளை தயாரிப்பர். தோட்டப் பகுதிகளில் இதனை 'இந்தியாப் பெட்டி' என்றும் அழைப்பார்கள். இந்தியாப்பெட்டி அடிக்கும் சத்தம் கேட்கத் தொடங்கியதும் தோட்டங்களில் சோகம் பரவத் தொடங்கிவிடும். தந்தையை அல்லது தாயை இலங்கையில் விட்டு பிள்ளைகள் பிரிக்கப்பட்டு நாடு கடத்தப்பட்ட கதைகள் ஏராளம் உண்டு.

அவைபற்றி இந்த நூலிலே எம்.வாமதேவன் விபரிக்கிறார். அதன் வலியை விளக்கும் விதமாக இந்த அட்டைப் படத் தயாரிப்பை செய்து, நூலினை சென்னை Zen பதிப்பகம ஊடாக வெளியிட்ட, அப்போது தமிழகத்தில் வாழ்ந்த இப்போது லன்டனில் வாழும் மலையக ஆளுமை மு.நித்தியானந்தன் இவ்வாறு குறிப்பிடுகின்றார்...

"முன் அட்டைக்காக இந்த Trunk பெட்டியைத் தேடிப்பிடித்து அதன் மேல் chalk கட்டியில் இந்த முகவரியை எழுதி ஆட்டோவில் ஏற்றி ஸ்ரூடியோவுக்கு எடுத்துக்கொண்டு போனோம். அங்கு படம் எடுக்க வேண்டும் என்றதும் Counter இல் இருந்தவர், passport size படமா எனக் கேட்டார். இல்லை இந்த பெட்டியை படம் எடுக்கவேண்டும் என்றதும் இதையா? என ஆச்சரியத்துடன் கேட்டார். அட்டைப்படம் குறித்து வாமதேவன் மகிழ்ச்சி தெரிவித்திருந்தார்" என்கிறார்.

இலங்கைகும் இந்தியாவுக்கும் பண்டங்களைப் போன்று இந்த மக்கள் பரிமாற்றிக்கொள்ளப்பட்டமை குறித்து ஆங்கிலத்தில் ஒரு ஆக்கத்ததை எழுதியுள்ள கவிஞர் சி.வி. வேலுப்பிள்ளை அதற்கு இட்ட தலைப்பு Human Cargo (மனிதப் பொதிகள்) எனவே நாடுகளுக்கு இடையே பண்டங்களைப் போன்று பரிமாறிக் கொள்ளப்பட்ட மானுடர்களான இந்த மக்களைப் பற்றிய நூலுக்கு இந்த நூலின் அட்டைப்படமே அர்த்தம் நிறைந்த மகுடமாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேயிலைக் காவியம்

11

THE EPIC OF TEA
Politics in the Plantations of Sri Lanka

இலங்கைப் பெருந்தோட்டத்துறையில் அரசியல் ஒரு பார்வை

இலங்கைப் பெருந்தோட்டங்களில் தெளிவாக ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்படும் வேதனைமிக்க அரசியல் நெறிமுறைகளை ஓர் இடது சாரிய பார்வையில் முன்வைக்கும் நூல் தேயிலைக் காவியம். (The Epic of Tea- Politics in the Plantation of Sri Lanka)

இலங்கைக் கம்யுனிஸ்ட் கட்சியின் மத்தியகுழு உறுப்பினரும், ஐக்கிய பெருந்தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவரும் இலங்கைக் கம்யூ னிஸ்ட் கட்சியின் இணை அங்கத்துவ அமைப்பான இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் உபதலைவருமான ஏ.பி.கணபதிப்பிள்ளை எழுதி யுள்ள ஆங்கில நூல் இந்தத் 'தேயிலைக் காவியம்'.

நுவரெலியாவைத் தளமாகக் கொண்டு இன்றும் செயற்பாட்டாளராக இயங்கிவரும் மனித உரிமைச் செயற்பாட்டாளரும் சட்டத்தரணியுமான இவர் ஒரு மார்க்சியவாதி. சோவியத் நாடுகள் பலவற்றுக்கும் பயணம் செய்துள்ள இவர் பல சர்வதேச நாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப் பித்த அனுபவம் மிக்கவர். இவரது மனிதாபிமான செயற்பாடுகளுக்காக சுமார் பதினைந்து லட்சம் அங்கத்தவர்களைக் கொண்ட வியட்நாம் விவசாயிகள் சம்மேளனத்தினால் தங்கப் பதக்கம் வழங்கி கௌரவிக்கப் பட்டவர் என நூலாசிரியர் பற்றிய அறிமுகக் குறிப்பில் சுட்டிக்காட்டப் படுகிறது.

பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளால் இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட முதலாளித்துவ முறைமையில் கட்டமைக்கப்பட்ட தேயிலை இறப்பர் தோட்டங்களில் சுயாதீனம் மறுக்கப்பட்ட மக்களின் அரசியலை இந்த நூல் பேச முனைகிறது. அத்துடன் இவ்வாறு பிணைக்கப்பட்ட தொழில் முறைமையில் இருந்து வெளியேறுவதற்கு அந்த மக்கள் காட்டிய வரலாற்று முனைப்புகளையும் விபரிக்க முயல்கிறது. தொழிற்சங்க கட்ட மைப்பை உருவாக்க அவர்கள் முன்னெடுத்த கடினமான உழைப்பையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்ட முனைகிறது. குறிப்பாக இடதுசாரி இயக்கங்களுடன் இணைந்து தமது தார்மீக உரிமைகளை வென்றெடுக்க அவர்கள் முன்வைத்த அரசியலையும் அவை சட்டவாக்கங்களில் ஏற்படுத்திய தாக்கங்களையும் விளக்க முற்படுவதோடு இந்த மக்களின் குடியுரிமைப் பறிப்புக்கு காரணமான பிற்போக்குத் தலைமைகளையும் அம்பலப்படுத்துகிறது.

பிரித்தானியர் உருவாக்கிய பெருந்தோட்டங்களைப் பின்னாளில் தேசியமயமாக்கி தொடர்ந்து பிராந்திய கம்பனிகள் என தனியார் மயமாக்கி அந்த மக்களின் தொழில் உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் அவர்களது இழக்கப்பட்ட வாழ்க்கையை எடுத்துக் காட்ட முனைகிறது இந்த நூல்.

இன்றைய நிலையில் பல கல்விமட்ட சமூக மாற்றங்களுடன் நடுத்தர வர்க்கமாக நிலைமாற்றம் பெற்றுவரும் சமுதாயமான இவர்கள், நாட்டில் ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடும்போது உள்ளூராட்சி முதல் தேசிய மட்டம் வரை உரிய அரசியல் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள்வதில் இன்னும் போராடிக் கொண்டிருப்பதை விளக்க முனைகிறது.

2011ஆம் ஆண்டு இலங்கை சமூக விஞ்ஞான கழகத்தினால் வெளியிடப்பட்ட இந்தநூல் 165 பக்கங்களைக் கொண்டது. பசுமையான இன்றைய தேயிலை மலைகளையும் அதனை இத்தனை பசுமையாக்க உழைத்த உழைப்பாளர் வர்க்கத்தின் அன்றைய நிலையையும் ஒப்பிட்டுப்பார்க்கும் வகையில் அழகிய அட்டைப்படத்தை வடிவமைத்துள்ளார் அல்பேர்ட் தர்மசிரி.

பெருந்தோட்டத்துறை சமூகத்திலேயே இருந்துவந்த புலமைத்துவம் நிறைந்த ஓர் அரசியல் செயற்பாட்டாளரான ஏ.பி.கணபதிப்பிள்ளை இந்த நூலை எழுதி இருப்பது முக்கியத்துவம் நிறைந்தது என முன்னுரையில் குறிப்பிடுகின்றார் இலங்கை சமூக விஞ்ஞான கழக செயற்பாட்டாளரும் கொழும்புப் பல்கலைக்கழக பேராசிரியருமான ஜயதேவ உயங்கொட. இலங்கையின் சிறுபான்மை சமூகங்களின் உரிமைகள் மறுக்கப்பட்டுவரும் சூழலில் அவர்களது அரசியல் தளம் குறித்த புதிய கண்டோட்டமும் கலந்துரையாடலும் விவாதங்களும் தோற்றம் பெற வேண்டும். சிறுபான்மைச் சமூகங்களின் பிரச்சினைகளை ஒன்றுதிரட்டி ஆழமான ஜனநாயக சிந்தனைகளுடன் கூடிய அகன்ற பார்வை கொண்ட அரசியல் செயற்பாட்டின் அவசியம் நிறைந்த காலகட்டத்தில் அதற்கான பல தூண்டுதல்களை இந்த நூல் முன்வைக்கின்றது என்றும் குறிப்பிடுகிறார் பேராசிரியர் உயங்கொட.

பதினைந்து அத்தியாயங்களைக் கொண்ட இந்த நூல் முதலாவது அத்தியாயத்தில் பிரித்தானிய காலத்தில் பெருந்தோட்டங்களின் அறிமுகம் முதல் கோப்பி- தேயிலைத் தோட்டங்களை உருவாக்குவதற்காக உழைப்பாளர்களை அழைத்துவந்த வரலாற்றையும், அவர்கள் தொழிலாளர்களாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைப்படுத்தப்பட்டமை அவர்களது நாட்கூலி முறையின் ஆரம்ப கட்டம் (1886- 1910) முதலானவற்றை ஆராய்கிறது.

இரண்டாம் அத்தியாயம் முதலாளித்துவம் விருத்தி பெற்ற விதம் மற்றும் பெருந்தோட்டங்கள் எனும் தலைப்பிலும், மூன்றாம் அத்தியாயம் பெருந் தோட்டங்களில் ஆரம்ப கால தொழிற்சங்க இயக்கங்கள் பற்றியும் விபரிக் கின்றது. நான்காம் அத்தியாயத்தில் கோ.நடேசய்யரின் வருகையையும் அவரது தொழிற்சங்க உருவாக்கம் பற்றியும் பேசப்படுகிறது.

ஐந்தாம் அத்தியாயம் பலரும் அறிந்திராத 'பிரஸ்கேடல்' பற்றி பேசுகிறது. 1912இல் லண்டனில் பிறந்து அவுஸ்திரேலியாவில் கல்வி கற்று 1936ஆம் ஆண்டு இலங்கையின் மாத்தளை மடுல்கல்ல ரிலாக்ஸ் தோட்டத்திற்கு புதிய வகையான விவசாயமான பெருந்தோட்டத்துறைக்கு தோட்ட துரையாக வந்து சேர்ந்தவர் மார்க் அந்தனி பிரஸ்கேடல். (Mark Anthony Bracegirdle) அதே நேரம் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான பிரித்தா னிய கம்பனிகளின் தோட்டத்துரைமாரின் அடக்குமுறைகளை எதிர்த்து குரல் கொடுத்து தொழில் இழந்து, பின்னர் லங்கா சமசமாஜ கட்சியில் இணைந்து தொழிலாளர் உரிமைக்காக போராடி, அவருக்கு எதிராக அப்போதைய பிரித்தானிய அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்ததால் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்த நிலையில் 48 மணி நேரத்துக்குள் நாட்டைவிட்டு செல்லு மாறு அரசாங்கத்தினால் உத்தரவிடப்பட்டவர். இறுதியாக கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் பட்டவர். தொழிலாளர்கள் சார்பாக பிரித்தானிய ஆட்சியாளர்கள் பெருந் தோட்டத் தொழிலாளர்களை நடாத்திய முறைமைக்கு எதிரான அவரது குரல் அவரை இந்த கட்டத்துக்கு கொண்டு சென்றுள்ளது.

1938ஆம் ஆண்டு சட்டப்பேரவையில் இவரை நாடு கடத்த கூடாது என உறுப்பினர் பிலிப் குணவர்தன (தினேஸ் குணவர்தனவின் தந்தை) பிரேரணை ஒன்றை முன்வைத்தபோதும் அது தோல்வியடையவே அவர் நாட்டைவிட்டு செல்ல நேர்ந்தது. அவரை வழியனுப்ப துறைமுகத்துக்கு வருகை தந்திருந்த இடதுசாரி அரசியல் செயற்பாட்டாளர்களான என்.எம்.பெரேரா, வேர்னன் குணசேகர, செலினா பெரேரா மற்றும் உடகந்தலாவ சாரங்க தேரோ ஆகியோருடன் பிரஸ்கேடல் தோன்றும நிழற்படம் ஒன்றும் நூலில் சேர்க்கப்பட்டுள்ளது.

ஆறாவது அத்தியாயத்தில் பெருந்தோட்டத்துறையில் இடம்பெற்ற முக்கியமான வேலைநிறுத்தங்கள் பற்றிய குறிப்புகள் தொகுப்பாக தரப்பட்டுள்ளது. தேர்தல் முறைமை மறுசீரமைப்பும் பெருந்தோட்டத் தொழிலாளர்களும் எனும் தலைப்பில் 1931- 1948 கால தேர்தல் முறைமை அதில் பெருந்தோட்ட மக்களை பிரதிநிதித்துவப்படுத்தி எட்டு உறுப்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னர்கள் நாடாளுமன்றத்துக்கு தெரிவான விடயங்களும் குறிப்பிடப்படு கின்றன. எட்டாம் அத்தியாயமானது குடியுரிமையும் இந்தியாவும் எனும் தலைப்பில் இந்த மக்கள் தொடர்பில் செய்து கொள்ளப்பட்ட பல்வேறு ஒப்பந்தங்கள் குறித்து பேசப்படுகிறது.

மலையகப் பெருந்தோட்டங்களில் இயங்கிய இயங்கும் தொழிற் சங்களில் இடம்பெற்ற பெரும் பிளவுகள் குறித்து ஒன்பதாவது அத்தியாயம் விரிவாக விவரிக்கிறது. இதில் பிரதானமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் இருந்து பிரிந்துசென்று உருவான அ. அஸீஸ் தலைமையி லான ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், வி.கே.வெள்ளையன் தலைமை யிலான தொழிலாளர் தேசிய சங்கம், பெ.சந்திரசேகரன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணி ஆகியன பற்றிய குறிப்புகளே உள்ளன. (இவை மூன்றுமே இப்போது தமிழ் முற்போக்கு கூட்டணியாக இணைந்து செயற்படுகிறது).

1956இல் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் இருந்து ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தொழிற்சங்கங்களாக பிரிந்த போதும் அந்த மக்களின் அரசியல் இருப்பின் அவசியம் கருதி 1959ஆம் ஆண்டு இரண்டு காங்கிரஸ்களும் மீண்டும் இணைந்தன. அதன்படி இ.தொ.கா தொடர்ந்தும் தொழிற்சங்கமாக இயங்குவது என்றும் ஜ.தொ.காவின் அரசியல் பிரிவான இலங்கை ஜனநாயக காங்கிரஸ் (Ceylon Democratic Congress) எனும் பெயரில் அரசியல் செயற்பாடுகளில் இயங்குவது எனவும் உடன்பாடு காணப்பட்டது. அதற்கான உடன்படிக்கையில் இ.தொ.கா சார்பில் எஸ். தொண்டமான், சோமசுந்தரம், ராஜலிங்கம் ஆகியோரும். ஜ.தொ.கா சார்பில் அஸீஸ், நாயர், நாயுடு ஆகியோரும் கையெழுத்து இட்டு உள்ளனர். 1959 டிசம்பர் 23ஆம்திகதி இரண்டு காங்கிரஸ்களும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில், பெருந்தோட்டத்துறை சமூகத்தினரின் பிரச்சினைகளை வீரியத்துடன் எதிர்கொள்ள தாங்கள் இவ்வாறு மீண்டும் இணைந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இந்தக்கூட்டு நெடுநாட்கள் நீடிக்கவில்லை (1960ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் இலங்கை ஜனநாயக காங்கிரஸ் 'மரம்' சின்னத்தில் சார்பில் போட்டியிட்ட வி.கே.வெள்ளையன் வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனம் மிகவும் முற்போக்கானது - கட்டுரையாளர்)

அதேநேரம் உலக கொம்யுனிஸ்ட் இயக்கம் பிளவுண்டு மாஸ்கோ அணி - பீஜிங் அணி என இரண்டாக ஆனபோது அது மலையகப் பெருந்தோட்ட தொழிற்சங்க இயக்கத்தில் ஏற்பட்ட பிளவுகளுகளும் குறிப்பிடப்பட் டுள்ளது.

என்.சண்முகதாசனை தலைவராகவும் எஸ்.நடேசனை பொதுச் செயலா ளராகவும் கொண்டு இயங்கிய இலங்கைப் பெருந்தோட்டத் தொழிலாளர் சங்கமும் இரண்டாக பிளவுண்டு நடேசன் தலைமையில் கம்யுனிஸ்ட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சியின் (மாஸ்கோ அணி) தொழிற்சங்கமாக ஐக்கிய பெருந்தோட்டத் தொழிலாளர் சங்கமாக உருவானது (இதன் இப்போதைய தலைவராகவே இந்த நூலாசிரியர் திகழ்கிறார்).

அத்தியாயம் பத்தானது ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி ஆட்சி காலங்களில் பெருந்தோட்டத்துறையில் கொண்டுவந்த மாற்றங்களை விவரிக்கிறது. அத்தோடு அந்த காலங்களில் இடம்பெற்ற பல்வேறு வன்செயல்கள் தொழிலாளர் மக்களிடையே ஏற்படுத்திய தாக்கங்களும் விரிவாகப் பேசப்படுகின்றது, தோட்டத்துறையில் கல்வி நிலை குறித்து பதினோறாம் அத்தியாயம் எழுதப்பட்டுள்ளது. வறுமையும் இழப்பும் எனும் தலைப்பில் எழுதப்பட்டுள்ள பன்னிரண்டாம் அத்தியாயத்தில் இலங்கையின் வறுமை ஒழிப்பு திட்டமான சமுர்த்தியில் வெறும் 7 சதவீதம் மாத்திரமே பெருந்தோட்டப் பகுதிகளை உள்ளடக்கி உள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது.

பெருந்தோட்டப்பகுதிகளில் உள்நாட்டு நிர்வாக கட்டமைப்பு (பிரதேச செயலகம், கிராம அலுவலர் பிரிவு) அமையப்பெற்றுள்ள விதம் குறித்து அட்டவணைகளுடன் அத்தியாயம் 13இல் விபரிக்கிறது. தேயிலை ஏற்றுமதி தொடர்பான புள்ளிவிபரங்கள் ஒப்பீட்டடிப்படையில் பதினான்காம் அத்தியாயத்திலும் மில்லேனியம் அபிவிருத்தி இலக்குகளும் பெருந்தோட்டத் தொழிலாளர்களும் எனும் தலைப்பில் பதினைந்தாவது அத்தியாயத்திலும் விவாதிக்கப்பட்டுள்ளது.

தனது பெற்றோருக்கு நூலை சமர்ப்பணம் செய்துள்ள நூலாசிரியர் ஏ.பி.கணபதிப்பிள்ளை தனது நன்றியறிதலில் அண்மையில் காலமான இடதுசாரி செயற்பாட்டாளர் மார்ஷல் பெரேரா (டிலான் பெரேராவின் தந்தை) நாட்டுப்புற கலைஞரும் தனது தொழிற்சங்க சகாவுமான பசறையூர் கே.வேலாயுதம் ஆகியோர் தனக்கு வழங்கிய உதவிகளை நினைவு கூர்ந்து உள்ளார்.

இறுதியாக, பெருந்தோட்ட சமூகத்தினர் வாழும் பிரதேச சபை எல்லைகள் மீள்நிர்ணயம் செய்யப்பட்டு உள்நாட்டு நிர்வாகத்தில் அவர்களுக்கான பங்களிப்பை அதிகரிக்க வேண்டும் எனும் அதிகாரப்பகிர்வு முன்மொழிவைச் செய்யும் அதேவளை பெருந்தோட்டத்துறை சமூகத்தின் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு பொறுப்புடன் பணியாற்ற வேண்டியது அரசினதும் அவர்தம் பிரதிநிதிகளினதும் பொறுப்பு என முடிவுரை எழுதியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12 பூமியில் வாழ்வின் வயதும் திராவிட கலாசாரமும்

ANALYSIS OF AGES OF LIVES ON EARTH AND DRAVIDIAN CULTURE

இராவணன் முதல் மலையகம் வரையான சக்தீ அ. பால அய்யாவின் ஆய்வுப் பார்வை

இராமாயணத்தில் வரும் புஷ்பக விமானம் முதலில் குபேரனிடம் இருந்தது என்றும் அதனை ராவணன் அபகரித்து, ராமர் இலங்கையை வென்றவுடன் அது அவர் கைக்கு வந்தது. அதில் இலங்கையில் இருந்து அவர் அயோத்தி வரை விரைவாகப் பறந்து சென்றார் எனும் புராணக் கதைகள் ஒருபுறமிருக்கின்றது.

அது அவ்வாறிருக்க அந்த புஷ்பக விமானத்தின் விபரங்களைத் தேடு வதற்காகவும் இராவண மன்னனின் தொலைந்துபோன மரபுரிமையை ஆய்வு செய்யவும் இலங்கை சுற்றுலா மற்றும் விமான சேவைகள் அமைச்சு உத்தி யோகபூர்வமாக அறிவித்தல் விடுத்துள்ள இந்த 2020 ஜூலை காலப் பகுதியில் அந்த இராவணன், இலங்கையும் இணைந்திருந்த தென் இந்தியா வின் மன்னனாகத் திகழ்ந்தான் என்றும் அவன் அப்போதே ஆரிய எதிர்ப்பை பலமாக காட்டியதால் மிகமோசமானவனாக வரலாற்றில் கட்டமைக்கப் பட்டுள்ளான் என தனது ஆய்வு நூலில் கூறுகின்றார் மூதறிஞர் சக்தீ பால அய்யா. அந்த ஆங்கில ஆய்வு நூலே 'பூமியில்-வாழ்வின் வயதும் திராவிட கலாசாரமும்' (Analysis of Ages of lives on earth and Dravidian Culture).

சி.வி. வேலுப்பிள்ளையின் 'In Ceylon's Tea Garden' எனும் ஆங்கில நெடுங்கவிதையை 'இலங்கைத் தேயிலைத் தோட்டத்திலே' (செய்தி பதிப்பக வெளியீடு- 1969) என தமிழாக்கம் செய்ததனாலும், 'சொந்த நாட்டிலே...' (சுதந்திரன் வெளியீடு), சக்தீ பாலையா கவிதைகள் (துரைவி வெளியீடு - 1998) என தனது கவிதைத் தொகுப்புக்கள் ஊடாகவும் ஒரு கவிஞராகவே பார்க்கப்பட்டு வந்துள்ள சக்தீ பால அய்யா பன்முக ஆளுமை மிக்கவர். தமிழைப் போலவே ஆங்கிலத்திலும் பாண்டித்தியம் பெற்ற அவர் ஓர் சிறந்த ஓவியரும் கூட. ஓவியம் மற்றும் சிற்ப கலையை 1943ஆம் ஆண்டிலேயே கொழும்பு, இலங்கைத் தொழிநுட்ப கல்லூரியில் கற்றவர்.

இலங்கையின் பிரபல ஓவியரும் விரிவுரையாளருமான J.A.D. Perera

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வின் நேரடி மாணவனான இவர் 1952ஆம் ஆண்டு அவரது தலைமையின் கீழ் இலங்கைத் தொழிநுட்ப கல்லூரியின் ஒரு பகுதியாக இயங்கிய, கவின் கலைகளுகளுக்கான ஹேவூட் கல்லூரியில் (Heywood College of Fine Arts, Colombo) 1952ஆம் ஆண்டுவரை அரச சேவையில் விரிவுரையாளராக இருந்தவர்.

1925 ஆகஸ்ட் 26ஆம் திகதி நுவரெலிய மாவட்டத்தின் தலவாக்கலை லிந்துலையில் இயற்கை மருத்துவரான அப்பாவு - லக்ஷ்மி அம்மாள் தம்பதியருக்கு பிறந்த பாலையா எனும் இயற்பெயர் கொண்டவர், தனது படைப்புகளுக்காக சக்தீ அ. பால அய்யா என தன் பெயரை வைத்துக் கொண்டவர். சக்தீ என்பதில் 'த்தீ' (Fire and Power) வரவேண்டும் என்பதிலும் பாலையா என்பதில் பாலை என வருவதால் பால அய்யா வரவேண்டும் என்பதிலும் இடையே 'அ' என்பது தனது தந்தையின் அப்பாவு எனும் பெயரைக் குறிப்பதாகவும் இருக்க வேண்டும் என்பதிலும் சிரத்தை எடுத்துக் கொண்டவர்.

மகாகவி பாரதியின் தாக்கத்துடன் வளர்ந்த அவர் ஜிட்டு கிருஷ்ண மூரத்தி போன்ற தத்துவவியலாளர்களால் ஈர்க்கப்பட்டவர். அவரை நேரடியாக சந்தித்தும் உள்ளார். இறுதிவரை பிரம்மச்சாரியாக, மாமிசம் உண்ணாதவராகவே வாழ்ந்து மறைந்த இவர் கவிஞர், ஓவியர், எழுத்தாளர், ஊடகவியலாளர், மெல்லிசைப் பாடலாசிரியர், வானொலி நிகழ்ச்சித் தொகுப்பாளர் (இலங்கை வானொலி), மானுடவியலாளர், விரிவுரையாளர் என பன்முகம் கொண்டவர். 1956ஆம் ஆண்டில் வீரகேசரி பத்திரிகையில் துணை ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ள இவர் 'வளர்ச்சி', 'மாவலி' (தொழிலாளர் தேசிய சங்க இதழ்), ஆகியவற்றின் ஆசிரியராகவும் சில காலம் தமிழரசு கட்சியின் 'சுதந்திரன்' பத்திரிகையிலும் பணியாற்றியவர்,

இவரது மானுடவியல், வரலாற்றியல் ஆய்வின் ஆர்வம் காரணமாக எழுதிய கட்டுரைகளின் தொகுப்பே இந்த ஆங்கில ஆய்வு நூல். 2011ஆம் ஆண்டு பாக்யா பதிப்பகத்தின் ஊடாக வெளிவந்துள்ள இந்த நூல் 98 பக்கங்களையும் 4 அட்டவணைகளைப் பின்னிணைப்பாகவும் கொண்டது. இந்த நூல் 16 கட்டுரைகளை உள்ளடக்கியது. இந்த நூலுக்கான தகவல்கள் புராணக்கதைகள், வரலாற்று குறிப்புகள், மதங்கள் - கலாசாரம்- வழக் காறுகள் - நம்பிக்கைகள் - மொழிகள் மற்றும் இனங்கள் பற்றிய ஆய்வுக் குறிப்புகள் ஆகியவற்றோடு சமகால கல்வியாளர்கள், புலமையாளர்கள், ஆய்வறிஞர்களின் கருத்துக்களையும் மேற்கோள் காட்டி எடுக்கப்பட்டுள் ளதாக முன்னுரையில் குறிப்பிடுகிறார் சக்தீ பால அய்யா .

முதலாவது கட்டுரை கால (நேர) சுழற்சி கடற்கோள்கள் பற்றிய சிறு அறிமுத்தைத் தருகிறது. அதேபோல இரண்டாவது கட்டுரை பூமியில் வாழ்வின் வயதையும் மானுடத்தின் தோற்றத்தையும் Pierre Lecomte du

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Nouy என்ற தத்துவாசிரியர், W.A.Parkers போன்ற அறிஞர்களை மேற்கோள் காட்டி விபரிக்கிறது. Pierre Lecomte du Nouy எழுதிய Human Destiny என்ற நூல் குறித்த அறிஞர் Parkersஇன் பார்வையில் இருந்தே நூலாசிரியர் அணுகுகிறார். பூமியில் உயிரினங்களின் தோற்றம் முதல் குரங்கு, மனிதன் மற்றும் இன்றைய சமூக தோற்றம் வரையான சுருக்கமான பார்வையாக அமைகிறது.

இரண்டாவது கட்டுரை குமரிக்கண்டம் மற்றும் கடற்கோள்கள் பற்றிய பார்வையைக் கொண்டுள்ளது. பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் இன்றைய வங்காள விரிகுடாவில் இணைந்திருந்த லெமூரியா கண்டம் பின்னர் காலத்துக்கு காலம் ஏற்பட்ட கடற்கோள் காரணமாக கண்டங்கள் பிரிந்து சென்றதன் அடிப்படையில் (அல்பிரட் வாக்னர் எனும் அறிஞரின் கண்ட நகர்வு கோட்பாடு இங்கே நினைவு கூரத்தக்கது - கட்டுரையாளர்) உருவான குமரிக்கண்டம் தொடர்பாக எழுதி உள்ளார். அத்தகைய குமரிக்கண்டத்தில் இலங்கையும் இந்திய துணைக்கண்டத்தில் இணைந் திருந்ததாக சுட்டிக்காட்டும் நூலாசிரியர் அவை திராவிட தேசமாக இருந்தது என வாதிடுகிறார்.

மூன்றாவது கட்டுரையில் மானுட நாகரீகமும் தமிழ் மொழியும் எனும் தலைப்பிலும் அடுத்த கட்டுரையில் மதுரைத் தமிழ்ச் சங்கம் குறித்தும் எழுதுகிறார். சங்ககால இலக்கியமான சிலப்பதிகாரத்தில், குமரிக்கண்டத் தில் இருந்து 49 தீவுகள் நகர்ந்து சென்ற தகவல் இருப்பதாகவும் குறிப்பிடு கிறார். இந்த தீவுகளில் எல்லாம் தமிழ் மொழியின் பயன்பாடும் திராவிட கலாசாரத்தின் தாக்கமும் தொடர்ந்து வந்துள்ளதாகவும் கடற்கோள்களி னால் பல தீவுகள் கடலில் மூழ்கிவிட்டதாகவும் குறிப்பிடுகிறார்.

சைவசித்தாந்தம் மற்றும் கதாநாயக வழிபாட்டு முறை (Hero worship) முறை தொடர்பாக ஐந்தாவது கட்டுரையில் குறிப்பிடும் நூலாசிரியர் இயற்கை வழிபாட்டு பண்பாட்டைக் கொண்ட திராவிட பண்பாட்டுக்குள் ஆரியர்கள் திட்டமிட்டே கதாநாயக வழிபாட்டைத் திணித்தனர் என்கிறார். இன்றைய இலங்கை அன்றைய 'அலங்கம்' என்றும் சிங்கள மொழியானது திராவிட மொழிகளின் கலப்பு என்றும் அதனை காஞ்சிபுரத்தை பூர்விக மாகக் கொண்ட சங்கைக்குரிய புத்தகோஷா எனும் மதகுருவிடம் இருந்தே தோற்றம் பெறுகிறது என்கிறார். மன்னன் தேவநம்பியன் (திஸ்ஸ) ஒரு தெலுங்கராக அல்லது மலையாள திராவிடராக இருந்திருக்க வேண்டும் என கூறும் இவர், இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதியில் வாழும் தமிழர்கள் தென்னிந்திய மலையாள திராவிட வழி வந்தவர்கள் என்கிறார்.

'திராவிட கலாசாரமும் நாகரீகமும்' எனும் தலைப்பில் திராவிடர்களின் வரலாற்றை விபரித்துள்ள கட்டுரையை அடுத்து 'இலங்கைத் தீவும் பௌத் தமும்' எனும் ஒரு கட்டுரையையும் எழுதி உள்ளார். இன்றைய இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானது இணைந்திருந்த குமரிக்கண்டத்தில் 'அலங்கன்' என்றே அழைக் கப்பட்டது என்றும் அதுவே தமிழில் இலங்கை என்றும் சிங்களத்தில் லங்கா என்றும் மருவியது என்கிறார். வேத யுகத்தில் ஆரியர்கள் மெதுவாக தென் னகப் பிராந்தியத்துக்குள் நுழைந்ததாகவும் இராம-இராவண யுத்தம் அதனை ஒட்டியதே என்கிறார். ராவணனும் அதற்கு பிறகு இலங்கையை ஆண்ட மகா பராக்கிரம்பாகு, காலிங்கன், காசியப்பன், முகலன், எல்லாளன், பண்டாரவன்னியன், தேவநம்பியர் (திஸ்ஸன்), கண்ணப்பன் (கண்டி விக்கிரம ராஜசிங்கன்) போன்ற அனைவரும் திராவிட ஆட்சியாளர்களே என்கிறார்.

புராண கதைகளுக்கு மாறாக பத்தாவது இராவணன் எனும் தலைப் பிலான கட்டுரை இந்த நாழிகைகளில் (2020) சுவாரஷ்யமான வாசிப்பு அனுபவத்தைத் தரவல்லது. பத்துத்தலை இராவணன் என புராணங்கள் பத்துத் தலைகளைக் கொண்டவனாக கற்பனைப் பாத்திரமாக காட்சிப் படுத்த முயல்வது இராவணனின் உண்மை வரலாற்றை மறைக்கவே என்றும் அது பத்துத்தலை இராவணனன் அல்ல பத்தாவது தலைமுறை யான இராவணனைக் குறிப்பது எனவும் விளக்குகிறார்.

கிறிஸ்துவுக்கு முன் 3000ஆம் ஆண்டில் கடற்கோளால் இலங்கைத் தீவு தனிமைப்படுத்தப்படுவதற்கு முன்னர் அலங்கன் எனும் தலைநகரத்தைக் கொண்டு ஆட்சிசெய்த தென்னிந்திய மன்னனே பத்தாவது இராவணனன் என்கிறார். ஆரிய குடிகளையும் அவர்தம் வழிபாட்டு முறைமைகளையும் எதிர்த்து நின்று போராடிய மன்னன் என்கிறார். ஆரியர்களைப் போற்றிப் புகழும் வகையில் அவர்களது வழிபாட்டு முறைகளை ஊக்குவிக்கும் வகையில் இராமாயண காவியம் வற்புறுத்தி எழுதப்பட்டுள்ளது என்றும் அப்போதைய ஆட்சியாளர்களின் வற்புறுத்தலின்பேரில் விருப்பம் இல்லாம லேயே கவிஞர் கம்பர் இராமாயண காவியத்தை எழுதியுள்ளார் என்கிறார்.

இராவணனை எதிரியாக சித்திரித்து இராமாயண காவியத்தில் எழுதப் பட்டுள்ளபோதும் பத்தாவது இராவணன் இயற்கை வழிபாடுகளை விரும்பிய, சைவ சித்தாந்த மரபுக்குரிய இசையிலும் கலையிலும் நாட்டம் கொண்டிருந்த சக்திமிக்க சக்கரவர்த்தியாக திகழ்ந்தவன் என்கிறார். ராவணனிடம் இசை கற்பதற்காக லக்ஷ்மனனை துணைக்கு அழைத்துக் கொண்டு வந்த சீதையை இராவணன் கடத்திவைத்துக் கொண்டதாக இராவணனின் ஒன்றுவிட்ட சகோதரனான விபீஷனன் தனது அண்ணனை வீழ்த்த அவிழ்த்துவிட்ட பொய்க்கதையே வரலாறாகிவிட்டது என்கிறார் நூலாசிரியர்.

இப்போது ராவணா விமானத்தைக் கொண்டே சீதையைக் கடத்திய தாகவும் இராவணனை போரிட்டு வீழ்த்தி சீதையை மீட்டுச் சென்றபோது ராமர் கொண்டு சென்ற வரலாற்றை அதாவது காணாமல் போன விமானம் பற்றிய தகவல்களைத் திரட்ட இலங்கை அரசாங்கம் இப்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தியோகபூர்வ அரச அறிவிப்பை விமான சேவைகள், சுற்றுலா அமைச்சின் ஊடாக வெளியிட்டு இருப்பது சுவாரஷ்யமிக்கது.

இலங்கையும் புராண எண்ணக்கருக்களும் எனும் தலைப்பிலும் ஒரு கட்டுரை எழுதப்பட்டுள்ள அதேவேளை கல்விப்புலமையாளர்கள், ஆய்வாளர்களின் பெயர்களையும் அவர்களது கட்டுரைகளையும் திகதி, பத்திரிகைகளையும் மேற்கோள் காட்டி எழுதி இருக்கும் 'கல்வியாளர்களின் பார்வையில்' எனும் கட்டுரை சக்தீ பால அய்யாவின் பரந்த வாசிப்புக்கு சாட்சி பகர்கிறது. பேராசிரியர் நீலகண்ட சாஸ்த்திரி (Traditional Culture in a South East Asia), பேராசிரியர் எம்.எச். குணத்திலக்கவின் சார்க் மாநாட்டு கட்டுரை (Cultural Interaction 10/10/1996 Ceylon Daily News), பேராசிரியர் J.B. திசாநாயக்க வின் 'We the Sinhalese' (Island 14th February 1995) கட்டுரை, தொல்பொருளியல் திணைக்களத்தின் கலாநிதி சிரான் தெரணியகல 'சுதேச இலங்கை' எனும் தலைப்பில் ஆற்றிய உரை (Ceylon Daily News 12/02/1997), எம்.எல். சுபசிங்க Ceylon Daily News 12/03/1997) எழுதிய 'Sinhala Mixed Race' எனும் கட்டுரை, உப்பாலி ஜயவர்தன Ceylon Daily News 14/01/1997) எழுதிய "Integration with India" என பலரதும் கட்டுரைகளையும் மேற்கோள்காட்டி அவர்களது கூற்றுகளையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறு இலங்கை இந்திய தொடர்புகளை வரலாற்றாசிரியர்களின் குறிப்புகளுடன் இணைந்து தந்துள்ள நூலாசிரியர் சுதந்திரத்துக்குப் பின்னான இலங்கை எனும் தலைப்பில் அண்மைய இந்திய வம்சாவளியினரான (recent Indian origin) மலையகத் தமிழரின் குடியுரிமைப் பறிப்பு அதன் பின்னதான அவர்களின் முன்னகர்வுகள் குறித்தும் ஒரு கட்டுரையை எழுதி உள்ளார்.

1952ஆம் ஆண்டு ஆசிரியர்களுக்கான வழிகாட்டி நூலாக 'Psychology Art and Methods of Teaching' எனும் ஆங்கில நூலை எழுதி வெளியிட்டுள்ள சக்தீ அ. பால அய்யாவின் இரண்டாவது ஆங்கில நூல் இந்த Analysis of Ages of lives on earth and Dravidian Culture. வரலாற்றை வாசிக்க விரும்புவோருக்கும் அதனை சமகால நடைமுறைகளோடு ஒப்பிட்டுப் பார்க்க ஆர்வம் உள்ளவர்களுக்கும் சுவாரஷ்யமான வாசிப்பு அனுபவத்தைத் தரவல்லது இந்த ஆய்வு நூல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13 இலங்கையில் சமூக அபிவிருத்தியும் பெருந்தோட்டப்பகுதிகளின் வறுமையும்
SOCIAL DEVELOPMENT AND POVERTY IN THE PLANTATION IN SRI LANKA

மலையகத்தில் வறுமையின் பக்கங்களை விஞ்ஞான பூர்வமாக விளக்கும் கீத.பொன்கலனின் ஆய்வு நூல்

ஒரு நூற்றாண்டு துயரத்தின் பின்னர் தமக்கு தாமே உதவியாக இருந்து கொள்ளவதே சரியானது என்பதை உழைப்பாளர்கள் உணரத் தொடங்கி யுள்ளார்கள். தமது பல கசப்பான அனுபவங்களின் ஊடாக அதனை அறிந்து கொண்டுள்ளார்கள். அவர்களுக்கு எவ்வாறு உதவ வேண்டும் என்பதை அவர்களைத் தவிர வேறு யாரும் உணர்ந்தவர்களாக இல்லை

- கோ.நடேசய்யர்

எனும் மலையக தேசபிதா கோ. நடேசய்யரின் தீர்க்கதரிசனம் மிக்க மேற்படி கூற்றை பின்னட்டைப் படத்தில் தாங்கி, இலங்கை மலையகத் தமிழர்களின் அரசியல் வரலாறு (History of Upcountry Tamils of Sri Lanka) எனும் ஆங்கில நூலை எழுதிய மறைந்த தொழிற்சங்கவாதி எஸ். நடேசன் அவர்களுக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ள, கத்தோலிக்க மதகுருவாகவே வாழ்ந்து மறைந்தாலும், மலையகத் தமிழ் மக்களின் வாழ்க்கை குறித்த ஆய்வுகளில் தனது வாழ்நாளை அர்ப்பணித்துக்கொண்ட வடமாகாணத்தை பிறப்பிடமாகவும் பூர்வீகமாகவும் கொண்ட அருட்பணி. கீத பொன்கலன் எழுதிய மலையக வறுமை நிலை குறித்தும் இலங்கையின் அபிவிருத்தியில் மலையகம் நிற்கும் இடம் குறித்தும் ஆராயும் ஆங்கில ஆய்வு நூல் 'இலங்கை யில் சமூக அபிவிருத்தியும் பெருந்தோட்டப்பகுதிகளின் வறுமையும்' (Social Development and Poverty in the Plantation in Sri Lanka)

இலங்கை மலையகத்தின் ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தின் பண்டாரவளை நகரத்தில் இருந்து சில கிலோமீற்றர் தொலைவில் 'லியோ மார்கா ஆஸ்ரமம்' எனும் ஆஸ்ரமம் அமைத்து வாழ்ந்தாலும் அவரை பாதிரியார் உடையிலும் தோற்றத்திலும் பார்த்தவர்கள் அரிது. இலங்கைத் தேசிய உடையை ஒத்த ஒரு மேல்சட்டை, நீளக்காற்சட்டை தோளில் ஒரு 'சோல்னா பை' என ஒரு பத்திரிகையாளருக்கே உரிய தோற்றத்துடன் வலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தவர் Father Guy என பலராலும் அழைக்கப்பட்ட அருட்பணி S. Guy De Fontgallend. இப்படி ஆங்கிலத்தில் எழுதப்படும் பெயரை தமிழில் கீத. பொன்கலன் என்றே எழுதிவந்தார் அவர்.

'இலங்கை மலையகத் தமிழர்களும் அரசியலும்' என தமிழிலும் ஒரு நூலை எழுதி உள்ள கீத. பொன்கலன் மலையக மக்களின் சமூக, அரசியல் அக்கறையும் ஆய்வு நோக்கும் கொண்டு வாழ்ந்தவர். பேராசிரியர் பஸ்தியாம்பிள்ளை, பாலசிங்கம், கே.ஏ. ஞானமுத்து ஆகியோர் வரிசையில் மலையகத்தவர்கள் இல்லாதபோதும் மலையகம் குறித்த ஆய்வு எழுத்துக் களைத் தந்தவர்கள் வரிசையில் Fr.கீத.பொன்கலனுக்கு தனியான இடமுண்டு.

இறையியலில் முதல் இரு பட்டங்களையும் பெற்றுக் கொண்டுள்ள போதும் பெல்ஜியம் நாட்டில் சமூகவியல் துறையில் முதுமாணி பட்டம் பெற்றவர் Fr. Guy.

'இலங்கையில் சமூக அபிவிருத்தியும் பெருந்தோட்டப் பகுதிகளின் வறுமையும்' எனும் தலைப்பில் இவர் எழுதி இருக்கும் இந்த நூலின் ஆய்வுக்குரிய காலப்பகுதியாக அவர் தெரிவு செய்து இருக்கும் 1972 முதல் 2002 எனும் முப்பதாண்டு காலம் மலையக வரலாற்றில் முக்கியமான காலப்பகுதி.

பெருந்தோட்டத்துறைப் பொருளாதாரத்தை இலங்கையில் உருவாக்கிய பிரித்தானியரிடம் இருந்து 'தேசியமயமாக்கல்' எனும் நிகழ்ச்சி நிரலின் கீழ் இலங்கை அரசு பெருந்தோட்டத்துறையினைப் பொறுப்பேற்ற ஆண்டு 1972. அதற்காக உருவாக்கப்பட்ட மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபை (ஜனவசம - ஜனத்தா வத்துயாய சங்வர்தன மண்டலய / JEDB - Janatha Estate Development Board), இலங்கை மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் (SL SPC - Sri Lanka State Plantation Corporation எஸ். பி. சி போன்ற அரச அமைப்புகளுக்கு பெருந்தோட்டங்களைக் அரசாங்கம் கொண்டு வந்த ஆண்டு 1972.

1972 முதல் 1992 வரையான 20 ஆண்டு காலப்பகுதியில் JEDB, SLSPC ஆகிய இந்த இரண்டு நிறுவனங்களும் தனியே பெருந்தோட்டங்களை மாத்திரமே நிர்வகிக்கவில்லை. அந்த பெருந்தோட்டங்கள் சார்ந்த சமூகத் தினரையும் இந்த இரண்டு நிறுவனங்களே முகாமை செய்தனர், நிர்வகித் தனர். அந்த மக்களது சமூக நலனோம்பு விடயங்களைக் கவனிப்பதற்காக மேற்படி இரண்டு நிறுவனங்களிலும் SDD - சமூக அபிவிருத்தி பிரிவுகளைக் கொண்டிருந்தன.

1992ஆம் ஆண்டுகளாக மீண்டும் தனியார்மயப்படுத்தலுக்கு உள்ளான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்தோட்டத்துறையின் நிர்வாகமானது ஆர். பி. சி எனப்படும் பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளிடம் ஒப்படைக்கப்பட்டபோது (Regional Plantation Company) அதே 'சமூக நலனோம்பு' விடயங்களைக் கவனித்துக் கொள்ள உருவாக்கப்பட்டதே 'ட்ரஸ்ட்'. அதுதான் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நிதியம். (PHDT - Plantation Human Development Trust)

'தேசியமயமாக்கல்' என பெருந்தோட்டங்களை பிரித்தானியர் வசம் இருந்து பெற்றுக் கொண்டபோதும் அங்கு வாழும் மக்களை நாட்டின் 'மக்களாக' (people / citizens) கருதி ஏற்றுக்கொண்டு சமூக நலனோம்பு (Social Welfare) விடயங்களாக கருதி அரச பொதுசேவையில் இணைத்துக் கொள்ளாது 'மனிதர்கள்' (Human) என கம்பனிகளே தமது தொழிலாளர் களைப் பார்த்துக் கொள்ளவேண்டும் எனும் நிலைப்பாட்டை எடுத்தது அரசாங்கம்.

1972ஆம் ஆண்டு சோஷலிச பொருளாதாரத்தை இலக்காக கொண்டு தேசியமயமாக்கல் திட்டத்தைக் கொண்டு வந்த ஸ்ரீ லங்கா சுதந்திரகட்சி, இடதுசாரிகள் இணைந்த அரசாங்கமும் 1977ஆம் ஆண்டு முதலாளித்துவ பொருளாதாரத்தை இலக்காகக் கொண்டு அமையப்பெற்ற ஐக்கிய தேசிய கட்சி 1992இல் தனியார்மயமாக்கியபோதும் மலையக மக்கள் தொடர்பில் நடந்துகொண்ட விதம் என்னவோ ஒன்றுதான்.

எனவே இந்த இரண்டு காலப்பகுதியையும் உள்ளடக்கிய அரச கூட்டுத் தாபனங்களின் கீழான 20 ஆண்டுகளும், தனியார் பிராந்திய கம்பனிகளினது ட்ரஸ்ட்டின் கீழ் பத்தாண்டுகளும் என முப்பதாண்டு கால சமூக நலனோம்பு அபிவிருத்தித் திட்டங்களை அலசி ஆராய்ந்து செலவிடப்பட்ட தொகை, விதம், அதன் பெறுபேறுகள் என அனைத்தையும் ஆய்வுக்கு உட்படுத்தி யுள்ள நூல் இது.

2003ஆம் ஆண்டு பண்டாரவளை லியோ மார்கா ஆசிரமத்தால் வெளியி டப்பட்டுள்ள இந்த நூல், 128 பக்கங்களைக் கொண்டது. அதே நேரம் இரண்டு பாகங்களையும் கொண்டது. முதலாம் பாகம் (Part 1) சமூக அபிவி ருத்தியும் முதலீடுகளும் எனும் தலைப்பில் 52 பக்கங்களையும் இரண்டாம் பாகம் (Part 2) பெருந்தோட்டப்பகுதியில் வறுமை என எஞ்சிய பக்கங்க ளையும் கொண்டது.

முதலாம் பாகத்தில் ,

1. பெருந்தோட்டம், சமூக நலனோம்பு - ட்ரஸ்ட்
2. சமூக நலனோம்பு நிகழ்ச்சித்திட்டங்கள் - தொழிநுட்ப உதவி குழுக்கள்
3. பெருந்தோட்டப் பகுதியில் வீடமைப்பு பிரச்சினைகள் (1986 -1992 / 1993 - 1997)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. தோட்ட சுகாதார அபிவிருத்தி
5. சிறுவர் பராமரிப்பும் சிறுவர் பாடசாலையும்
6. சுகாதார அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டம் (1985 - 2005)
7. தோட்டத் தொழிலாளர் வீடமைப்பு கூட்டுறவு சங்கங்கள்
8. அணிதிரட்டல்
9. சமூக அபிவிருத்தியும் பெருந்தோட்டப்பகுதி பெண்களும்
10. பயனாளிகளின் பார்வையில்

எனும் பத்து தலைப்புகளையும்

இரண்டாம் பாகமானது,

1. இலங்கையில் வறுமை
2. வறுமைக்கான காரணங்கள்
3. வீடமைப்பு
4. வறுமையும் கல்வியும்
5. வறுமையும் சுகாதாரமும்
6. வறுமையும் குடும்பக் கட்டுப்பாடும்
7. நலனோம்பு திட்டங்களும் வறுமையும்
8. தோட்ட ப்பகுதிகளில் ஏழ்மை
9. அரசாங்கமும் கம்பனிகளும் வாழ்க்கைக்கு ஏற்ற வேதனம் வழங்குவதை உறுதி செய்ய வேண்டும்
10 . மீண்டும் காட்டிக்கொடுக்கப்பட்ட தொழிலாளர்கள்
11. தோட்டப் பகுதிகளில் வறுமைக் குறைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்

என விரிவான ஆய்வுகளும் அட்டவணைகளும் என முழுக்க முழுக்க தகவல்களும் விவாதமும் நிறைந்த நூல் இது.

"பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் தோட்டத் தொழிலாளர்களும் தொழிலாளர் அல்லாத தலைமுறையினரும் கூட நிலபிரபுத்துவ காலத்தைப் போன்ற அரை அடிமைகளாகவே வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் பெருந்தோட்டத்துறை முதலாளிகளின் சட்டத்திட்டங்களினாலேயே ஆளப் படுகின்றனர்" என குறிக்கின்றார் நூலுக்காக அணிந்துரை எழுதி இருக்கும் இடதுசாரி அரசியலாளர்- தொழிற்சங்கவாதி வாசுதேவ நாணயக்கார.

இன்றைய ஊடகங்களில் அதிகமாக கேட்கப்படும் கேள்விதான் மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் இதுவரை எத்தனை வீடுகள் கட்டப்பட்டுள்ளன என்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நூல் எழுதப்பட்ட 2002 வரையான காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட அனைத்து வகை வீடமைப்பு விடயங்கள் குறித்தும் எத்தனை வீடுகள் கட்டப்பட்டன? யார் முன்னெடுத்தார்? எவ்வளவு தொகை செலவிடப்பட்டது? அந்த வீட்டுத் திட்டங்களில் உள்ள குறை நிறைகள் என்ன என்பது தொடர்பாக ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளத்துடன், இடையிலே அறிமுகப்படுத்தப்பட்ட 'மாடிலயம்' என மக்களால் அழைக்கப்படும் இரட்டை மாடி வீட்டு அலகுகள் (Two Storied Housing Units) மீதான குறைபாடாக 12 அம்சங்களைக் கொண்ட விமர்சன ஆய்வையும் முன்வைத்துள்ளார் நூலாசிரியர்.

இந்த மாடி வீட்டு அலகு முறைமையில் காணி உரிமை மறுக்கப்படுவதில் ஆரம்பித்து மக்களின் தேவைகளை நிறைவேற்றாத மேலதிக இட வசதிகள் இல்லாத நிலையை மக்களுக்கு தோற்றுவிக்கும் நிலை வரையாக அந்த விமர்சன பக்கத்தில் ஆராயப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பிரகடனத்தின் 25 வது உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள, உரிய நியமங்களுடனான தரமான வாழ்க்கை வாழ்வதற்காக உரிமைகளான சுகாதாரம், உணவு, உடுதுணிகள், வீடு, மருத்துவம், சமூக வசதிகள், பாதுகாப்பான வேலை சுகவீனம், அங்கயீனம், விதவை நிலை, மூப்படைதல் முதலான சூழ்நிலைகளில் உரிமைகள் தொடர்பிலும் நூலின் பின்னட்டையில் சுட்டிக்காட்டியுள்ள நூலாசிரியர் கீத. பொன்கலன் .

காணி, வீடு, கல்வி, மருத்துவம், சுகாதாரம், ஏழ்மை, பெண்களின் நிலை என பல்வேறு கோணங்களில் மலையகத்தின் வறுமை நிலையையும் அதனை போக்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளையும் இந்த நூலில் விரிவாக எழுதி உள்ளார். மேலும் முன்னெடுக்கப்பட வேண்டிய பரிந்துரைப்புகளையும் கூட செய்துள்ளார்.

இந்த நூலை எழுதுவதற்காக உசாத்துணைவாக கொண்ட பல நூல்களினதும், சஞ்சிகைகளினதும், கையேடுகளினதும், கட்டுரைகளினதும் பட்டியல் வாசகர்களுக்கு பிரமிப்பைத் தரவல்லது. பெருந்தோட்டத் துறை சார்ந்த அக்கறை கொண்ட அனைத்துத் தரப்பும் இந்த நூலை வாசித்து அதில் கூறப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எதிர் காலத்தில் ஆக்கபூர்வமான திட்டமிடலுக்கு பயன்படுத்திக்கொள் வார்கள் என தாம் நம்புவதாகவும் தனது முகவுரையில் குறிப்பிடுகின்றார் நூலாசிரியர் கீத. பொன்கலன்.

அந்தவகையில் இந்த நூல் பேசும் பல விடயதானங்கள் குறித்து கடந்த ஐந்தாண்டுகளில் அதிகளவு ஊடகங்களில் கேட்டகப்பட்ட கேள்விகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் அளித்தவன் என்றவகையில் இந்த நூலை இளம் மலையக ஊடகவியலாளர்களும் அரசியலாளர்களும் வாசிக்க வேண்டும் என பரிந்துரைக்கிறேன் (கட்டுரையாளர்).

அண்மையில் நடைபெற்ற மலையக இளைஞர்களின் ஒன்றுகூடல் நிகழ்வில் உரையாற்றிய இளம் ஆய்வறிஞாரான சிவில் சமூக செயற் பாட்டாளர் என். கிருஷ்ணகுமார் கூறிய கருத்து ஊடகங்களில் அதிக கவனத்தைப் பெற்றது.

'மலையக இளைஞர்களின் எழுச்சியே மலையகத்தின் அரசியல் வறுமையைப் போக்கும்" என்பதே அந்த கருத்து.

மலையகத்தின் வறுமையின் பல்பரிமாணப் பக்கங்களையும் அதில் இருந்து மீள்வதற்கான பரிந்துரைப்புகளையும் செய்துள்ள அமரான பாதிரியார் அருட்பணி. கீத. பொன்கலன் அவர்களின் பார்வையும், மலையக மாணவரிடையே வாசிப்பை ஊக்குவிக்கும் விஞ்ஞானபூர்வ நிகழ்ச்சித்திட்டத்தை முன்னெடுக்கும் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளரான என். கிருஷ்ணகுமாரின் கருத்து நிலையும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்ததாக உள்ளது.

அந்த வகையில் இந்த நூலை ஊடகவியலா ளர்கள் மட்டுமல்ல அரசியலாளர்களும் வாசிக்காத வகையில் மலையகத்தில் அரசியல் வறுமை தொடரவே செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14 ஆரம்பகால இலங்கையின் மக்களும் கலாசாரமும்

PEOPLES AND CULTURES OF EARLY SRI LANKA

A study based on genetics and archaeology

வைத்திய கலாநிதி சிவா தியாகராஜாவின் மரபியல் மற்றும் தொல்லியல் சார் ஆய்வு நூல்

இலங்கையில் தொல்லியல் ஆய்வுகள் குறித்த அரசியல் பரிமாணம் சமகாலத்தில் பரபரப்படைந்து இருக்கிறது. குறிப்பாக வடக்கு, கிழக்கு சார்ந்த தொல்லியல் ஆய்வுகளுக்காக ஜனாதிபதி செயலணி நியமிக்கப் பட்டு அதற்கு தலைவராக பௌத்த மதகுரு ஒருவரை ஜனாதிபதி நியமிக்க அது கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ள நிலையில் மேலதிகமாக அதற்கான ஆலோசகராகவும் ஒரு பௌத்த மதகுருவை பிரதமரும் நியமித் திருப்பதாக அறியமுடிகிறது.

ஞானத்தை நாடி பௌத்த தர்மத்தை போதிக்கும் மதகுருமார் தொல் லியல் ஆய்வில் ஆர்வம் காட்டும் இந்த நாட்களில் மருத்துவர் ஒருவர் இலங்கையின் மரபியல் மற்றும் தொல்லியல்சார் விஞ்ஞானபூர்வ ஆய்வு நூலை எழுதியுள்ள தகவலையும் பகிர்ந்து கொள்ள வேண்டி உள்ளது.

வைத்திய கலாநிதி. சிவா தியாகராஜா (Dr. Siva Thiyagarajah B.Sc., MBBS., Ph.D.) எழுதி இருக்கும் 'ஆரம்பகால இலங்கையின் மக்களும் கலாசாரமும்' - மரபியல் மற்றும் தொல்லியல் சார் ஆய்வு (Peoples and Culture of Early Sri Lanka - A study based on Genetics and Archeology) எனும் இந்த நூல் 406 பக்கங்களைக் கொண்டது. லன்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் தமிழர் தகவல் மையம் 2011ஆம் ஆண்டு இந்த நூலை வெளியீடு செய்துள்ளது. (Tamil Information Centre - TIC publication, Bridge End Close, Kingston KT2 6 PZ, UK)

2017ஆம் ஆண்டு தேர்தல் முறைமைமாற்ற கற்கைகளுக்காக லன்டன் சென்றிருந்தபோது (கட்டுரையாளர்) அதனை ஒழுங்கு செய்திருந்த TIC வரதன் என பலராலும் அழைக்கப்படும் வரதகுமார் எனக்கு அன்பளிப்பாக வழங்கிய இரண்டு நூல்களில் ஒன்று இந்த நூல்.

விஞ்ஞானபூர்வ ஆய்வுகளுடன் மரபியல்சார் விளக்கங்களுடன் நிழற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படங்கள், சூத்திரங்கள், மரபணு பரிசோதனை அறிக்கைகள் என ஒரு கலாநிதி பட்ட ஆய்வு நூலாக்கம் பெற்று இருக்கிறது. இதனை வாசிப்பதற்கு போதுமான பொறுமையும் காலமும் வேண்டும். அந்த காலம் அமையாமலே கழிந்த மூன்று வருட காலத்திற்குப் பின்வந்த 'கொரொனா' காலம் அதிகமான வாசிப்புக்கு இடம்கொடுத்தது.

புனைவுகளை வாசிக்க கொரொனா கால முடக்கம் ஏனோ இடங் கொடுக்கவில்லை. உலக நடைமுறைகள் எல்லாம் ஓரிரு நாட்களில் மாறிப் போன போது புனைவு ஆக்கங்களை ஏற்க ஏனோ மனது மறுத்தது. அப்போது வாசித்த ஆய்வு நூல்களின் வரிசையை ஒவ்வொன்றாய் அறிமுகம் செய்ய வீரகேசரி வழங்கிய வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டேன். அந்த வரிசையில் அமைந்த இந்த நூல் அற்புதமானது. இந்த நூலை எனக்களித்த நண்பர் வரதகுமார் இப்போது எம்மிடையே இல்லை.

"திலகர் உங்களுக்கு இந்த நூல் பயன்படும்" என அவர் கொடுத்த இரண்டு நூல்களுமே 400 பக்கங்களைத் தாண்டியது. ஆனால், அருமை யான பொக்கிஷங்கள். அந்த வரதனை இந்த தருணத்தில் நன்றியோடு நினைவுபடுத்த வேண்டியது ஏனெனில் அவரே இந்த நூலின் பதிப்பாளரும் ஆவார்.

இலங்கை அரசு இராவணனின் புஷ்பக விமானத்தை தேட விளைந்த போது சக்தீ அ. பால அய்யா எழுதிய, Ages of life on Earth and Dravidian Culture என்ற நூலை அறிமுகம் செய்ய எண்ணியது போன்று அதே இலங்கை ஜனாதிபதி நியமித்துள்ள தொல்லியல் ஆய்வு குழு குறித்த கவனம் பெற்றி ருக்கும் நிலையில் இந்த நூல் குறித்தும் அறிமுகம் செய்ய ஆவல் எழுந்தது. பாகம் ஒன்று (181 பக்கங்கள்), பாகம் இரண்டு (225 பக்கங்கள்) என இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்த நூலின் பாகம் ஒன்றின் பதினொரு அத்தியாங்களும் கூட சக்தீ அ. பால அய்யாவின் நூலை ஒத்தே இருக்கிறது.

ஆனால், ஆழமான பார்வையைக் கொண்டது இந்தநூல். இரண்டாம் அத்தியாயத்தின் தலைப்பு The age of the Earth and separation of Sri Lanka என்றும், ஆறாம் ஏழாம் அத்தியாயங்கள் The formation of a Dravidian Substratum in South Asia I, II என அமைந்திருப்பது சக்தீயின் நூலை ஒத்திருப்பது குறிப்பிடத்தக்கது. அதே நேரம் இரண்டு நூல்களின் அட்டைப் படங்களும் கூட ஒரே மாதிரியானவை. ஆனால் சிவா தியாகராஜாவின் இந்த நூலிக்கான அட்டைப்படமானது அமெரிக்க - நாசாவிடமிருந்து பெற்றுக் கொண்ட படம் என்ற குறிப்போடு எஸ். ஆனந்த முருகன் என்பவரால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் அச்சிடப்பட்டுள்ளதோடு அங்கு கிடைக்கக் கூடியதாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ள இந்த நூல் வேறு எந்த வடிவிலும் முழுமையாகவோ பகுதியாகவோ பிரதி செய்யப்படுவதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. எனவே இந்த நூலை வாசிக்க விரும்புவோர் தேடி வாங்குவதே வழி.

பதினொரு அத்தியாயங்களைக் கொண்ட முதலாம் பாகம் இந்திய இலங்கை புவியியல் கட்டமைப்பை தொல்லியல் தளத்தில் விளக்க முயற்சிக் கிறது. இலங்கை இந்தியாவுடன் இணைந்திருந்த யுகம் பற்றியும் பின்னாளில் பிரிந்து தனித் தீவானது முதல் இயக்கர்கள், நாகர்கள், ஆரியர்கள், திராவிடர்கள் என தென்னாசிய பூர்விக கலாசாரம் குறித்த ஆழமான ஆய்வுப் பார்வையாக அமைந்துள்ளது. இதில் மொழிகள், நாணயங்கள் குறித்த தனியான ஆய்வுப் பார்வையும் அடங்குகிறது.

இலங்கையின் நதிவழி நாகரிகங்கள் குறித்த பார்வையோடு தொடங்கும் இரண்டாம் பாகத்தின் முதல் அத்தியாயம் (12) முதல் 26 ஆம் அத்தியாயம் வரையான 15 அத்தியாயங்களும் 225 பக்கங்களில் பல நிழற்படங்கள் அட்டவணைகள் என விரிவான விளக்கங்களுடன் அமையப் பெறுகின்றன. இலங்கை துறைமுகங்களின் தோற்றம் நகரங்களின் தோற்றம், தமிழ்-சிங்கள மொழிகள் (ஆரிய மொழியாக சிங்களம், திராவிட மொழியாக சிங்களம்) மதங்கள், பௌத்தத்தின் வருகை, விஜயனின் வருகை, இலங்கை மக்களிடையே மரபியல் உறவுமுறை (Genetic Relationship) என இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டின் வரலாறுகள் வரை அலசி ஆராயும் இந்த நூலின் ஆசிரியர் விஞ்ஞான பட்டதாரி துறைசார் மருத்துவ அறிஞர் என்ற வகையில் மரபணுசார் சோதனை அறிக்கைளையும் (DNA Testing) கூட பின்னிணைப்பாகத் தந்துள்ளார்.

இலங்கை மக்களின் மரபியல் உறவுமுறை (The Genetic Relationships of the People of Sri Lanka) எனும் 25 வது அத்தியாயத்தில் சிங்களவர்களின் மரபியல் கலப்பில் 5% வேடுவர்கள் என்றும், 25% பெங்காளி கலப்பு என்றும் 70% தென் இந்திய தமிழர்களினது கலப்பிலானது கலாநிதி. க்ஷாத்திரியாஸ் (Genetic affinities of Sri Lanka populations - Hum Biol. (6): 843 - 66 - Kshatriya GK- 1995) இன் கற்கைகளை ஆய்வு செய்து எழுதி உள்ளதுடன் விக்கிபீடியா 2010 இல் இந்த குறிப்பு இடம்பெறுவதையும் சுட்டிக் காட்டத்தக்கது.

இருபத்தினாலாவது அத்தியாயத்தில் இலங்கையின் சனத்தொகை (Population of Sri Lanka) தலைப்பில் இலங்கையின் சனத்தொகையானது இனம், மதம் மொழி அடிப்படையில் கணக்கெடுக்கப்படுவதனை சுட்டிக் காட்டியுள்ள நூலாசிரியர் 1981ஆம் ஆண்டு கணிப்பின்படி 74% சிங்கள வர்கள் என்றும் அவர்களில் மொழி சிங்களமாகவும் மதம் பெரும்பான்மை பௌத்தம் எனவும் பதிவு செய்துள்ளார். அதற்கடுத்த பெரிய சனத்தொகை குழுமமாக 12.5% வீதமாக பதிவு பெற்றுள்ள இலங்கைத் தமிழ் இனத்தைக் குறிப்பிட்டுள்ளதுடன் 5.4% ஆகவுள்ள இந்திய வம்சாவளி தமிழர்கள் தனியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனமாக பதிவு பெற்றுள்ளதை சுட்டிக்காட்டி உள்ளதுடன் இவர்களின் மொழி தமிழாகவும் மதம் பெரும்பான்மை இந்துக்கள் என்றும் குறிப்பிடு கிறார். 7.1% ஆக உள்ள முஸ்லிம்கள், அரேபிய, பேர்ஷிய, துருக்கிய, சிரிய, எகிப்திய, மொரொக்கோ பகுதிகளில் இருந்து இலங்கை வந்த வணிகர் களின் வழித்தோன்றல்கள் என்றும் இவர்களோடு தென் இந்திய காயல் - கேரள கடற்கரைகளில் வந்தவர்களாகவும் உள்ளனர் என்றும் இவர்களது மதம் இஸ்லாமாகவும் பெரும்பான்மையானவர்களது தாய்மொழி தமிழா கவும் அதே நேரம் இணைப்பு மொழியாக சிலர் தமது மூதாதைகள் மொழியைக் கொண்டிருப்பதாகவும் கூறுகிறார்.

வைத்திய கலாநிதியான சிவா தியாகராஜா ஒரு சுயாதீன ஆய்வாளராக மரபியல், தொல்லியல், வரலாறு போன்ற துறைகளின் உள்ள ஆர்வத்தின் ஊடே தனது ஆய்வுகள் அமைவதாக குறிப்பிடுகிறார். எனினும் இந்த நூலை எழுத தொல்லியல், தொல்பொருளியல், மானுடவியல், பழங்காலவியல், புவியியல், சூழலியல், ஆரம்ப எழுத்தியல், பண்டைய மொழியியல், நாணய வியல், இலக்கிய மூலங்கள் என பத்துவகை இயல்கள் குறித்த பார்வையாக இந்த நூல் எழுதப்பட்டுள்ளது என்கிறார்.

யாழ்ப்பாணத்தை பூர்விகமாகக் கொண்ட சிவா தியாகராஜா தனது ஆரம்ப கல்வியை தெல்லிப்பளை மகாஜனா கல்லூரியிலும் இடைநிலைக் கல்வியை யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரியிலும் பயின்றுள்ளார். 1963ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகத்தில் உயிரியல் விஞ்ஞான பட்டம் பெற்ற சிவா தியாகராஜா அதே பல்கலைக் கழகத்தின் மருத்துவபீடத்தில் மருத்துவர் பட்டமும் பெறுகிறார். 1992இல் மனநல மருத்துவத்திற்காக லன்டன் பல்கலைக்கழகப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டுள்ள இவர் அதே பல்கலைக்கழகத்தில் 'தமிழ் பேசும் மக்களும் சில மரபியல்சார் பரம்பரை கோளாறுகளும்' எனும் தலைப்பில் ஆய்வு கட்டுரை சமர்ப்பித்து கலாநிதி பெற்றுக் கொண்டுள்ளார்.

1980 களிலேயே யாழ் மருத்துவ சங்கத்தால் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ள இவர் பத்து மருத்துவ நூல்களை எழுதி உள்ளார். உலகின் முதலாவது நூல் என கருதப்படும் 5000 ஆண்டுகளுக்கு முன் களிமண் மாத்திரைகளைக் (Clay Tablets) கொண்டு சுமேரிய மொழியில் எழுதப்பட்ட காவியத்தை தமிழுக்கு மொழி பெயர்த்துள்ளார் என்றும் நூலாசிரியர் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

நடைமுறை அரசியல் சூழ்நிலைகளில் இலங்கை வரலாறுகளை பற்றி எழுதுவது வெகுமதியற்ற வேலை என்று குறிப்பிடும் நூலாசிரியர் வரலாறானது பல கட்டுக்கதைகள், புராணங்களினால் கட்டமைக்கப்படும் அதே வேளை கல்வியாளர்களும் புலமையாளர்களும்கூட அதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியே வைத்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றனர் எனக் கூறுகிறார். மேலும் "மதகுருமாரும் 'குறிப்பாக' அரசியல்வாதிகளும் கூட அதனையே விரும்புகின்றனர். இந்த நிலையில் யாருமே உண்மையை அறிய விரும்பு வதில்லை" என்றும், உண்மை அடிக்கடி பாதிப்புக்குள் ளாகும் நிலையே உள்ளது என்றும் 2011இல் எழுதிய முன்னுரைக் குறிப்பிலேயே நூலாசிரியர் குறிப்பிட்டிருப்பது 2020லும் நிதர்சனமான ஒன்றாகவே உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தாயகம் திரும்பியோரின் புனர்வாழ்வு : ஒரு முக்கிய மதிப்பீடு

15

REHABILITATION OF SRI LANKAN REPATRIATED - A CRITICAL APPRAISAL

பேராசிரியர் வி. சூரிநாராயணன் தொகுத்தளித்திருக்கும் ஆய்வு நூல்.

மலையகம் என்பது ஒரு புவியியல் அடையாளம் போல தோன்றினாலும் அது ஒரு இனத்தின் அடையாளமாக அதுவும் உலகத்தமிழ் இனங்களின் அடையாளம் ஒன்றாக மாறி இருக்கிறது. அந்த இனம் எங்கே வாழ்கிறார்கள் என்றால் உலகம் முழுவதும் வாழ்கிறார்கள் என்றும் எப்படி வாழ்கிறார்கள் என்றால் 'மலையகம்' என்றஉணர்வுடன் வாழ்கிறார்கள் என்றும் கூறலாம். நாங்கள் 'இந்தியர்கள்' என சொல்பவர்கள் எல்லோருமே இந்தியாவில் வாழ்கிறார்கள் என்று இல்லை. அவர்கள் அமெரிக்காவில் வாழ்ந்து கொண்டும் அவர்கள் அப்படிச் சொல்கிறார்கள். "நாங்கள் யாழ்ப்பாணம்" என ஐரோப்பாவில் வாழ்ந்து கொண்டு சொல்வது அவர்களது உணர்வுபூர்வ அடையாளம் என கொள்ளலாம்.

இப்படி இந்தியாவில் - தமிழகத்தில் தமிழர்களாக 'இலங்கைத் தாயகம் திரும்பியவர்கள்' என இந்த நூலில் Sri Lankan Repatriates என குறிப்பிடப் படுமவர்கள் 'மலையகத் தமிழர்கள்'. தமிழ் நாட்டில் நீலகிரி மாவட்டத்தில் செறிவாகவும், கொடைக்கானல், வால்பாறை, கொல்லிமலை என மலைப் பிரதேசங்களில் பரவலாகவும் தமிழ்நாட்டின் ஏனைய மாவட்டங்களின் சிலோன் காலனிகளில் (CR - Ceylon Colony) தமிழ்நாடு தவிர்ந்து ஆந்திரா, கேரளா, கர்நாடாக, அந்தமான் தீவுகள் என ஆங்காங்கே உதிரிகளாகவும் 'மலையகத்தவர்கள்' என்ற உணர்வுடன் வாழ்ந்து கொண்டு இருப்பவர்கள் இவர்கள்.

இந்த இலங்கையிலிருந்து) தாயகம் திரும்பிய இலங்கை மலையகத் தமிழர்கள் தாயகம் என கூறுவது தாங்கள் வந்து சேர்ந்த இந்தியாவை. அது எப்படி இலங்கையில் இருந்து வந்தவர்களுக்கு இந்தியா தாயகம் ஆகும் என்ற கேள்வி எழுந்தால், அது தான் மலையகத் தமிழர் வரலாறு.

1800களில் இலங்கைக்கு அழைத்துச் செல்லப்பட்டு 1964இல் ஒப்பந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டு திருப்பி அனுப்பப்பட்ட மூன்றாம்/ நான்காம் தலைமுறை தமிழ் நாட்டுத் தமிழர்களே இந்த தாயகம் திரும்பிய இலங்கையர்கள்.

இவர்கள் 1948இல் இலங்கையில் குடியுரிமைப் பறிக்கப்பட்டு 1964இல் இலங்கை இந்திய அரசுகள் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் 1970 கள் முதல் 90கள் வரை கப்பலிலும், பின்னர் விமானத்திலும் தமிழ்நாட்டுக்கு வந்து சேரந்தபோது அவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் தேவை எழுந்தது. இந்திய- தமிழ்நாட்டு அரசும் அத்தகைய புனர்வாழ்வுப் பணிகளை முன்னெடுத்து உள்ளது. அத்தகைய புனர்வாழ்வு குறித்தமதிப் பீட்டை செய்யும் நூலே Rehabilitation of Sri Lankan Repatriates - A critical Appraisal.

இந்த நூலில் மூன்று கட்டுரைகள் அடக்கம். இதனைத் தொகுத்தவரின் கட்டுரை உட்பட அந்த மூவர் பற்றிய அறிமுகம் இந்த நூலின் முக்கித்துவத்தை உணர்ர்த்தும்.

தொகுப்பாளரான பேராசிரியர் வி. சூரியநாராயணன் மெட்ராஸ் (சென்னை) பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் (இப்போது ஓய்வு நிலை). அந்தப் பல்கலைகழகத்தின் தென், தென்கிழக்கு ஆசிய கற்கைகளுக்கான நிலையமே இந்த நூலை வெளியீடு செய்துள்ளது. இலங்கைவாழ் மலையகத் தமிழ் மக்கள் குறித்த தெளிவானபார்வை கொண்ட இந்திய அறிஞர்களுள் முக்கியமானவர் இவர் எனலாம். 'இர. சிவலிங்கம் ஞாபகார்த்த குழு' ஆண்டு தோறும் நடாத்தும் இர.சிவலிங்கம் நினைவுப் பேருரையை 2002ஆம் ஆண்டு கொட்டாஞ்சேனை மண்டபம் ஒன்றில் ஆற்றியபோது அதனை அவதானிக்க முடிந்தது (கட்டுரையாளர் அந்த உரையை நேரடியாககேட்டு இருக்கிறேன்). அந்த உரை சிறு நூலாகவும் குழுவினரால் வெளியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த உரையை வாசித்தால் இந்தப் பேராசிரியரைப் புரிந்து கொள்ளலாம். இந்த நூலில் உள்ள இவரது கட்டுரைத் தலைப்பு மிக விசேசமிக்கது. Repatriation of Indian 'Citizens' from Srilanka- A background. இவரைத் தவிர வேறு எந்த அறிஞரும் கூட இந்த தாயகம் திரும்பிய இலங்கை மலையகத் தமிழ் மக்களை இந்திய பிரஜைகள் (Citizens) என குறிப்பிட்ட தாக குறிப்பிட்டுச் சொல்லமுடியவில்லை.

அடுத்தவர் எம்.வாமதேவன் இலங்கைச் சூழலுக்கு அவருக்கு அறிமுகம் தேவையில்லை. ஆனால் புதுவிதமாக அந்த அறிமுகத்தைச் செய்ய எண்ணுகிறேன். குமரன் பதிப்பக வெளியீடாக விரைவில் ஒரு நூல் வெளி வரவுள்ளது. அதன் தலைப்பு 'குன்றில் இருந்து கோட்டைக்கு'. எழுதிக் கொண்டு இருப்பவர் அல்லது எழுதியவர் எம்.வாமதேவன். முதல் கட்ட வாசிப்பு அபிப்பிராயத்துக்காக என்னிடம் தந்தார் (கட்டுரையாளர்). அந்த வாசிப்பை முடித்து இப்போது அச்சுக்குத் தயாராகிறது அந்த நூல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது அபிப்பிராயம் இப்படி ஒரு நூல்மலையகத்தில் இருந்து வெளிவர வில்லை என்பது. அது தாங்கிவரும் செய்தி அத்தகையது. அதேநேரம் எம்.வாமதேவன் இந்த தாயகம் திரும்பியோர் வாழ்வு தொடர்பில் ஏற்கனவே கள ஆய்வு செய்து பல்கலைக்கழகத்துக்கு ஆய்வு கட்டுரை சமர்ப்பித்து அதனை நூலாக்கியும் வெளியிட்டவர். (அந்த நூல் குறித்து இலக்கியச் சாரல் பகுதியில் ஏற்கனவே எழுதியுள்ளேன்). எனவே இந்த நூலில் Rehabilitation of Sri Lanka Repatriates in Tamil Nadu : An Evaluation என்ற தலைப்பில் கட்டுரை எழுத மிகவும் பொருந்தமானவர். இவர்தான் 'இர.சிவலிங்கம் ஞாபகார்த்த குழுவின்' தலைவர்.

மேலே இருவரும் எந்த இர.ஞாபகார்த்த குழுவுடன் தொடர்புபடுகின்ற னரோ அந்த இர.சிவலிங்கம்தான் மூன்றாவது கட்டுரையாளர். எம். வாம தேவனுக்கு வழிகாட்டியாக இருந்த ஆசிரியர், அதிபர். இவர் ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரி அதிபராக இருந்தபோது எம்.வாமதேவன் அவரது நேசத்துக்குரிய மாணவன். மறுபுறம் இர.சிவலிங்கம் தாயகம் திரும்பிய இலங்கையராக தமிழ்நாட்டுக்கு சென்று வாழ்ந்தவர். அங்கே 'மக்கள் மறுவாழ்வு மன்றம்' எனும் மன்றம் ஒனறின் ஊடாக இந்த தாயகம் திரும்பிய மக்களுக்காக களத்தில் உழைத்தவர்.எனவே Repatriates Rehabilitation: Suggestions for A Prospective Approach என்ற தலைப்பில் கட்டுரை எழுத முழுமையான தகுதி உடையவர்.

இவரது கட்டுரைத் தலைப்பில் Repatriates Rehabilitation என எழுதியதை தமிழாக்கம் செய்தால் தாயகம் திரும்பியோர் புனர்வாழ்வு என்றே வரவேண்டும். ஆனால் அவரது, அந்த மக்கள் நோக்கிய செயற்பாடுக ளுக்குஅவர் வைத்துக் கொண்ட தலைப்பு 'மக்கள் மறுவாழ்வு'.

எனவே 'புனர்வாழ்வு' எனும் பெயரில் 'மறுவாழ்வு'தேடும் மக்களைப் பற்றிய இந்த ஆய்வு நூல் வாசிக்கப்படவேண்டியது. அறுபத்தாறு பக்கங்க ளைக் கொண்ட சிறிய நூல்தான்.

எளியது ஆனால் வலியது என்பதை வாசித்தால் புரியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை மலைநாட்டுத் தமிழர்கள் : அர்த்தமுள்ள பிரஜாவுரிமையை நோக்கி

HILL COUNTRY TAMIL OF SRI LANKA Towards Meaningful Citizenship

16

ISI +VR இணைந்து வழங்கியுள்ள ஓர் ஆய்வறிக்கை

இலங்கை மலையகத் தமிழர் என்பவர்கள் யார்? என பல ஆய்வுகள் முன்வைக்கப்பட்டாயிற்று. முன்வைக்கவும் படும். ஆனால் இந்த ஆய்வறிக் கையின் தலைப்பிலேயே ஓர் அர்த்தத்தைச் சுட்டி நிற்கிறது.

அதுதான் 'இலங்கை மலைநாட்டுத் (மலையகத்) தமிழர்கள்- அர்த்த முள்ள பிரஜாவுரிமையை நோக்கி'.

அண்மையில் எனது (கட்டுரையாளர்) முகநூல் தளத்தில் ஒரு சிறு குறிப்பு பதிவு செய்தேன். வாக்குரிமை என்பதும் பிரஜாவுரிமை என்பதும் வேறு வேறானவை என. அந்தப் பதிவுக்கு (Status) பதிற்குறி இட்டவர்கள் பலர் அதனை எந்தளவுக்கு புரிந்து கொண்டார்கள் என்பது புரியவில்லை. பிரஜா உரிமை இருந்தால்தானே வாக்குரிமை கிடைக்கும் என்று ஒரு பதிற்குறி (Comment). அது சரிதான். ஆனால் மலையகத் தமிழர்கள் விடயத்தில் இதனைத் திருப்பிப் போட்டுப் பார்த்தால் வாக்குரிமை கிடைத்து விட்டது. ஏனைய பிரஜைகள் போல் இவர்கள் வாழ்கிறார்களா ?

இந்தக் கேள்வியில் இருந்து எழுந்ததுதான் எனது பதிவும் அதன் அரசியலும் (Status and it's politics). அந்த பதிற்குறிக்கு பதில் பதிற்குறி இட்டு முகநூலில் விவாதித்துக் கொண்டு இருப்பது எனது (கட்டுரையாளர்) வேலையல்ல. ஏனெனில் முகநூலில் பிரஜாவுரிமை கிடைக்காது என்பது எனக்கு (கட்டுரையாளர்) நன்கு தெரியும். அதனைப் பெற அரசியல் களமாட வேண்டும்.

அது அழுக்கு நிறைந்த களந்தான். கங்கையும், காவிரியும், மாணிக்க கங்கையும் அழுக்கு நிறைந்த ஆறுகள்தான். ஆனால் அவை புனித தீர்த்தம் என குளிப்பதில்லையா? அதுபோலதான் அரசியல் புனிதமானது. அதனை மனிதர்கள் கையாளும்போது அதன் புனிதம் கெட்டுவிடுகிறது. ஏனெனில் மனிதரில் புனிதர்கள் இல்லை. மதங்களில் உருவாக்கிக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியலில் உருவாக்க வேண்டுமெனில் அதற்கு ஆய்வுகள் அவசியம். அத்தகைய ஆய்வுகளைக் கற்றல் அவசியம். கற்றதைப் பயன்படுத்தல் அவசியம். அரசியல் ரீதியாக. அறிவு சேர்ப்பது கலாநிதிப் பட்டம் வாங்கி செத்துப்போகும்போது மண்ணில் புதைத்த பின்னர் பெருமை பேசுவதற்காக அல்ல. மக்கள் பயன்பாட்டுக்கு. அறிவு என்பது கடந்து போவது. வைத்துக்கொண்டு வஞ்சகம் செய்வதற்கு அல்ல.

அத்தகைய மக்கள் பயன்பாட்டுக்குத் தேவையான ஓர் ஆய்வறிக்கை தான் இந்தத் தொகுப்பு. தொகுப்புக்கு அனுசரணை வழங்கி உள்ள இரண்டு நிறுவனங்களே இந்த ISI + VR

ISI- Institute on Statelessness and Inclusion - குடியுரிமை இன்மையை இல்லாதாக்கி அவர்களை உள்ளீர்த்துக் கொள்வதற்கான நிறுவனம்.

VR- Verite Research - இலங்கையில் சமூகப் பொருளாதார ஆய்வுகளைச் செய்யும் துறைசார் ஆய்வு நிறுவனம்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகளை மதிப்பிட்டு தரப் படுத்தல் செய்யும் Manthri.lk இந்த ஆய்வு நிறுவனத்தின் இணையத் தளமே.

இந்த இரண்டு நிறுவனங்களும் இணைந்து மேற்கொண்ட இந்த ஆய்வுப் பணிக்கு தொகுப்பாளராக செயற்பட்டவர்கள் ரெஹானா மொஹம்மட், ஷக்கீனா ராசிக், ரஷ்மி டயஸ், அமல் டி சிக்கேரா, கிஹான் குணத்திலக்க மற்றும் ஆசிம் மொஹம்மட், ரேவதி ஞானசம்பந்தன் ஆகிய இருவரும் களப்பணிக்கு தலைமை தாங்கி உள்ளதாகவும் ஆய்வறிக்கை முகப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவர்களில் மலையகத்தவராக இருக்கக்கூடியவர் என கருதப்படக் கூடியவர் ரேவதி ஞானசம்பந்தன். ரேவதி மலையகத்தவராக இல்லாமல் இருந்தால் இன்னும் சிறப்பு. அப்படித்தான் இருக்கவேண்டும் என்பது எதிர்பார்ப்பு.

அப்படியாயின் இந்த ஆய்வில் மலையகத்தவர்கள் இல்லை. இதனை எப்படி ஏற்கலாம் என போர்க்கொடி தூக்குபவர்களை தாராளமாக காணலாம். ஓர் ஆய்வு அகநிலை சார்ந்ததாக அல்லாமல் புறநிலை சார்ந்ததாக அமைவது சிறப்பு. அப்போது பக்கம் சாயும் தேவை எழாது.

ஆய்வு எழுத்துக்கும் புனைவு எழுத்துக்கும் ஓர் அடிப்படை வேறுபாடு உண்டு. ஆய்வு எழுத்தில் உணர்வுக்கு இடமில்லை. தெளிவத்தை ஜோசப், எம்.வாமதேவன் ஆகிய இருவரும் மலையகத்தின் முக்கிய ஆளுமைகள் என்பதில் எந்த மாற்றுக்கருத்துமே இருக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக மக்களின் வீட்டுப் பிரச்சினையை தெளிவத்தை ஜோசப் எழுதும் சிறுகதையில் வாசிக்கிறபோது எழும் உணர்வு நிலையை எம்.வாமதேவன் எழுதும் ஐந்தாண்டுத் திட்ட ஆய்வறிக்கையில் தரிசிக்க முடியாது. ஆனால் எம்.வாமதேவனின் எழுத்து அறிவு சார்ந்தது.

கதை மக்களுக்கு உந்துதலைத் தரும். தெளிவத்தை ஜோசப்பின் 'மீன்கள்' எனும் சிறுகதை அளவுக்கு மலையக வீட்டுப் பிரச்சினையைப் பேசும் கதை வேறு இல்லை எனலாம். (தெளிவத்தை ஜோசப்புக்கும் வீடு ஒன்று இன்னும் இல்லை என்பது வேறு கதை) எம்.வாமதேவன் தலைமையில் மலையகப் பெருந்தோட்ட மக்களின் அபிவிருத்திக்கு என தயாரிக்கப்பட்ட பத்தாண்டுத் திட்டம் (பின்னர் ஐந்தாண்டுத் திட்டம்) அளவுக்கு வேறு திட்ட அறிக்கை அந்த சமூகத்துக்கு இல்லை எனலாம்.

தெளிவத்தை ஜோசப் எழுதிய சிறுகதையைக் காட்டி அரசாங்கத்திடம் வீடமைப்பு நிதிகோர முடியாது. ஆனால் எம்.வாமதேவனின் அறிக்கை யைக் காட்டி நிச்சயம் கோரலாம்.

ஆளுமைகளின் உணர்வையும் அறிவையும் திரட்டி முன்வைக்கும் அரசியல் மூலமே அந்த இரண்டு ஆளுமைகளின் நோக்கம் நிறைவேறும் என்பதே யதார்த்தம்.

இங்கே ரேவதியும் மலையகத் தமிழர் அல்லாதவராக இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு, இந்த ஆய்வறிக்கையில் உணர்ச்சிவசப்படலுக்கு இடம ளிக்காது அறிவார்ந்த தன்மையை அதிகரிக்கும் என்பதனாலேயாகும்.

அதன்படி இந்த ஆய்வறிக்கையின் தலைப்பு ஒரு செய்தியை மிக அழுத்தமாக சொல்கிறது. இந்த மக்களுக்கு பிரஜாவுரிமை இல்லாமல் இல்லை. இருக்கிறது. ஆனால் அது அர்த்தமிக்கதாக இல்லை என்பதே அந்தச் செய்தி.

2019 ஆகஸ்ட் மாதம் வெளியான இந்த அறிக்கை எந்தளவுதூரம் வாசிப் புக்கு உள்ளாகியுள்ளது என்பதை ஆய்வு செய்ய ஓர் ஆய்வு தேவைப்ப டலாம். ஏன்? அந்த ஆய்வறிக்கை குறித்த இந்த அறிமுகக் குறிப்பு எத்தனை வாசிப்புக்கு உள்ளானது என்பதையும் ஆய்வு செய்யவேண்டி இருக்கும். ஆனாலும் நாம் அரசியல் பேசுவோம்.

இந்த ஆய்வறிக்கையைத் தயாரிக்க பல்வேறு தரவுகளையும் தகவல்க ளையும் பல மலையக செயற்பாட்டாளர்களும், பணித்துறை ஆட்சியா ளர்களும், அபிவிருத்திச் செயற்பாட்டாளர்களும், அரசியல் கட்சி உறுப்பி னர்களும், ஊடகவியலாளர்களும் பங்களிப்பு செய்துள்ளதாக அறிமுக உரையிலே குறிப்பிடப்பட்டு உள்ளது. குறிப்பாக அருட்பணி அன்ரூ தேவதாசன் அடிகளாரைக் குறிப்பட்டு உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல ஆங்கிலப் புலமையோடு மலையகத் தமிழர் தொடர்பாக கருத்தரங்குகளில் கருத்துரைக்கும் Rev. Fr. Andrew Devadasan என்பவரை நான் (கட்டுரையாளர்) நன்கறிவேன். அவர் யார் என மேலதிக விபரம் தேட விளைவோர் பாதிரியர்களான பின்வருவோரினது விபரங்களையும் தேடி அறிவது பொருத்தம்.

அருட்பணி (Rev.Fr) அல்போன்ஸ் (ஹட்டன்), போல் கஸ்பர்ஸ் (கண்டி), கீத பொன்கலன் (பண்டாரவளை), மரிய அந்தனி (ஹட்டன்), மைக்கல் ராஜேந்திரன் (தெனியாய), பெனி (ஹட்டன்) ஆகியோருடன் யேசு சபையைச் சேர்ந்த பியோ ச்சம்பா (தெனியாய), என்ஜலோ ஸ்டெபன்சி (கோகாலை) ஆகிய இத்தாலிய பாதிரியார்களும் தமிழ்நாடு தூத்துக்குடியைச் சேர்ந்த ஜேக்கப் பெர்ணான்டோ (இரத்தினபுரி) போன்றோரும் இங்கு கவனத்திற்குரியவர்கள்.

இவர்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக சமூக பணி ஆற்றி இருக்கலாம். (அந்த விமர்சனம் தனி) அவர்களின் வெளியீடு (Output) என்ன என்பதே இங்கு இனங்கானப்படவேண்டும். இங்கே ஏன் கிறித்தவ / கத்தோலிக்க மதம் சார்ந்த பாதிரிகள் விபரம் மாத்திரம் வருகிறது என கேள்வி எழுந்தால், அந்த காரணத்தின் அடிப்படையில் இவர்களின் பெயர்கள் இங்கே குறிப்பிடப்படவில்லை என்பதை இவர்களது பணிகளை ஆய்வு செய்தே அறிய முடியும். ஏனைய மதப்பெரியவர்கள் இத்தகைய ஆய்வுப் பணிகளைச் செய்து அவை எமது கரங்கிட்டினால் அது பற்றிய அறிமுகக் குறிப்பும் நிச்சயம் எழுதப்படும்.

A4 அளவிலான 40 பக்கங்களைக்கொண்ட இந்த ஆய்வு அறிக்கை 5 அத்தியாயங்களைக் கொண்டது. முதலாம், இரண்டாம் அத்தியாயங்கள், அறிமுகம் மற்றும் முறைமை தொடர்பானது. மூன்றாம் அத்தியாயம் குடி யுரிமையின்மை, அர்த்தமுள்ள குடியுரிமை மற்றும் குடியுரிமையின்மையும் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலும் என்ற இரண்டு விடயங்களை ஆய்வு செய்கிறது.

நான்காம் அத்தியாயம் இலங்கை மலையகத் தமிழர் பற்றிது. இதில் மலையகத் தமிழரும் பெருந்தோட்டங்களும், மலையகத் தமிழர்களும் அரசும், மலையகத் தமிழர்களும் தொழிற்சங்கங்களும் எனும் தலைப்பில் ஓர் அங்கமாகவும், மலையகத் தமிழருக்கும் அரசுக்குமான தூரம், பெருந் தோட்டங்களில் தங்கி இருத்தல், தொழிற்சங்கங்களின் தரகுத் தொழில் எனும் தலைப்பில் இரண்டாம் பாகமாகவும் ஆராயப்பட்டுள்ளது.

ஐந்தாம் அத்தியாயம் ஐக்கிய நாடுகள் சபை 2015இல் முன்வைத்த 'leaving No one behind - 2030 Agenda' (யாரையும் பின்னிருத்தாது விடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2030 நிகழ்ச்சி நிரல்) எனும் வாசகத்தில் இருந்து அர்த்தமுள்ள பிரஜாவு ரிமை நோக்கி நகர்வது குறித்து ஆராய்கிறது. இந்த கருத்தியலை முன் வைத்து நான் (கட்டுரையாளர்) 2015, 2019ஆம் ஆண்டுகளில் ஐக்கிய நாடுகள் சபையின் ஆண்டுப் பொதுக்கூட்டத்துக்கு சமாந்திரமாக நடைபெறும் உப கூட்டங்களில் கலந்து கொண்டு கருத்துக்களைப் பகிர்ந்து இருந்தேன். 2019இல் ஐ.நா சபை 'சென்கல்' நாட்டுக்கு வழங்கி இருக்கும் தூதர் அலுவ லகம் ஊடாக இலங்கை மலையகத் தமிழர் விவகாரம் உட்புகுத்தப்பட்டு உள்ளது.

ஐ.நா சபைக்கு மலையகத் தமிழர் பிரச்சினையைத் தனியாக கொண்டு செல்வது நடைமுறைச் சாத்தியம் குறைவு. உலகம் முழுவதும் தொழில் (work) அடிப்படையில் ஒடுக்கப்படும் நாட்டு மக்கள் பிரதிநிதிகளுடன் இணைந்து எமது நிலையை எடுத்துச் செல்லல் ஓரளவு சாத்தியம். அதுவே நடந்தது. '2030இல் யாரையும் பின்னிருத்த மாட்டோம்' எனும் உங்கள் இலக்கு உண்மையானது என்றால் எங்களையும் இணைத்துக் கொள்ளுங்கள் என்பதை ஐ.நாசபையிடம் வலியுறுத்த வேண்டியது மலை யகத் தமிழரது கடமை. அதனை நிறைவேற்றுவதும் நிறைவேற்றாததும் ஐ.நா கடமை. இந்த இலக்கின் பயணம் இப்போது பாதியில் நிறுத்தப்பட் டுள்ளது. கொவிட் 19க்குப் பிறகு புதுப்பிக்கபடலாம். ஏற்கனவே (2000) மிலேனியம் இலக்குகள் (MDG) நிர்ணயிக்கப்பட்டு அது முழுமையாக வெற்றி அளிக்காத நிலையிலேயே 2015இல் SDG அறிமுகப்படுத்தப் பட்டது.

2006இல் தொடங்கி 2015இல் நிறைவுறுத்தப்படுவதாக தயாரிக்கப்பட்ட மலையக அபிவிருத்திக்கான பத்தாண்டுத் திட்டம் 2016இல் தொடங்கி 2025இல் நிறைவுறுத்தப்படுவதாக மீளமைக்கப்பட்டு, அதுவே 2016 - 2020 ஆக மாற்றி அமைக்கப்பட்டது. இப்போது அந்தக் காலமும் முடிந்துவிட்டது. இனிவரும் காலத்தில் இந்த திட்ட அறிக்கை இற்றைப்படுத்தப்படல் வேண்டும். அதற்கும் எம்.வாமதேவன் போன்ற ஆளுமைகள் வேண்டும். அவரது ஆலோசனைகளைக் கேட்டுச் செயற்படும் அரசியல் தலைமை களும் வேண்டும்.

முடிவுரையாக,

"குடியுரிமையற்ற நிலைமை என்பது ஒவ்வொரு தனிப்பட்டவர்களினதும் கௌரவத்தை, உரிமையை, நிலைபேறான அபிவிருத்தியை அகற்ற வல்லது. இலங்கையில் பெருந்தொகையான சனத்தொகையைக் கொண்ட மலை நாட்டுத் தமிழ் சமூகத்தின் குடியுரிமைப் பறிக்கப்பட்டது. 1960 முதல் 2000 வரையான காலப்பகுதியில் மலையகத் தமிழர்களின் பறிக்கப்பட்ட வாக்கு ரிமை மீள வழங்கப்பட்டது. சில சட்ட மறுசீரமைப்புகளைத் தவிர இன்றும் கூட இலங்கையில் விளிம்புநிலையில் வாழும் மக்களாக இவர்களே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளனர். இந்தச் சமூகம் மிக நீண்டகாலமாக கட்டமைக்கப்பட்ட பேதப் படுத்தலுக்கு உள்ளாகிவருவதனை இந்த ஆய்வறிக்கை விவாதிக்கிறது. அத்தகைய கட்டமைக்கப்பட்ட பேதப்படுத்தலை (Structural Discrimination) குடியுரிமை இன்மை எனும் கண்ணாடி (lens) ஊடே இந்த ஆய்வு பார்க்கிறது. இந்த சமூகம் எதிர்நோக்கும் அபிவிருத்திக்கான சவால்கள் ஆழமாக ஆராயப் படவேண்டியது. அதே நேரம் அத்தகைய அபிவிருத்தி அவர்களைச் சென்ற டைவதை உறுதி செய்யும் செயற்பாடுகள் ஊடாகவே அர்த்தமுள்ள குடியுரி மையைப் பெறுவார்கள்" என எழுதப்பட்டுள்ளது. முடிவுரைக்கு வைக்க வேண்டியது முற்றுப்புள்ளியா... ?

பெருந்தோட்டம் - சிறுதோட்டம் என்ற பேதம்; வம்சாவளி என்ற பெயரில் வஞ்சகம்.

- ஐ.நாவின் கவனத்தை நாடும் திலகர்

வம்சாவளி மற்றும் தொழில் சார்ந்து பேதப்படுத்தலுக்கு உள்ளா தலுக்கு எதிராக (Discrimination Based on Work & Descent) எனும் ஐக்கிய நாடுகள் சபையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இலங்கையில் (இந்திய) வம்சாவளி மற்றும் தொழில் (பெருந்தோட்டம்) சார்ந்து பேதப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கும் எமது மலையகப் பெருந்தோட்ட சமுதாயம் சார்ந்து எனது கருத்துக்களை ஐக்கிய நாடுகள் சபைக்கான ஜேர்மனிய தூதரகத்தின் ஊடாக 2020 செப் .14 முன்வைத்தேன்.

2015, 2019 என இரண்டு தடவைகள் ஐக்கிய நாடுகள் சபை சூழலுக்கு சென்று எடுத்த முயற்சிகள் இம்முறை ஒரு படி மேலே சென்றுள்ளதை உணர முடிந்தது. கடந்த வருடம் சென்கல் நாட்டு (ஐ.நாவுக்கான) தூதரகத்தின் ஊடாக நேரடியாகவும் இம்முறை இணைய வழியாக இணைய முடிந்தது. இந்த நோக்கத்துக்காக 2019 இல் உருவாக்கப்பட்ட சர்வதேச பாராளுமன்ற உறுப்பினர்கள் அமையத்தின் (International Parliamentarian Forum for DWD) உறுப்பினராக இந்த முயற்சி வெற்றி யளித்தது.

இதேபோல ஜேர்மனி, பிரேசில், இந்தியா, நேபாளம், பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் ஆபிரிக்க நாடுகளில் இருந்தும் பல பாராளு மன்ற உறுப்பினர்களும் சிவில் சமூக பிரதிநிதிகளும் தாம் எவ்வாறு பேதப்படுத்தப்படுகிறோம் என்பதை முன்வைத்தனர்.

ஐ.நாவுக்கான ஜேர்மனிய தூதுவர் முழுமையாக உரைகளை செவி மடுத்து சாதகமான பதிலுரை வழங்கி இருந்தார். எமது மக்களின் பிரச்சி னைகளை சர்வதேச கவனத்துக்குக் கொண்டு செல்வதுடன் அதற்கான தீர்வையும் தேடிச் செல்வோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

- ஊடகச் செய்தி 16/09/2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைநாட்டுத் தமிழர்கள் : இலங்கையில் ஒரு புதிய எதிர்காலத்தை வரைதல்

17 UP-OUNTRY TAMILS: CHARTING A NEW FUTURE IN SRI LANKA

டானியல் பாஸ், பா.ஸ்கந்தகுமார் ஆகியோர் தொகுத்தளித்திருக்கும் நூல் - ஓர் அறிமுகம்

மலையகத் தமிழருக்கான ஒரு புதிய எதிர்காலத்தை பட்டியலிடுவதை இலக்காகக் கொண்டு தொகுக்கப்பட்டு இருக்கும் புத்தம் புதிய ஆங்கில நூல் 'மலைநாட்டுத் தமிழர்கள் இலங்கையில் ஒரு புதிய எதிர்காலத்தை வரைதல்' (Upcountry Tamils: Charting A New Future in Sri Lanka - edited by - Daniel Bass & B. Skanthakumar)

இனத்துவ கற்கைகளுக்கான சர்வதேச நிலையம் (கொழும்பு) 2019 ஆம் ஆண்டு வெளியிட்டு இருக்கும் 243 பக்கங்களைக் கொண்ட தரமான வடிவ மைப்பும் தரமும் கொண்ட நூல் இந்த 'மலைநாட்டுத் தமிழர்கள் இலங்கை யில் ஒரு புதிய எதிர்காலத்தை வரைதல்' எனும் ஆங்கில தொகுப்பு நூல்.

இனத்துவ கற்கைகளுக்கான சர்வதேச நிலையம் வெளியிட்டுள்ள தாலோ என்னவோ ஆங்கிலம், தமிழ் (இந்தியத் தமிழ், இலங்கைத் தமிழ்) முஸ்லிம், சிங்களம் என இலங்கையின் நான்கு இனங்களையும் (ஆங்கிலம், பர்கர் எனக் கொண்டால்) பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் ஆய்வாளர் களின் கட்டுரைகள் இந்த நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

அமெரிக்கரான கலாநிதி டானியல் பாஸ் இலங்கை பர்கர் இனத்தைச் சேர்ந்தவரல்ல. முழுக்க முழுக்க ஐக்கிய அமெரிக்க பிரஜை. அதேநேரம் இலங்கை மலையகத் தமிழர்கள் தொடர்பாக கடந்த இருபது ஆண்டு களுக்கு மேலாக ஆய்வு செய்தும் எழுதியும் வருபவர். 90களின் இறுதியில் அவரது முதலாவது இலங்கை வருகைக் காலத்தில் அவர் வந்து சேர்ந்த இடம் ஹட்டன் CSC - Centre for Social Concern. இந்த நிலையம் மலையக வரலாற்றில் மிக முக்கியமான இடம் என்பது வலியுறுத்தப்படவேண்டியது. 70களில் இலங்கைத் தமிழர் தம் வாழ்வில் 'வட்டுக்கோட்டைத் தீர்மானம்' நிறைவேற்றிக் கொண்டதுபோல் மலையகத் தமிழர்கள் ஹட்டன் தீர்மானம் நினைவேற்றிக் கொண்ட நிலையந்தான் இந்த CSC. ஹட்டன் புகையிரத நிலைய வீதியில் இலக்கம் 30 இல் இயங்கும் இந்த நிலையத்தின் சிறப்பே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது எந்தேரமும் இயங்கிக் கொண்டு இருப்பதுதான்.

அந்த நிலையத்தின் தலைமை இயக்குனர்களாக இருப்பவர்கள் கத்தோலிக்க பாதிரியார்கள். ஆனால், பாதிரியார் உடை தரிக்காது சாதாரணமான ஆடை அணிந்து சமூகப் பணிகளுக்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள். இதன் ஆரம்பகால இயக்குனர் அருட்பணி அல்போன்ஸ். இவர் தாயகம் திரும்பியவராக தமிழகம் சென்று, அங்கு மன்றம் அமைத்து பணிசெய்தவர். அதுவே மக்கள் மறுவாழ்வு மன்றமாகி சிவலிங்கம் செந்தூரன் முன்னெடுப்பில் முனைப்புடன் தமிழ்நாட்டில் இயங்கியது.

இது போன்ற வரலாற்றுப் பின்னணி கொண்ட ஹட்டன் CSC நிலையத்தில் 90களின் இறுதி காலப்பகுதியில் இணைந்து கொண்டவர் டானியல் பாஸ். அமெரிக்க மிச்சிக்கன் பல்கலைக்கழகத்தில் மானுடவியல் பேராசிரியராக இருந்த (நாவலப்பிட்டி கதிரேசன் வித்தியாலய பழைய மாணவர்) வெலன்டைன் டேனியலின் (இவரது 'கருகிய தாலாட்டு' நூல்பற்றி இலக்கியச் சாரல் பகுதியில் கட்டுரையாளரால் அறிமுகம் எழுதப்பட்டது) மாணவரான டானியல் பாஸ் அதே பல்கலைக்கழகத்தில் மானுடவியலில் கலாநிதி பட்டம் பெறுவதற்காக ஆய்வுக் களமாக தெரிவு செய்து கொண்டது இலங்கை மலையகம். ஆய்வுத் தளமாக அமைந்தது இந்த CSC. அங்கு அவர் தங்கி இருந்து ஆய்வுப்பணிகளில் ஈடுபட்ட காலத்தில் அவரை அறிந்திருந்தேன் (கட்டுரையாளர்). அப்போது அந்த நிலையத்தின் இயக்குநராக இருந்த அருட்பணி மரிய அந்தனி அதற்கான அறிமுகத்தைச் செய்திருந்தார். அப்போது நான் (கட்டுரையாளர்) ஹட்டன் லோயல் கல்வி நிலையத்தின் இயக்குனராக இருந்தேன்.

இந்த அமெரிக்க ஆய்வாளருடன் இணைந்து இலங்கையின் சமூக விஞ்ஞான கழகத்தின் உறுப்பினரும் ஆய்வாளருமான பாலசிங்கம் ஸ்கந்த குமார் இணைந்து இந்த தொகுப்பினை வெளிக்கண்டுவந்து உள்ளனர். ஸ்கந்தகுமார் மலையகத் தமிழர்களின் சமூக பொருளாதார ஆய்வுப் பணிகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருபவர். சட்டத்துறை வல்லுனரான இவர் லன்டன் பல்கலைக்கழகத்தில் சட்ட முதுமாணிப் பட்டம் பெற்றவர். மலையகம் தொடர்பான செயலமர்வுகள் கருத்தரங்குகளில் வளவாளராக / பங்குபற்றுனராக அமைதியாக ஆர்ப்பாட்டமின்றி பங்கு கொண்டு வருபவர்.

இலங்கையில் சமகாலத்தில் மலையகத் தமிழர்கள் எதிர்நோக்கும் அரசியல், சமூக, பொருளாதார, வரலாற்று, கட்டமைவு இடர்பாடுகள் மற்றும் சவால்களை அலசி ஆராய்வதே இந்த தொகுப்பு என நூலுக்கான அறிமுகத்தைத் தருகிறார் இனத்துவ கற்கைகளுக்கான சர்வதேச நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மரியோ கோமஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் பதினொரு ஆய்வாளர் களின் கட்டுரைகள் இந்த நூலிலே சேர்க்கப்பட்டுள்ளன. இந்த பதினொரு பேரும் ஏற்கனவே கூறியுள்ளது போல நான்கு இடங்களையும் அதில் தமிழ் என்று வருகின்றபோது இலங்கைத் தமிழ்- மலையகத் தமிழ் என அதனையும் இணைத்து உள்வாங்கப்பட்டு இருப்பதுடன் பால்நிலை சமத் துவம் பேணும் வகையில் ஐந்து பெண் ஆய்வாளர்களின் கட்டுரைகளையும் உள்வாங்கிக் கொண்டுள்ளமை சிறப்பு.

அவை பெண்ணியம் சார்ந்தவையாக மலையகப் பெண்கள் சார்ந்ததாக அமைவது மேலதிக சிறப்பு. அந்தவகையில் சயினப் இப்ராஹிம், கலாநிதி மைத்திரி ஜகதீஷன், லெட்சுமனண் கமலேஸ்வரி, பொன்னையா லோகேஷ்வரி, புத்திமா பத்மசிரி ஆகிய பெண் ஆளுமைகளின் எழுத்துக்கள் இந்த நூலுக்கு அழகும் பலமும் சேர்க்கின்றன.

சயினப் இப்ராஹிம் ஒரு பெண்ணியவாதி. பெண்கள், குழந்தைகள், மாற்றுப் பாலினத்தவர்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்த தளத்தில் பணியாற்றுபவர். சமூக விஞ்ஞானத்திற்கான டாட்டா நிறுவகத்தில் (இந்தியா) அபிவிருத்திசார் முதுமாணி பட்டத்தினைப் பெற்றவர்.

கலாநிதி மைத்திரி ஜெகதீஷன் ஐக்கிய அமெரிக்க கலிபோர்னிய சண்டாக்ளாரா பல்கலைக் கழகத்தின் உதவிப்பேராசிரியராகப் பணியாற்று பவர். இவரது 'தேயிலையும் தோழமையும்' நூல்பற்றி இலக்கியச் சாரல் பகுதியில் கட்டுரையாளரால் அறிமுகம் எழுதப்பட்டுள்ளது.

லெட்சுமனண் கமலேஷ்வரி, பேராதனைப் பல்கலைக் கழகத்தில் சமூகவியல் பட்டம் பெற்ற இவர் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் அபிவிருத்திசார் முதுமாணி கல்வியைத் தொடர்ந்து வருகிறார். ஐ.நா சபையின் சிறுபான்மை இனங்களுக்கான நிகழ்ச்சித்திட்டத்திற்குள் 2015 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட இவர், நீதிக்கும் சமத்துவத்துக்குமான நிறுவனத்தில் சிரேஷ்ட நிகழ்ச்சித் திட்ட அலுவலராக பணியாற்றுகிறார். இலக்கிய ஆர்வமும் மிக்கவர்.

பொன்னையா லோகேஷ்வரி, அரசறிவியல்துறை பட்டதாரியான இவர் மனித உரிமைகள் டிப்ளோமாவையும் நிறைவு செய்தவர். கண்டி, மனித அபிவிருத்தித் தாபனத்தின் சிரேஷ்ட நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளரான இவர் சர்வதேச ரீதியாக இடம்பெறும் செயலமர்வுகள், கருத்தரங்குகள், மாநாடுகளில் பங்குபற்றிவரும் அனுபவமிக்கவர். ஆசிய கிராமிய பெண்கள் அமையம் மற்றும் அரசியல் பாசறையின் வழிப்படுத்தல் குழு உறுப்பின ராகவும் செயற்படும் இவர் மலையகப் பெண்கள் தொடர்பான பல கற்கை களைச் செய்து வருபவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திமா பத்மசிரி இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறை விரிவுரையாளர், சட்டத்தரணி. சர்வதேச உறவுகள் தொடர்பில் முதல் பட்டமும், முரண்பாடுகள், பாதுகாப்பு, அபிவிருத்தி குறித்து லன்டன் பல்கலைக்கழக முதுமாணி பட்டமும் பெற்றவர்.

இவர்கள் தவிர தொகுப்பாளர்கள் இருவருடன் பேராசிரியர் ஏ.எஸ்.சந்திர போஸ் (இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்), பெரியசாமி முத்துலிங்கம் (சமூக அபிவிருத்தி நிறுவனம் - கண்டி), அன்டன் பியரத்ன (மானுடவியல் சிரேஷ்ட்ட விரிவுரையாளர்- இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்), கலாநிதி ராமசாமி ரமேஷ் (பேராதனைப் பல்கலைக் கழகம்) ஆகியோரது கட்டுரை களும் அடக்கம்.

மூன்றுத் தொகுதிகளாக்கப்பட்டுள்ள கட்டுரைகளின் முதலாவது தொகுதிக்கு 'இடத்தின் அரசியல்' (The politics of Place) என தலைப்பு இடப்பட்டுள்ளது. இதில் டானியல் பாஸ் எழுதியுள்ள 'மலைநாட்டுத் தமிழர்கள் இலங்கையில் ஒரு புதிய எதிர்காலத்தை வரைதல்', கலாநிதி இரா.ரமேஷ் எழுதியுள்ள 'பெருந்தோட்ட சமூகத்தின் முழுமை பெறாத பிரஜாவுரிமை: அரச நிறுவனங்களினதும் பொதுசேவைகளினதும் கிடைப்பனவு' (Incomplete Citizenship of the Plantation Community: Access to Government institutions and Public Services Delivery), லெட்சுமனண் கமலேஷ்வரி எழுதியுள்ள 'நிலைமாற்றுகால நீதியில் மலைநாட்டுத் தமிழ்ப் பெண்களின் மறைக்கப்பட்ட அனுபவங்கள்' (Forgotten Experiences of Up - Country Tamil Women in Transitional Justice) ஆகிய கட்டுரைகள் உள்வாங்கப் பட்டுள்ளன.

இரண்டாவது தொகுதி உழைப்பின் பால்நிலைப் பற்றியது (The Gender of Labour). இந்த தொகுதியின் கீழ் பேராசிரியர் ஏ.எஸ்.சந்திரபோஸ், பொன்னையா லோகேஸ்வரி ஆகியோர் இணைந்து எழுதிய தொழில் செய்யக்கூடிய திறமை, உயர்கல்வி, வாழ்வாதாரம்: தேயிலைப் பெருந் தோட்டப் பெண்கள் சார் கண்ணோட்டம் (Employable Skills, Higher Education and Livelihood: Outlook for Women in the Tea Plantations). கலாநிதி மைத்ரி ஜெகதீஷன் எழுதிய கட்புலனாகும் களம்: ஒழுங்கமைக் கப்படாத உழைப்பாளர்களை உழைக்கும் பெண்கள் முன்னணியுடன் ஒழுங்கமைத்தல் (Visible Grounds: Organising Unorganised Workers with Working Women's Front) செயினப் இப்ராஹிம், புத்திமா பத்மசிரி இணைந்து எழுதிய தோட்டத்துக்கும் தொழிற்சாலைக்கும் இடையே: கட்டமைக்கப்பட்ட சுரண்டலின் மீள் உற்பத்தி (Between the Factory and the Estate: A Reproduction of Exploitative structures) ஆகிய கட்டுரைகளும் அடங்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது தொகுதியாக சேர்க்கப்பட்டிருக்கும் இரண்டு கட்டுரைகள் இந்த நூலின் மகுடம் எனலாம். 'பெருந்தோட்டங்களுக்கு அப்பால்' (Beyond the Plantations) எனும் தலைப்பில் நகர்சார்ந்து நகர்ந்து செல்லும் மலையகத்தவர் பற்றியும் வடகிழக்கில் வாழும் மலையகத் தமிழர் பற்றியும் இரண்டு கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

அன்டன் பியரத்ன எழுதிய 'பட்டணத்து வாழ்க்கை மீதான ஆசை: கொழும்பில் குடும்பம் அமைக்கும் பெருந்தோட்டத் தமிழர்களின் அபிலாஷைகள் (Life in Pattanam as Assai: Estate Tamil's Aspiration of Home in Colombo)' எனும் கட்டுரையும் 'போருக்குப் பின்னான அரசியல் அபிலாஷைகளும், வடக்கு - கிழக்கு வாழ் மலையகத் தமிழர்களை அணிதிரட்டலும்' (Post - War Political aspirations and Mobilisation of Hill country Tamils in the North - East) எனும் பெ. முத்துலிங்கம் எழுதியுள்ள கட்டுரையும் மலையகத்தின் புதிய பரிமாணங்கள் எனலாம்.

"கெட்டும் பட்டணம் போ" எனும் தமிழர் பழமொழியில் வந்த தமிழ்ச் சமூகம் ஒன்று "பட்டணம் போய்க் கெட்டுவிடும்" அச்சம் குறித்து அவதானம் செலுத்த வேண்டி உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் தெரிவுசெய்யப்பட்ட பெருந்தோட்டத்துறையில் நடைமுறைப்படுத்தப்படும் வெளியகப் பயிரிடல் முறைமை

18

The Implementation of outgrowing system in selected tea plantation sector in Sri Lanka

பேராசிரியர் ஏ.எஸ்.சந்திரபோஸின் ஆய்வறிக்கை

கண்டியைத் தளமாகக் கொண்டு இயங்கும் சமூக அபிவிருத்தி நிறுவனம் ISD 2017ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள ஓர் ஆய்வறிக்கை இந்த 'இலங்கையில் தெரிவுசெய்யப்பட்ட பெருந்தோட்டங்களில் (துறையில்) நடைமுறைப்படுத்தப்படும் வெளியகப் பயிரிடல் முறைமை' (The Implementation of Outgrowing System in Selected Tea Plantation Sector in Sri Lanka) எனும் 25 பக்கங்களைக் கொண்ட ஆய்வறிக்கை நூல்.

முகப்பு அட்டையில் ISD வெளியீடு என மாத்திரம் குறிப்பிடப்பட்டு இருந்தாலும் நூலைத் திறந்தவுடன் இந்த ஆய்வு இலங்கைத் திறந்த பல்கலைக்கழக சமூகவியல் கற்கைத்துறையின் விரிவுரையாளர் ஏ.எஸ்.சந்திர போஸ் அவர்களுடையது என்பதான பதிவு உள்ளது. அங்கே சிரேஷ்ட விரிவுரையாளராக இருந்தவர் இந்த அறிமுகக்குறிப்பு எழுதப்படும் நாளில் பேராசிரியராக பதவி உயர்வு பெற்றுள்ளார். தனித்துவ தமிழ் அடையாளங் களைக்கொண்ட மலையகத் தமிழ் சமூகத்தில் இவர் எட்டாவது பேராசிரியர் என்ற பெருமையைப் பெற்றுக்கொள்கிறார். அவரைப் பாராட்டி கௌரவித்து அவரது பிறந்த ஊரான ஹட்டன் நகரில் அண்மையில் (29/08/2020) பெரும் விழா எடுக்கப்பட்டது. இந்த ஆய்வறிக்கை சமர்ப்பிக்கையில் அவர் பேராசிரியர் அல்லாத போதும் இந்தக் கட்டுரை எழுதப்படும் நாளில் அவரது அடைவுக்கு வாழ்த்துத் தெரிவித்து பேராசிரியர் ஏ.எஸ்.சந்திரபோஸ் என்றே குறிப்பிடுவது தகும்.

இதற்கு முன்னதாக இரண்டு மாதங்களுக்கு முன்னர் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் வெளியீடு செய்யப்பட்ட 'இலங்கை மலையகத் தமிழர்கள் - நூல் விபரத்திரட்டு' - (பேராசிரியர் சி.சந்திரசேகரன், கலாநிதி இரா. இரமேஷ்) எனும் நூல் வெளியீட்டின் போது அந்த நூல் குறித்த ஆய்வுரையை பேராசிரியர் ஏ.எஸ்.சந்திரபோஸ் ஆற்றியிருந்தார். (அப்போது மலையகத்தின் முன்னாள் மூத்த பாராளுமன்ற உறுப்பினர் பி.பி .தேவராஜ்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் இளைய பாராளுமன்ற உறுப்பினர் ம.திலகராஜ் ஆகியோர் கரங்களினாலும் அவர் கௌரவிக்கப்பட்டார்) அந்த உரையில் அவர் குறிப்பிட்ட ஒரு விடயம் ஒரு புத்தகம் எத்தனை பக்கங்களைக்கொண்டது என்பதன் அடிப்படையில் அதன் தரத்தை தீர்மானிக்காது, சிறிய நூலா யினும்கூட அது தாங்கிவரும் செய்தி / தகவல் என்பதே கவனத்துக்குரியது என ஓர் அறிஞரின் சிறு நூல் ஒன்றையும் அதில் குறிப்பிடப்பட்ட முக்கிய தகவலையும் கூட பகிர்ந்து கொண்டார்.

அந்த கூற்றினை ஒத்தாற்போல அவரே எழுதியுள்ள இந்த 25 பக்க ஆய்வு அறிக்கை இன்றைய நிலையில் மலையக மக்களின் முக்கிய விடயம் ஒன்று தொடர்பிலானது. அதுதான் இந்த 'அவுட்குரோவர' முறைமை.

ஒருபக்கம் பெருந்தோட்ட மக்கள் சிறுதோட்ட உடமையாளர்களாக்கப் படவேண்டும் என்ற கோரிக்கை அரசியல் மயப்பட்டு வரும் நிலையில், பெருந்தோட்ட முறைமையானது 'அவுட் குரோவர்' முறைமைக்குள் வேகமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அவுட்குரோவர் முறைதான் 'சிறுதொட்ட உடைமை' எனப் புரிந்துகொள்ள வைக்கப்பட்டுள்ள தொழிலாளர்களை அவுட்குரோவர் முறைமை யின் குறைபாடுகளைக் காட்டி 'சிறுதோட்ட உடமையாதல்' வேண்டாம் எனக் கூறவைக்கும் நுண்ணரசியல் ஒருபக்கம் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. சில மலையக அறிவு ஜிவிகளும் கூட அவுட்குரோவர் முறையை சிறுதோட்ட உடமை என புரிந்து கொண்டுள்ளமை துரதிஷ்டவசமானது.

அதே நேரம் இலங்கையின் உயர்நிலத் தேயிலைத் (High-grown tea) தோட்டங்கள்பெருமளவில் 'பெருந்தோட்டங்கள்' (Plantation) ஆகவும் மத்திய மற்றும் தாழ்நிலத் தேயிலை (Mid and low Grown Tea) தோட்டங்கள் பெருமளவில் 'சிறு தோட்ட' (Tea Small holders) உடமைகளாக இருப்பதும் கவனத்தில் கொள்ளப்படவேண்டியது. பெருந்தோட்டத் தொழிலாளர்களில் 99.9 சதவீதமானவர்கள் மலையகத்தமிழர்களாகவும், சிறுதோட்ட உடமை யாளர்களில் 99 சதவீதமானவர்கள் சிங்களவர்களாகவும் அமைவது இன்னொரு முகம். இதைப் பற்றி எல்லாம் நுணுகி ஆராயத் தலைப்படாது மேலோட்டமாக எழுதும், பேசும் விடயமல்ல இது.

எனினும், இந்த அவுட்குரோவர் முறைக்கும் சிறுதொட்ட உடமைக்கும் இடையேயான அடிப்படை வேறுபாடு 'நிலம்' என்பதில் இருந்து வேறுபடு கிறது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். சிறுதோட்ட உடமையாளராக வேண்டும் என்ற கோரிக்கையின் பின்னணியில் இந்த சமூகம் 'நிலவுடைமை' சமூகமாக மாற வேண்டும் என்ற கோரிக்கை இருப்பதை உன்னிப்பாக அவதானிக்க வேண்டும். 'தேயிலை' எனும் ஒரே தொழில் துறையில் தமிழர்கள் அன்றாட நாட்கூலிகளாகவும் அதற்காக தினமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதியில் இறங்கி 1000/- கேட்டுப் போராடுபவர்களாகவும் இருக்கையில், சிங்களவர்கள் அதே தொழில் துறையில் சிறுதோட்ட உடமையாளர்களாக நிலத்துடன் கூடிய தேயிலை மரங்களைக் கொண்டு உள்ளார்கள் என்பது உணரவேண்டும். மறுபக்கமாக இலங்கையின் தேயிலை ஏற்றுமதியில் 72 சதவீத்தை சிறுதோட்ட உடமையில் இருந்தும் 28 சதவீத்தையே பெருந் தோட்டத்துறை தருகின்றது என்கின்ற தகவலும் கவனத்துக்குரியது.

இவ்வாறான அரத்தப்படுத்தல்கள் இந்த ஆய்வறிக்கையில் இல்லாத போதும் இதில் சேர்க்கப்பட்டுள்ள புள்ளிவிபரங்கள் பல தகவல்களை தந்து செல்கிறது. நூலுக்கான முன்னுரையை எழுதி உள்ள சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவர் பி. முத்துலிங்கம் 1972ஆம் ஆண்டு காணி மறுசீரமைப்புச் சட்டத்தின் (Land reform act) பின்னதாக பெருந்தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டதையும் (அதற்கு முன்னர் பிரித்தானியர் வசம் இருந்தது) அதன் அமுல்படுத்தும் அரச நிறுவனங்களாக இலங்கை அரச பெருந்தோட்ட யாக்கம் (SLSPC - Sri Lanka State Plantation Cooperation), மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபை (JEDB - Janatha Estate Development Board- ஜனவசம) ஆகியன அமைந்ததையும் குறித்து உரைக்கிறார்.

அதே நேரம் 1992இல் அரச கூட்டுத்தாபனங்களின் முறையற்ற முகாமைத் துவம் காரணமாக பெருந்தோட்டங்கள் தனியார் மயப்படுத்தலுக்கு உள்ளானதையும் குறிப்பிடுகிறார். அதற்கு உலக வங்கி ஆலோசணை வழங் கியது என்கிறார். அதன்போதே 23 பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகள் தோற்றம் பெற்றன. சில தோட்டங்கள் அரச கூட்டுத்தாபனங்களின் கீழ் (SL SPC - JEDB) இயங்கின.

அவை தொடர்ந்தும் நட்டத்தை எதிர்கொள்ள 2002 ஆம் ஆண்டளவில் ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB), விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிறுவனம் (IFAD) உணவு, விவசாய அமைப்பு (FAO) ஆகிய அமைப்புகள இந்த கூட்டுத்தாபனங்களை 'மீட்க' (came to the rescue of the companies by recommending out-grower model) அவுட்குரோவர் (வெளியகப் பயிரிடல்) முறையைப் பரிந்துரை செய்தது என்கிறார்.

2005ஆம் ஆண்டு ஆகும்போது பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளும் தங்களை 'மீட்டுக்' கொள்ள அவுட்குரோவர் முறையை நாடியது. அதற்கான பிரதான காரணம் தொழிலாளர்களின் எண்ணிக்கை சடுதியாக குறை வடைந்து வந்த நிலையில் (in recognition of the looming Labour shortage) அதனை சமாளிக்கும்ஏற்பாடாக இந்த முறைமையைக் கையாண்டது எனவும் குறிப்பிடுகிறார்.

இந்த அவுட்குரோவர் முறையில் சிறுதோட்ட உடமையில் குறித்த பரப்பளவு நிலம் என்பதற்கு அப்பால் சராசரியாக 1500 தேயிலைச் செடிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதாக தொழிலாளர்களுக்கு வழங்குவதற்கு அவர்களுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு வேலை நாட்களுக்கு மாற்றீடான முறையில் தொழிலாளர்க ளிடம் தொழில் உரிமைகளை மீறிய முறைமையிலான அறுவடையைப் பெற்றுக் கொள்ளுதல் நடைபெறுகிறது. அதுவே நிலவடமையுடன் கூடிய முறைமை என்றால் தொழில் உரிமை இல்லாதுவிட்டாலும் நிலவுடமை எஞ்சும் எனும் வாதம் கட்டுரையாளரால் பல சந்தர்ப்பங்களில் (பாராளுமன் றிலும்) முன்வைக்கப்பட்டுள்ளது. அமைச்சு மட்ட அரசியல் தொழிற்சங்க கலந்துரையாடல் ஒன்றில் இந்தக் கோரிகைை ஏற்றுக் கொள்ளப் பட்டு கூட்டக் குறிப்பிலும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தது.

இதுபோன்ற யதார்த்த நிலைமைகள் ஒருபுறம் இருக்க பேராசிரியர் ஏ.எஸ்.சந்திரபோஸின் இந்த ஆய்வு அவுட்குரோவர் முறையை கோட்பாட்டு ரீதியான (Theoretical analysis) ஆய்வாகவும், தெரிவு செய்யப்பட்ட சில தேயிலைத் தோட்டங்களை கள ஆய்வாகவும் (Case Study) கொண்டு மேற் கொள்ளப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் வலப்பனை பிரதேசத்தின் மஹாஊவ தோட்டத்தின் டேம் (Dam) டிவிஷன், இரத்தினபுரி மாவட்டத்தின் கஹவத்தை பிரதேச எந்தான தோட்டம், ஹட்டன். பிரதேசத்தின் டிக்கோயா பட்டல்கல தோட்டம், நுவரெலிய - கண்டி வீதியில் அமைந்துள்ள நுவரெலிய தோட்டம் என்பன இந்த Case Sudyக்குள் உள்வாங்கப்பட்டுள்ளன.

ஆனாலும் இப்போது மலையகப் பெருந்தோட்டங்கள் பலவற்றிலும் இந்த அவுட்குரோவர் முறை நடைமுறைக்குவந்துவிட்டது. அதற்கான சரத்துகளை 2017, 2019இல் செய்துகொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந்தமும் கொண்டுள்ளது. முடிவுரையாக பேராசிரியர் சந்திரபோஸ் தனது அவதா னங்களையும் பரிந்துரைப்புகளையும் கூட வழங்கி இருக்கிறார்.

ஆனால் மலையகப் பெருந்தோட்ட சமூகத்தில் தோட்டத் தொழிலாளர் களின் எண்ணிக்கை சடுதியாக குறைவடைந்து செல்வதாக அண்மைய பத்திரிகை செய்தி பரபரப்பை ஏற்படுத்தியது. உண்மையில் தொழிலாளர்கள் இருந்தும் அவர்கள் தொழிலாளர்கள் அல்லாதவகையில் வேலை வாங்கப் படுகிறாரகள் என்பதே இதற்குள் மறைந்திருக்கும் உண்மை. அதே பத்திரிகையாளர் எத்தனைத் தோட்டங்களில் எத்தனைத் தேயிலைச் செடிகள் அவுட்குரோவர் முறையில் வழங்கப்பட்டுள்ளன என்பதையும் அதில் எத்தனை 'அவுட்குரோவர்கள்' (தொழிலாளர்கள் அல்ல) பணியாற்று கிறார்கள் எனும் கேள்வியையும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரகாரம் கேட்டுப் பெறுவார் எனில் இன்னும் பல உண்மைகள் வெளிவரும்.

"நிலமே எங்கள் உரிமை" எனும் 'காலா' படப் பாடலைப் பாடி நடித்து மேடையில் புரட்சி பேசினால் நிலவுரிமை கிடைக்காது.

அதற்காக அரசியல் களமாடவும் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19 இலங்கை மலையகத் தமிழ் மக்களின் வரலாறு

A History of the Up-Country Tamil People in Sri Lanka

எஸ். நடேசனின் இடதுசாரிய பார்வையில் அமைந்த மலையக வரலாற்று ஆய்வு நூல்

"இரண்டாம் உலக மகாயுத்தத்தின் இறுதி காலத்தில் கண்டி சிஸ்ட்டன் தோட்டத்தில் நாங்கள் வாழ்ந்தபோது தோட்டத் தொழிலாளர்கள் மீது அன்பு காட்டுவதற்கும், சூழவமைந்த சிங்கள கிராமங்களில் பாடப்படும் நாட்டார் பாடல்களை கேட்டு ரசிக்கவும் சிறுவயதிலேயே எனக்கு கற்றுக் கொடுத்த எனது தாயார் காமாட்சி அம்மாளின் நினைவுகளுக்கு இந்த நூல் சமர்ப்பணம்" என முதற் பக்கத்திலேயே எம் உணர்வுகளைத் தட்டி உட்கார வைத்துவிடும் நூல், எஸ்.நடேநசன் எழுதிய இந்த 'இலங்கை மலையகத் தமிழ் மக்களின் வரலாறு' (A History of the Upcountry Tamil People in Sri Lanka – S.Nadesan).

நான் (கட்டுரையாளர்) முழுமையாக வாசிப்பதற்கு முயற்சித்த முதல் ஆங்கில நூல் இது என உறுதியாக சொல்ல முடியும். அப்போதுதான் க.பொ.த உயர்தரப் பரீட்சை எழுதி முடிந்த எனக்கு ஹட்டனைத் தளமாகக் கொண்டு இயங்கிய 'நந்தலாலா' இலக்கிய வட்டத்தினரின் தொடர்புகள் கிடைத்தது. அது மிக நெருக்கமானது என்று கூற இயலாவிட்டாலும் அவ்வப் போது சிற்சிலபொழுதுகளில் அந்த குழுவினரின் பிரதானமானவர்களைச் சந்திக்க, உரையாட வாய்ப்பு கிடைத்தது.

அத்தகைய சந்தர்ப்பம் ஒன்றில் இரவல் வாங்கி வாசிக்கக் கிடைத்த அரிய ஆங்கில நூல் இது. ஆங்கிலத்தையே அப்போதுதான் படிக்க ஆரம் பித்த காலம். அப்புறமெங்கே ஆங்கில நூலைப்படிப்பது? இருந்தும் என்னால் இயன்ற மட்டில் முழுப் புத்தகத்தையும் வாசித்தேன் என்பதுதான் முக்கியமானது. காரணம் அது என் மக்களின் வரலாற்றைப் பேசுகிறது எனும் ஆர்வமிகுதியே.

நூல் வெளியாகி சரியாக பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் 2002ஆம் ஆண்டு நூலாசிரியரை நேரில் காணும், கதைக்கும், உரையாடும் வாய்ப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்தது. 'புதிய பண்பாட்டு அமைப்பு' சரிநிகர் பத்திரிகையுடன் இணைந்து நடாத்திய இலக்கிய போட்டியின் பரிசளிப்பு விழா, விருதுவழங்கல், கௌரவிப்பு என அமைந்த நிகழ்வு அது.

அந்த நிகழ்வில் விருது வழங்கிகௌரவிக்கப்பட்ட சாதனையாளர்களில் எஸ்.நடேசனும் ஒருவர்.

அந்த விருதுக்கான நினைவுச் சின்னங்களை வடிவமைத்ததில் நானும் ஒருவன். அந்த விழாவில், வெளியீடு செய்யப்பட்ட 'நாடோடி' எனும் இலக்கிய சிறப்பு இதழிலேயே 'மல்லியப்புசந்தி' எனும் எனது கவிதையும் முதன் முதலாக பிரசுரமாகி இருந்தது.

எஸ்.நடேசன், பி.ஏ.காதர் ஆகியோருக்கு அவர்தம் ஆய்வு பணிகளுக் காக 'மார்க் பிரஸ்கேடில்' நினைவாக விருதுகள் வழங்கப்படடன.

அந்தநாட்களில் எஸ்.நடேசன் அவர்களைச் சந்தித்தபோது அவர் மூப்ப டைதலினால் தளர்வுற்றிருந்தார். இதேநிகழ்வில், பகுத்தறிவு பாரம்ரியத் துக்காக இலங்கைத் திராவிட இயக்கச் செயற்பாட்டாளர் ஏ.இளஞ்செழியனும் கௌரவிக்கப்பட்டார்.

இருவரும் வயது முதிர்ந்தவர்கள். ஆனாலும் கொள்கைப்பிடிப்பாளர்கள். இரண்டு மூத்தவர்களிடமும் இருந்த இறுமாப்புடன் கூடிய கொள்கைப் பிடிப்பு அது. இருவரையும் ஒன்றாக தங்கவைப்பது என்றால்..! ஹட்டன் காயத்ரி பதிப்பக உரிமையாளர் ஆ. நந்தகுமார் வீட்டிலேயே அதற்கான ஏற்பாடுகளைச் செய்தோம்.

விழா நடந்த ஹட்டன் இந்து மகா சபை மண்டபத்துக்கும் அவரது இல்லத்துக்குமான தூரம் குறுகியது. விழா நிறைவு பெற்ற பின்னரே இவர்க ளுடன் இளையவர்களான எங்களுக்கு சிறிதுநேரம் பேசமுடிந்தது.

ஏ.இளஞ்செழியனை கொழும்பு முதலாம் குறுக்குத் தெருவில் அமைந்த அவரது அலுவலகத்தில் பல தடைவ சந்தித்துபேசிய அனுபவம் இருந்தது. எஸ்.நடேசனை சந்தித்தது இதுவே முதல் தடவை. பெருங் கோபக்காரரகத் தெரிந்தார அவர். நடப்பதற்கு வசதியாக அவர் கைவசமிருந்த ஊன்று கோல் சில தொழிற்சங்கத் தலைவர்களை அடிப்பதற்கு என்றே வைத்திருப் பதுபோல இருந்தன அவரது வார்த்தைப் பிரயோகங்கள்!

அவரைச் சந்தித்ததன் பின்னர், அவரைப் புரிந்து கொண்டதன் பின்னர் அவரது இந்த நூலைத் திரும்பவும் வாசிக்கத் தோன்றியது. ஆனால், நூல் கிடைக்கவில்லை.

அதற்கு பிறகு பத்து ஆண்டுகள் கழித்து 2011ஆம் ஆண்டு கனடா பயணம் அமைந்தபொழுதொன்றில் தொலைதூர விமான பயணத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிக்கத் தெரிவுசெய்து கொண்ட நூல் இது. நண்பர் ஒருவர் கடுமையான நிபந்தனைகளுடன் இரவலாகத் தந்தார். கனடாசென்று இறங்கியதும் கருணாகரன் (கருண்) என்ற நண்பரை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. எங்கள் சந்திப்பின் அடையாளமாக அவர் எனக்கு பரிசாக அளித்த புத்தகம் History of the Upcountry Tamil People in Sri Lanka. கருணிடம் புத்தகத்தை இரவல் தந்த நண்பரின் நிபந்தனைளைச் சொன்னேன். பெட்டிக்குள் கையை விட்டவர் இன்னொன்றையும் எடுத்துத் தந்தார். நாடு திரும்பியவுடன் நன்றி யுடன் இரவல் பெற்றதைத் திரும்பக் கொடுத்துவிட்டேன். இரண்டு பதிப்பு களுக்கும் அட்டையில் ஒரு வித்தியாசம் இருந்தது. ஆனால் இரண்டு பதிப் பிலுமே அட்டையிலும் உள்ளே முதல் பக்கத்திலும் தலைப்பில் ஒரு வித்தியாசம் இருந்தது. முன் அட்டைப்படத்தில் இருந்த In Sri Lanka உள்ளே முதல் பக்கத்தில் இருக்கவில்லை. இது தற்செயலானதா? அல்லது திட்ட மிடப்பட்டதா? எனத் தெரியவில்லை. வெளியீட்டாளர்களே விளக்க வேண்டும்.

இப்படி கனடாவில் தேங்கிக் கிடக்கும் மலையக வரலாற்று நூலை வெளியிட்டவர்கள் ஹட்டனைத் தளமாகக் கொண்ட 'நந்தலாலா' இலக்கிய வட்டத்தினர். வெளியீட்டாளர்கள் நன்றி தெரிவித்து இருப்போர் வரிசையில் சி.ராதாகிருஸ்ணன் என்பவர் கனடாவில் வாழ்பவர். அதனால் அங்கு கிடைக்கக் கூடியதாக இருந்திருக்கலாம். அந்த நூல் ஒன்றுக்கு இரண்டு கையில் கிடைத்ததோடு நானும் இரவல் கொடுக்க ஆரம்பித்து இன்று என்வசம் ஒருபிரதி கூட இல்லாமல் போய்விட்டது. இரவல் கொடுக்கும் போது எனது நண்பர் விதித்த நிபந்தனைகளின் நியாயம் இப்போது புரிகிறது. இன்று PDFல் வாசித்து எழுதும் அறிமுகக் குறிப்பு இது.

நூலாசிரியர் எஸ்.நடேசன் இளமை நாட்களிலேயே லன்டனுக்கு படிக்கப் போனவர். அதற்குரிய வசதிகள் நிறைந்த குடும்பத்தைச் சேர்ந்தவர். முன்னாள் ராஜாங்க அமைச்சர் பி.பி.தேவராஜும் கூட இப்படித்தான். இவர் களின் லன்டன் கல்விப்பயணம் குறித்து தனியாக பேசலாம்.

எஸ்.நடேசன் இலங்கைக் கொமியூனிஸ்ட் கட்சி செயற்பாட்டாளர். அதனோடு இணைந்த ஐக்கிய பெருந்தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராகவும் செயற்பட்டவர்.

"நடேசன், பெருந்தோட்ட முறைமையின் கணிசமான வரலாற்றை பதிவு செய்துள்ளார். இதே துறையில் செய்யப்பட்ட ஏனைய ஆய்வுகளில் இருந்து இந்த நூல் வேறுபாடான அம்சங்களைக்கொண்டது. அதற்கு எமது சமூகத்தில் உள்ள வேறுபட்ட வர்க்கத்தினர் கொண்டுள்ள வேறுபட்ட பார்வைக் கோணங்கள் காரணமாக இருக்கலாம்" எனக் குறிக்கின்றார். நந்தலாலா வெளியீட்டகத்துக்காக குறிப்பு ஒன்றை எழுதி இருக்கும் எஸ்.ஜோதிகுமார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெருந்தோட்டத் தொழிலாளர்களை பெரும்பான்மையாகக் கொண்ட இலங்கையில் வாழும் இந்தியர்களின் வரலாற்றை எழுதுவதற்காக, பிரிட்டிஸ் அருங்காட்சியக வாசிகசாலை முதலாக பல்வேறு நூலகங்களில் இருந்து தேடி எடுத்த பல பத்திரிகைத் துணுக்குகளை, குறிப்புகளை நான் சேகரித்து வைத்து இருந்தேன். 1983இன் வன்முறைகளில் அவை அழிந்துபோயின. அது எனக்குள் பெரும் தாக்கத்தை எற்படுத்திய போதும் அந்த வரலாற்றை எழுத முனைகின்றேன்" என்று எழுத ஆரம்பிக்கிறார் எஸ்.நடேசன்.

"கண்டியைத் தளமாகக் கொண்டு இயங்கிய 'சத்யோதய' நிலையத் துடனான தொடர்புகள் சுமார் மூன்றாண்டு காலத்தில் இந்த ஆய்வினை எழுதி நூலாக்க எனக்கு உதவியது. சமகாலத்தில் தொழிறசங்க பணி களிலும் சுறுசுறுப்பாக ஈடுபட்டவாறே! அதற்காக சத்யோதய நிலையத் துக்கும் அதன் இயக்குனர் அருட்பணி Fr. போல் கஸ்பர்ஸ் அவர்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். அதேபோல கலாநிதி குமாரி ஜயவர்தன அவர்களுக்கும் நன்றி தெரிவிக்க வேண்டும். வெளியீடு செய்யும் ஜோதிகுமார் உள்ளிட்ட நண்பர்களுக்கும் நன்றி கூறவேண்டும்" என பட்டியலிடும் நூலாசிரியர் நடேசன், தனது முன்னுரையை இவ்வாறு நிறைவுசெய்கிறார்:

"...இலங்கைவாழ் இந்தியர்களின் வரலாற்றை எழுதுவதில் என்னாலான சிறு பங்களிப்பை வழங்கியுள்ளேன்".

அவர் சிறுபங்களிப்பு எனஅடக்கமாக கூறினாலும் இந்த நூல் மலையக மக்களின் வரலாற்றைத் திரட்டித் தருவதில் பெரும் பங்களிப்பு செய்துள்ளது என்பதே சரியானது. நூலாசிரியருக்கும் வெளியீட்டாளர்களுக்கும் அதற்குரிய கௌரவம் வரலாற்றில் கிடைக்கப்பெறும்.

இலங்கையில் தொழிலாளர் வர்க்கச் சுரண்டல் மற்றும் அவர்களது அரசியல் பொருளாதார உரிமைகள் தொடர்பானதுமான முதன்மையான ஆய்வும் பங்களிப்புமாக நடேசன் அவர்களது இந்த நூல் அமையப் பெற்றுள்ளது என விதந்தரைத்து ஒரு குறிப்பினைத் தந்துள்ளார் கலாநிதி. குமாரி ஜயவர்தன:

"இலங்கை வரலாற்றில் வாசிக்கப்பட வேண்டிய இந்த நூல் பொதுவான வாசகர்களுக்கும் விசேட தேவைகருதிய வாசகர்களுக்குமானது..." என்றும் எழுதுகிறார். "... இந்த நூல் தமிழுக்கும் சிங்களத்துக்கும் மொழிபெயர்ப்புச் செய்யப்பட வேண்டும். என்பதுடன் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பொருளாதார நீதிக்கானதும் சமூகமாற்றத்துக்குமானபோராட்டங்கள் பரவலாக அறியச் செய்யப்படுதல் வேண்டும்..." என்றும் எழுதுகிறார் கலாநிதி குமாரி ஜயவர்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது இந்த வேண்டுகோளை வாசித்ததாலோ என்னவோ தமிழ் நாட்டில் ஒரு பதிப்பக நண்பர் மொழி பெயர்த்து வெளியிட மலையக நூல் ஒன்றை பரிந்துரைக்கக் கேட்டபோது இந்த நூலையே பரிந்துரைத்தேன்.

மொத்தமாக 361 பக்கங்களைக் கொண்ட இந்த நூல் 18 அத்தியாயங் களைக் கொண்டது. இலங்கையும் பிரித்தானியாவும், இந்தியாவில் பிரித் தானிய ஆட்சியும் இந்திய சந்தை உருவாக்கமும், கோப்பிப் பெருந் தோட் டமும் இந்தியதொழிலாளர் ஆட்சேர்ப்பும், பெருந்தோட்டப் பொருளாதா ரத்தின் முன்னேற்றமும் குடிவரவுத் தொழிலாளர்களும், ஒழுங்கமைக்கப் பட்ட குடிவரவும் கூலி வணிகத்துக்கு எதிரான மக்கள் போராட்டமும், அரசிய லைமைப்பு மறுசீரமைப்பும் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் குடியுரி மையும் என முதல் ஆறு அத்தியாயங்களும் அமைய, பெரும் எழுச்சி, துரைமார் ராஜ்ஜியத்துக்கு எதிரான கிளர்ச்சியும் தொழிற் சங்கங்களும், தாயகம் திரும்புதலும் தோட்டத் தொழிலாளர்களின் இயலாமையும் இந்திய இலங்கைப் பிரச்சினையும், சுதந்திரமும் பிரஜாவுரிமைச் சட்டமும், இலட்சக்கணக்கான நாடற்றோர், பிரிக்கப்பட்ட மக்கள் என அடுத்த ஆறு அத்தியாயங்களும் அமைய, ஐக்கிய முன்னணி அரசாங்கமும் பெருந் தோட்டத் தொழிலாளர்களின் அவல நிலையும், பெருந்தோட்டத் தொழிலா ளர்களின் போராட்டங்கள்: 1945 முதல் 1973 வரை, ஜயவர்தனஆட்சி: இன வன்முறையும் மலையகத்தமிழர்களும், தோட்டப் பாடசாலைகள்: பிரச்சி னைகளும் முன்னேற்றங்களும், தோட்டத் தொழிலாளர்களின் ஒன்றி ணைந்த வேலை நிறுத்தப்போராட்டங்கள், பிரஜாவுரிமைக்கான போராட் டங்களும் தேர்தல்களும் என இறுதி ஆறு அத்தியாயங்களுமாக 18 அத்தி யாயங்கள் உள்ளடக்கம் பெறுகின்றன.

"இறுதியாக" என குறிப்பிட்டு நூலாசிரியர் 351ஆவது பக்கத்தில் குறிப் பிடும் ஒரு பந்தி இன்றைய திகதிக்கும் பொருத்தமானது.

"மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தமது வாழ்வாதாரத் துக்காக பெருந்தோட்டங்களில் தங்கியிருப்பதானது, அவர்களது எதிர்கால அபிவிருத்திகளுக்கும் எண்ணப்பாடுகளுக்கும் ஆபத்தானது. அவர்களின் நல்வாழ்வையும் முன்னேற்றத்தையும் உறுதி செய்ய மாற்று வருமான மூலங்களும் தொழில் வாய்ப்புகளும் உருவாக்கப்படுதல் அவசியம்" என்கிறார் நூலாசிரியர் சிதம்பரம் நடேசன்.

மூன்று தசாப்த காலத்தில் மூன்றாவது தடவையாக வாசிக்கும்போது கூட வரலாற்றின் பல புதிய சாளரங்களைத் திறந்துவிடும் இந்த வரலாற்று ஆய்வு நூலை மலையக ஆர்வலர்கள் ஒரு தடவையேனும் வாசிக்காது விட்டால் அது குற்றமாகிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கட்டியக்காரனின் பேரிகை

20

DRUM OF A HERALD
Collection of article

சி. ஜெயசங்கரின் கட்டுரை முழக்கம்

இலங்கையின் அரங்கவியல் துறையில் நிமிர்ந்து நிற்கும் ஆளுமைகளில் ஒருவர் கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட்ட விரிவுரையாளர் சிவஞானம் ஜெயசங்கர். கலையைக் கற்றுக்கொடுப்பவர் மட்டுமல்ல கலைகொண்டு களமாடுபவர் அவர் என அவரைக் கண்டதுமே புரிந்து கொள்ளமுடியும். கலைஞனுக்குரிய கம்பீரமும் நடையுடையும் ஆணித்தரமும் கொண்ட ஆளுமை. இத்தகைய பண்புகளோடு சிங்கள கலையுலகில், அரங்கவியல் துறையில் பல ஆளுமைகளைக் காணக்கிடைக்கும். அவர்களைப் பார்த்தவுடன் இவர் ஒரு 'கலா(க்)கருவா'வாக இருக்கலாம் என்ற உணர்வு வந்துவிடுவது இயல்பு. (இன்றைய மலையக அரங்கவியல் துறையில் காளிதாஸ், லோகானந்தன் போன்றவர்களிடத்தில் இந்த உடல்மொழி வெளிப்பாட்டினை அவதானிக்க முடியும்) இவ்வாறானவர்கள் இலங்கைத் தமிழ்க் கலை, அரங்கவியல் துறையில் இல்லை என்பதல்ல, அரிது என்பதே புரிதல்.

யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்து அங்கேயே கல்வி கற்று யாழ் பல்கலைக் கழகத்தில் நாடகமும் அரங்கியலும் துறையில் பட்டம் பெற்று அங்கேயே தற்காலிக விரிவுரையாளராகவும் பணியாற்றியவர் சி.ஜெயசங்கர். இப்போது மட்டக்களப்பில் அமைந்துள்ள கிழக்கு பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கியலும் துறையில் சிரேஷ்ட்ட விரிவுரையாளராக பணியாற்றுகிறார். இது நூலாசிரியர் பற்றிய அறிமுகம் என்றால், இனி அவரது நூல் பற்றிய அறிமுகமும் பிறவும்.

2008 ஆம் ஆண்டு மூன்றாவது கண் அமைப்பின் வெளியீடாக வந்துள்ள நூல் 'Drum of a Herald'. இங்கே 'Drum' என்பதற்கும் 'Herald' என்ப தற்கும் பல தமிழ்ச்சொற்களை அடையாளம் காணமுடியுமாக உள்ள போதும் நூலாசிரியர் கூற வரும் செய்திகளின் அடிப்படையில் 'ஒரு கட்டியக்காரனின் பேரிகை' என தமிழாக்கம் செய்து கொள்கிறேன். இங்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி.ஜெயசங்கரைக் கட்டியக்காரனாகவும் அவரது எழுத்துக்களையே பேரிகையாகவும் என்னால் காணமுடிவதால் 'சி.ஜெயசங்கரின் கட்டுரை முழக்கம்' என உப தலைப்பும் இட்டுக் கொள்கிறேன்.

88 பக்கங்களுக்குள் இத்தனை விடயங்களை விரிவாகவும் விளக்கமாகவும் பேச முடியுமா எனும் ஆச்சரியத்தை ஏற்படுத்துவது இந்தக் கையேடு போன்ற அளவினை உடைய நூல். "மறுக்கப்படுவதும் ஓரங்கட்டப்படுவதற்குமான எதிர்வினையாக எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பாக அமையப் பெறுகிறது இந்த நூல்" என்கிறார் நூலாசிரியர். "2000-2008 காலப்பகுதியில் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இந்தக் கட்டுரைகளின் தொகுப்பு இலங்கைத் தமிழ்ச்சூழலில் மக்கள் எவ்வாறு உள்ளக, வெளியக மறுப்புக்கும் ஓரங்கட்டலுக்கும் உள்ளாகின்றனர் என்பதை வெளிப்படுத்தவதாக உள்ளது" என்றும் குறிக்கிறார். "இந்தக் கட்டுரைகள் யாரையும் குறை கூறுவதோ, யாருக்கும் சவால்விடுவதோ கூட இல்லை. ஆனால், தடைகளையும் எல்லைகளையும் கடந்து செல்லவேண்டிய கவனத்தைப் பெறுவதும் எச்சரிக்கை உணர்வை ஏற்படுத்துவதும் அவசியம்" என்றும் எழுதுகிறார். "இது குறித்த தமது வகிபாகம் எதுவென்பதை கலைஞர்களும், புலமையாளர்களும் அர்ப்பணிப்புடனும் மனசாட்சியுடனும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்" எனவும் தனது முன்னுரையில் வலியுறுத்துகிறார் நூலாசிரியர்.

அவர் கூறும் அந்த அர்ப்பணிப்பையும் மனசாட்சியையும் அவரிடத்தில் தரிசித்த பல சந்தர்ப்பங்கள் உண்டு.

புதிய பண்பாட்டு அமைப்பு 2000ஆம் ஆண்டளவில் நடாத்திய மலையக நாடகவிழாவிலேயே இவரை நேரடியாக சந்தித்ததாக நினைவு (கட்டுரையாளர்). இந்த விழாவில் மலையக்க் கலை பண்பாட்டு ஆளுமை குமார ராமநாதன் (பண்டாரவளை) அவர்களின் முழுமையான பங்களிப்பு இருந்தமை இன்றும் நினைவில் நிழலாடுகிறது. அதே போல 2002ஆம் ஆண்டு புதிய பண்பாட்டு அமைப்பு ஹட்டனில் நடாத்திய விழாவிலும் இவரது ஆலோசனைகள் இருந்தன. அன்றைய தினம் வெளியிடப்பட்ட 'நாடோடிகள்' சஞ்சிகையின் அட்டைப்பட ஓவியத்தை வரைந்தவர் கமலா வாசுகி. (அந்த இதழிலேயே மல்லியப்புசந்தி கவிதை முதலில் வெளியானது என ஏற்கனவே குறிப்பிட்ட நினைவு). அதே கமலா வாசுகிதான் இந்த கட்டியக்காரனின் பேரிகைக்கும் (Drum of a Herald) அட்டைப்படம் வரைந் துள்ளார். அந்த ஓவியத்தில் தோன்றுவதுபோல் இவர்கள் இருவரும் கலைத் தம்பதிகள்.

மலையகத்துடனான இவர்களது உறவும் தொடர்பாடலும் புதிய பண்பாட்டு அமைப்போடு மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கவில்லை. அதனையும் தாண்டி அங்கே பல இளம் கலைஞர்களை புடம்போடுவதாக ஊக்குவிப்பதாக அமைந்தது. கிழக்குப் பலைகலைக்கழகத்துக்குள் மலையகக் கலைகளையும் மாணவர்களையும் உள்வாங்கிக் கொள்வதிலும் மலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யகக் கலைகளை அரங்கேற்றுவதிலும் இந்த அர்ப்பணிப்பும் மனசாட்சியும் இருந்தது, இருக்கிறது எனலாம்.

மலையகப் பல்கலைக்கழகம் குறித்த உரையாடல் இடம்பெறும் போதெல்லாம் கட்டுரையாளருக்கு தொலைபேசி அழைப்பெடுக்கும் நூலாசிரியர் சி. ஜெயசங்கர், அமையவேண்டியது 'மலையகத்தில்' ஒரு பல்கலைக்கழகம் அல்ல. அது 'மலையகத்தின்' பல்கலைக்கழகமாக இருக்க வேண்டும் என்பதை வலியுத்திக் கூறி வருவதை இங்கே நினைவு படுத்த வேண்டியுள்ளது.

மலையகப் பல்கலைக்கழகம் இப்போது அரசியல்தளத்தில் பேசு பொருளாகி இருப்பது வரவேற்கத்தக்கது. அது அமையப் பெறவுள்ள இடம் கூட இப்போது தீர்மானமாகிவிட்டதாக, இன்றைய திகதியில் அந்த கருத் தியல் கவனத்துக்கு தலைமை கொடுக்கும் முன்னாள் ராஜாங்க அமைச்சர் பி.பி.தேவராஜ் கட்டுரையாளரிடம் தகவல் பகிர்ந்து கொண்டுள்ளார். அப்படி யாயின் அது வரவேற்கத்தக்கது.

அவ்வாறு அமையப்பெறும் பல்கலைக்கழகக் 'கட்டடம்' மலையக மாவட்டம் ஒன்றில் அதுவும் நுவரெலியாவில் அமைந்து விடுவதனால் மாத் திரம் அது மலையகப் பல்கலைக்கழகம் ஆகிவிடாது. ஏனெனில், மலையக மாவட்டங் களான பதுளை, இரத்தினபுரி மாவட்டங்களில் ஊவா வெல் லஸ்ஸ, சப்ரக முவை ஆகிய பல்கலைக்கழகங்கள் அமையப்பெற்ற போதும் அவற்றை மலையகப் பல்கலைக்கழகமாக உணரமுடியாமலேயே உள்ளது.

அதேபோல நுவரெலியா மாவட்டத்தில் அமையப் பெற்றுள்ள ஸ்ரீ பாத கல்வியியல் கல்லூரி பெற்றுக் கொண்டுள்ள குறைந்தபட்சமான மலைய கத்துக்கான கல்வியியல் கல்லூரி எனும் உணர்வைத்தானும் இரத்தினபுரி - கஹவத்தையில் அமைந்துள்ள ருவன்புர கல்வியியல் கல்லூரி கொண்டி ருக்கவில்லை என்பது நிதர்ஷனம்.

அதேநேரம் ரம்பொடையில் அமைந்துள்ள 'சௌமியமூரத்தி தொண்ட மான் கவின் கலை நிலையம்' எவ்வித கலை உணர்வும், கல்வி உணர்வும் இன்றி கல்யாண மண்டப கட்டடமாக மாத்திரம் காட்சி அளிப்பதையும் மறுப்பதற்கில்லை. அந்த கட்டட உடலுக்கு உயிர்கொடுக்க கிழக்கு பல்கலைக்கழகத்துடன் இணைந்து எடுத்த முயற்சிகளில் கட்டுரையாளரின் எண்ணப்பாடு என்னவாக இருந்தது என்பதையும் நூலாசிரியர் அறிவார். அதன் நிர்வாகப் பொறுப்பில் இருந்த பி.கே. சிவஞானமும் அறிவார். மலை யகத்துக்கென அமைந்த அந்த கவின் கலை நிலையம், மலையக (நுவரெலியா) மாவட்டத்தில் மட்டுமல்ல மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு சமுதாய அபிவிருத்தி அமைச்சு எனும் அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சின் அதிகாரத்தின் கீழ் இருந்தபோது உயிர்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்துக் கொள்ள முடியாது போனால், இனி ராஜாங்க அமைச்சின் ஊடே எந்தளவு சாத்தியப்படும் என்பது கேள்விக்குறி! ஏதேனும் நடந்தால் சந்தோஷப்படலாம். அரசியல் என்பது அதிகாரத்தின்பாற்பட்டது மட்டுமல்ல, உணர்வின்பாற்பட்டதாகவும் இருத்தல் வேண்டும். அப்படி இருந்திருந்தால் அந்த நிலையம் உயிர்பெற்று இருக்கும். இந்த நூலாசிரியர் கூறும் அர்பணிப்பும் மனசாட்சியும் இயங்காத தருணங்கள் அவை.

நூலாசிரியர் இந்த நூலில் கூறவருவதே குறிப்பிட்ட சமூகத்தின் கலை களே அந்த சமூகத்துக்கான பல்கலைக் கழகம் என்பது. இன்றும் கூட மலையகத்தில் பல்கலைக்கழகம் இருந்து கொண்டுதான் இருக்கிறது. அது மலையக கலை இலக்கிய செயற்பாட்டுக்குள் மெய்நிகராக (Virtual) இயங்கிக் கொண்டுதான் இருக்கிறது. அதனை வளர்த்துப் பேணிப் பாது காக்கவும், மேலும் ஆய்வுகளைச் செய்யவும், முறைமைப்படுத்தவும் அடுத்த தலைமுறைக்கு ஊடுகடத்தவும் 'மலையகத்தின்' பல்கலைக்கழகம் அவசியம்.

அது வடக்குத் தமிழ் மக்களுக்கு யாழ்ப்பாணத்திலும், கிழக்குத் தமிழ் மக்களுக்கு மட்டக்களப்பிலும், முஸ்லிம் மக்களுக்கு தென்கிழக்கிலும், சிங்கள மக்களுக்கு களனியிலும் கொழும்பிலும் (சௌந்தர்ய) இன்னும் பல பல்கலைக்கழகங்களிலும் அமையப் பெற்றதுபொல மலையகத் தமிழ் மக்களது கலையை, கலாசாரத்தை, இலக்கியத்தை, பண்பாட்டு அம்சங் களை, மொழியை, வாழ்வியலை, வரலாற்றை, பொருளாதாரத்தை, எதிர் காலத்தை வளப்படுத்துவதாக, ஆய்வு செய்வதாக, அபிவிருத்தி செய்வதாக 'மலையகப் பல்கலைக்கழகமாக' அமைதல் வேண்டும்.

ஏனைய பல்கலைக்கழகங்கள்போல கலையும் வணிகமும் விஞ்ஞான மும் கற்பிக்கும் பல்கலைக்கழகமெனில் நாம் பேராதனையுடன் பெருமை பட்டுக் கொண்டு பேசாமல் இருந்துவிடலாம். ஏனெனில் அது அமையப் பெற்றிருப்பதும் மலையக மாவட்டத்தில்தான். அதுவும் தேயிலைத் தோட் டத்தை அண்மித்தே.

இந்த நூலில் மொத்தமாக 12 அத்தியாயங்கள் உள்ளன. அவை வேறு பட்ட காலங்களில் வேறுபட்ட தலைப்புகளில் ஆங்கிலத்தில் எழுதப் பட்டவை. ஆங்கிலத்தில் எழுதப்படுவதன் அவசியத்தை ஆங்காங்கே இந்த நூலில் வலியுறுத்தி உள்ளார். பல்கலைக்கழக பட்டப்படிப்பு ஆய்வறிக் கைத் தேவைகளின்போது ஆங்கிலமொழியில் எழுதி சமர்ப்பிக்கும் புலமையாளர்களும் கல்வியாளர்களும் ஆங்கிலத்தில் ஆக்க இலக்கியம் செய்வதில்லை. ஏனெனில் அதற்காக அவர்களுக்கு புள்ளிகள் கிடைப்ப தில்லை என தனது விமரசனத்தை முன்வைக்கிறார். இது காத்திரமான விமர்சனமும் கூட. அதுவே ஆய்வு நிறுவனங்களுக்கான அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான ஆய்வறிக்கையாக இருந்தால் அவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்ப்பார்ப்பை நிறைவேற்றும் வகையிலான அறிக்கையிடலை புள்ளிக ளுக்காக அல்லாது வேறு எதிர்பார்ப்புகளுடன் வழங்கும் புலமையாளர் களும் உளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் தமிழர்களின் ஆங்கில ஆக்க இலக்கிய படைப்பா ளிகளை வரிசைப்படுத்தும்போது சி.வி.வேலுப்பிள்ளையையும், மொழி பெயர்ப்பு இலக்கியத்தின்போது கே.கணேஷையும் முன்னிலைப்படுத்தி எழுத நூலாசிரியர் தவறவில்லை. அதேபோல இன்னும் பல ஆளுமைகள் குறித்த பதிவுகள் நூலில் பரவலாக இடம்பெற்றுள்ளன.

இலங்கைத் தமிழர்கள் ஆங்கிலத்தில் எழுதும் மரபை விருத்தி செய்வதில் உள்ள முக்கியத்துவத்தையும் சவால்களையும் அடையாளம் காணுதல் எனும் 7வது அத்தியாயத்தின் 57வது பக்கத்தில் உள்ள சுவாரஷ் யமான ஒரு செய்தி இங்கே குறிப்பிடத்தக்கது.

அப்போதைய பிரதமரான சிறிமா பண்டாரநாயக்கவுக்கும் பொது நலவாய நாடுகளின் செயலாளர் நாயகம் ரீதத் ராம்பல்க்கும் இடையிலான உரையாடல் ஒன்றினை மேற்கோள் காட்டி உள்ளார்.

ரீதத் ராம்பல்: 1975இல் பொதுநலவாய நாடுகளின் செயலாளரானதை உடனடுத்து இலங்கை பிரதமர் சிறிமா பண்டாரநாயக்கவைச் சந்தித்த போது எமது செயலகம் உங்கள் நாட்டுக்கு எப்படி உதவலாம் எனக் கேட்டேன். அதற்கான அவரது பதில் துரிதமானதும் துல்லியமானதுமாக இருந்தது. "எங்களது ஆசிரியர்களுக்கு ஒரு வெளிநாட்டு மொழியாக ஆங்கிலத்தை பயிற்றுவிக்க ஆட்களை அனுப்புங்கள்" என சிறிமாவோ கேட்டு உள்ளார்.

சிறிமாவோவின் கணவர் பண்டாரநாயக்க இருபதாண்டுகளுக்கு (1956) முன்னர் கொண்டுவந்த சிங்களம் மட்டும் கொள்கையின் விளைவுகளில் இருந்து சிறிமாவுக்கு இந்த எண்ணம் தோன்றி இருப்பது இங்கு அவதா னத்துக்கு உரியது.

தனது ஆசானும் நண்பரும் என குறிப்பிட்டு எஸ்.ராஜசிங்கம் அவர்க ளுக்கு இந்த நூல் சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

13 அத்தியாயங்களைக் கொண்ட இந்த நூல் அறிமுகம், வடமோடி கூத்தும் மட்டக்களப்பு சமூக அரங்கியலை மீளமைத்தலும், கூத்து வெறுமனே ஒரு செயலாற்றுகை மட்டுமல்ல அது ஒரு சமூகத்தின் கலை, ஏகாதிபத்தியத்தின் பார்வையிலான ஆய்வுகள், சிக்கலான விடயங்களை ஆய்வு செயவற்கான எளிமையான வரைவிலக்கணங்களை கையாளுதல், கிடைத்தகு இடைவெளிகளில் இருந்து நவீன கலைகளின் ஊடே ஒடுக்கப் படுதலுக்கு எதிராக பேசுதல், இன்றைய இலங்கையில் தமிழ் மொழியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்பாட்டு பார்வையை நோக்குதல்: ஓர் அரங்கியல் பார்வை, இலங்கைத் தமிழர்கள் ஆங்கிலத்தில் எழுதும் மரபை விருத்தி செய்வதில் உள்ள முக்கியத்துவத்தையும் சவால்களையும் அடையாளம் காணுதல், அரச உதவி இன்றி பூகோள அறிவுக்காக தமிழர்கள் இணைய மொழிபெயர்ப்பில் தங்கியிருத்தல், பால்நிலை: பெண்களுக்கு எதிரான வன்முறை - சுதந்திரத் துக்காக போராடும் சமூகத்தைப் புரிதல், இலங்கையின் மரபு சார் கூத்தில் பறை அறைவோனுடன் (Herald) இசைந்தாடல் போன்ற அத்தியாயங் களுடன் தமிழர்களின் வியத்தகு ஆளுமைகளான ஏ.ஜே.கனகரத்னா, பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை ஆகிய ஆளுமைகள் பற்றிய பதிவுகளும் உள்ளடங்குகின்றன.

நூலின் இறுதிப் பக்கத்தில் கட்டமிடப்பட்ட செய்தியாக மலையகத் தமிழர்களின் பாரம்பரிய இசைக்கருவியான 'தப்பு' பற்றிய ஒரு குறிப்பையும் இணைத்துள்ளார்.அதில் 'தப்பு' மலையகத்தில் அருகிவரும் கலை என்றும் அது ஒடுக்கப்பட்டோர் கலையாக அடையாளப்படுத்தப்படுவதனால் அதில் வெளிப்பாட்டுடன் ஈடுபட பலர் தயங்குவதாகவும் கூறுகிறார். அதேநேரம் வணிக உலகத்தில் இலத்திரணியல் ஊடக கலாசாரத்தினால் பிளவுண்டி ருக்கும் சமூகத்தை மீளமைக்கவும் இணைப்பை ஏற்படுத்தவும் அது ஒரு முக்கியமான கலை என்பதையும் மக்கள் அறிவார்கள் என்றும் குறிப்பிடு கிறார்.

'தப்பு' அடிப்போரும் Herald என்றே ஆங்கிலத்தில் அழைக்கப்படுகின் றனர். ஈராக நூலின் பின்னட்டைப்படத்தில்

நமது அறிவில் தங்கியிருப்போம்,
நமது திறமையில் தங்கியிருப்போம்,
நமது நிலத்தில் விதைப்போம்,
நமது அறுவடையில் வாழ்வோம்,
நம்மைக் கட்டுப்படுத்தும் வாழ்க்கை முறையில் இருந்து மீள்வோம்
சூழலுடன் நல்லிணக்கத்துடன் வாழ
நம்மை நாம் புதுப்பித்துக் கொள்வோம்

எனும் பொருள்படும் சி. ஜெயசங்கரின் கவிதையுடன் (ஆங்கில மொழி யாக்கம் எஸ்.எம்.பீலிக்ஸ்) நூல் முழுமை பெறுகிறது.

இந்த நூல் பற்றி இன்னும் பேசலாம்.

இது ஓர் அறிமுகக் குறிப்பு மாத்திரமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org